



முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஊமையின் ராகம்...

1

சிவா என்ற சிவ கைலாசம் தன் மனதில் எழுந்த கோபத்தை வெளிக் காட்ட முடியாமல் -

"சட்..." என்று வாய்விட்டு அலுத்துக் கொண்டான்...

அந்த வார்த்தையை அவன் வேகமாகச் சொன்னவுடன் அவன் அருகில் அமர்ந்து பின்னலை முன்னால் போட்டு.. அதன் நுனியை விரல்களால் ஆராய்ந்தவாறு தலை குனிந்து அமர்ந்திருந்த உமாவின் உடல் தூக்கிப் போட்டது..

அதைப் பார்த்தும் தன் கோபத்தை அடக்கிச் கொண்டவனாய் அவளைப் பார்வையால் முறைத்தான் சிவா...

அந்தப் பார்வையின் வேகம் தாளாதவளாய்த் தலை குனிந்து கொண்ட உமாவின் இமையோரம் நீர் முத்து அரும்பியது...

'இவள் ஏன் இப்படியிருக்கிறாள்..' என்று இருந்தது சிவாவிற்கு...

நினைவு தெரிந்த நாளில் இருந்து இவள் மேல் ஆசை கொண்டதற்குப் பலன் இதுதானா...? இவளுக்காக... இவளை அடைவதற்காக... அவன் பட்ட பாடுதான் எத்தனை...! அவை அத்தனையும் விழலுக்கு இறைத்த நீரா...?

"உமா..." அவன் கடுமையாக அழைத்தான்..

"ம்ம்ம்... அவள் லேசாகப் பார்வையை உயர்த்தினாள்.."

"பேசு... பேசத்தானே இங்கே வந்திருக்கிறோம்... வாய் விட்டுப் பேசாமல் இப்படி மௌனமாய்த் தலையைக் தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தால் என்ன அர்த்தம்...?"

"நான் சாமி கும்பிடத்தான் வந்தேன், அத்தான்..."

அவனுக்கு அவளின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுர்ரென்று தலைக்கு ஏறியது...

அவர்கள் அமர்ந்திருந்தது அஷ்டலட்சுமி கோவிலின் அருகே இருந்த கடற்கரையில்தான்... அலைகள் கொஞ்சம் கடலோரமாக இருந்த அஷ்டலட்சமி கோவிலுக்கு அவள் வெள்ளிக் கிழமை தோறும் மகாலட்சுமியைத் தரிசனம் பண்ண வருவதும் உண்மைதான்... அன்றும் அவள் அப்படித்தான் வந்திருந்தாள் என்பதும் பொய்யில்லைதான்..

ஆனால் அவன் அவளைச் சந்திக்கத்தான் அங்கு வந்திருந்தான். அவளைப் பார்க்க விரும்பி அவன் அவளுக்கு போன் செய்தபோது, அவள் மிகவும் தயங்கினாள்... மனதிற்குள் எரிச்சலுற்ற சிவா தானாகத்தான் இந்தச் சந்திப்பை உறுதி செய்தான்... அவளை போனில் அழைத்து,

"நீ வெள்ளிக் கிழமை அஷ்டலட்சுமி கோவிலுக்குச் சாமி கும்பிடப் போவாய்தானே...?" என்று கேட்டான்.

"ஆமாம்.."

"அங்கே பக்கத்தில் கடல் இருக்கிறதில்லையா..?"

"ஆமாம்..."

"அங்கே நீ வந்து விடு..."

"எதற்கு...?"

"வேறு எதற்கு...? இரண்டு பேரும் ஒன்றாகப் போய்க் கடலில் விழுவதற்காகத்தான்... வருகிறாயா?"

அவள் மறு முனையில் மௌனமாக இருந்தாள்..

'பேசித் தொலைய மாட்டாள்..' எரிச்சலுடன் அவனே பேசினான்.

"என்ன... போய் விழுகலாமா...?"

"நீங்கள் என்னதான் சொல்ல வருகிறீங்க..."

"கடலுக்குப் பக்கத்தில் என்ன இருக்கும்...?"

"தெரியவில்லையே..."

அவளுடைய அறியாமைமயை நினைத்து அவனுக்கு ஒரு கணம் சிரிப்பு வந்துவிட்டது.

"கடலுக்குப் பக்கத்தில் கடற்கரை இருக்கும்... இது கூடத் தெரியாத மக்காடி நீ...?"

மறு முனையில் அவள் உதடுகடிப்பது இங்கே அவனது மனக் கண்ணில் தெரிந்தது... அவன் மனம் அவளது காதல் வார்த்தையை நாடித் தவித்தது.. அவள் மறுபடியும் மௌனமாகி விட்டாள்...

"உமா..."

"ம்ம்ம்..."

"நேரே பேசும்போது நீ மௌனமாகி விட்டால் நான் நேரம் ஓடுவதைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன்... நீ வாய் திறந்து பேசும்வரை பொறுமையாய்க் காத்திருப்பேன்... ஆனா இப்ப நான் உன்னிடம் செல்போனில் பேசிக் கொண்டிருக்கிறேன்டி... இப்ப நீ மௌனமாக இருந்தால் என் செல்போனில் நேரம்தான் ஓடும்.. நீ பேச... நான் கேட்டு.. எவ்வளவு நேரம் போ நான் அதைப் பற்றி கவலைப்படவே மாட்டேன்... ஆனால் நீ மௌனமாக இருக்க... நான் சும்மா இருப்பது புத்திசாலித்தனமா...?

நீயே சொல்லு..."

"நான் போனை கட் பண்ணி விடவா அத்தான்...?"

இப்படிப் பேசுபவளின் கன்னத்தில் இரண்டு அறை விட்டால் என்ன என்று சிவாவிற்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்தது...

'பேசித் தொலைடி... என்றால் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாளே.. வாய் திறந்து இரண்டு வார்த்தை இவள் பேசுவதைக் கேட்க... என் வேலை வெட்டியை யெல்லாம்

விட்டு விட்டு... காதில் போனைப் பிடித்துக் கொண்டு நிற்கிறேன்... கொஞ்சமாவது கருணை காட்டுகிறாளா... பாவி....'

"ஏண்டி நீ என்னைக் கட் பண்ணி விடுவதிலேயே குறியாய் இருக்கிறாயா...? உன் மனதில் அதுதான் எண்ணமா...? அதையாவது சொல்லித் தொலையேன்டி... உனக்காக லோல்பட்டு... இரண்டு குடும்பத்தையும் பகீரதப் பிரயத்தனம் செய்து சேர்ந்து வைத்திருக்கிறேன்... நீயானால் என் உயிரை எடுக்கிறாயே..."

மறுமுனை மீண்டும் மௌனமானது....

"இப்படிப் போனில் பேசினால் வேலைக்கு ஆகாது.. வரும் வெள்ளிக் கிழமை நீ அஷ்டலட்சுமி கோவிலுக்குச் சாமி கும்பிட வருவாய்தானே..."

"ம்ம்ம்..."

"இதைக் கூடச் சத்தமாய்ச் சொல்லமாட்டாயா? சாமி கும்பிட்டுவிட்டுப் பக்கத்தில் இருக்கும் கடற்கரைக்கு வந்து விடுகிறாயா?... இல்லை, நானும் கோவிலுக்குள் சாமி கும்பிட்டு விட்டு உனக்காகக் காத்திருந்து உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு போகவா....?"

"இல்லையில்லை.... நீங்கள் முதலிலேயே சாமி கும்பிட்டுவிட்டுக் கடற்கரைக்குப் போய் விடுங்கள்... நான் அப்புறமாய் வருகிறேன்..."

"ஏன்டி...?"

"கோவிலில் தெரிந்தவர்கள் நிறையப் பேர் இருப்பார்கள்.. யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது...?"

அவனுக்குச் சுள்ளென்று கோபம் வந்துவிட்டது... இவளுக்கு இதேதான் கவலையா...?

"ஏன் பார்த்தால் என்ன...?"

அவள் தன் வழக்கமாய் மௌனித்துவிட... அவன் பல்லைக் கடித்தான்.

"சரி.. சரி.. நான் முதலில் போய்க் கடற்கரையில் காத்திருக்கிறேன்... நீ வந்துவிடு.. வருவாயில்லையா....? இல்லை... அதுவும் ஏமாற்றி விடுவாயா...?"

"ம்ம்... வருகிறேன்..."

"அப்பாடி! பிழைத்தேன்.."

"அத்தான்..."

ஆஹா.. தானாக அழைக்கிறாள்.. சிவா.. கண்மூடி ஒர கணம் அந்த அழைப்பை ரசித்தான்...

"அத்தான்... லைனில் இருக்கீங்களா...?"

"நான் லைன் மாறவே மாட்டேன்.. நீ மாறாமல் இருந்தால் சரி..." அவள் மீண்டும் மௌனித்து விட... அவன் பரபரத்தான்.

"ஏய்ய்... சொல்வதைச் சீக்கரம் சொல்லித் தொலை..."

"கோவிலுக்கு வந்து மறக்காமல் சாமி கும்பிட்டு விட்டு அப்புறமாய்க் கடற்கரைக்கு போங்க..."

அவனுக்குக் கோபம் போய்விட்டது.. அவளின் வார்த்தைகளில் தெரிந்த கவலையும் வேண்டுகோளும்... அவள்பால் அவனை ஈர்த்தன.

உமா என்ற உமாமகேஸ்வரிக்குக் கடவுள் பக்தி அதிகம். எதையும் வாய்விட்டு வெளியில் சொல்லாமல் மனதிலேயே பூட்டி வைத்துக் கொள்பவள்... கடவுளின் முன்னால் மணிக் கணக்கில் கண்மூடி வேண்டிக் கொண்டு நிற்பாள்.

'நீ இருக்கிறாயோ.. இல்லையோ...

அதைப் பற்றிய ஆராய்ச்சி....

எனக்கில்லை... என் இறைவனே...

நான் என்னை நானாக உணர முடிவது...

உன் முன்னிலையில் மட்டும்தான்..

என் ஆழ்மனதின் சோகங்களை..

அறிந்து கொண்டதும் நீதான்...

ஒருபோதும் என்னை நீ கைவிட்டதில்லை..

இந்த மனிதர்களைப் போல....'

ஒருமுறை அவளின் டைரியில் எழுதப்பட்டிருந்த இந்த வரிகளை அவன் படிக்க நேர்ந்தது...

அன்றிலிருந்து இன்றுவரை அவளது மனதில் அவன் இருக்கிறானா... என்று அறிய அவன் துடித்தான்... அவளிடம் பலவிதமாய்ப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான்... ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்வாள்.. இல்லையென்றால் மணிக்கணக்கில் மௌனம் சாதிப்பாள்.. நொந்து போய் அவன் வந்து விடுவான்...

இன்று ஓர் முடிவு தெரிய வேண்டும் என்றுதான் அவளைச் சந்திக்க... அலைகள் கொஞ்சும் அஷ்டலட்சுமி கோவிலின் கடற்கரையோரம் அவன் வந்திருந்தான்...

அவள் சொல்லியிருந்தபடி.. முதலில் கோவிலுக்குள் போய் அஷ்டலட்சுமிகளையும் வணங்கி விட்டு... அவள் வருகிறாளா என்று பார்த்தான்...

கோவில் வாசலில் அவளின் தலை தென்பட்டது.. யாரோ ஒருபெண்மணியுடன் பேசிக் கொண்டே வந்தாள்... அவனைக் கண்டும்... காணாதது போல் கடந்து சென்றாள்.

அவன் மனதிற்குள் புலம்பியபடி கடற்கரையோரம் போய் அமர்ந்து கடல் அலைகளை வெறித்துக் கொண்ருந்தான். ஒரு வழியாய் வந்து சேர்ந்தவள்.. அவன் அருகில் உட்காராமல் தலைப் பின்னலை முன்னே விட்டு.. அதைச் சீண்டியவாறு,

"என்ன அத்தான்..." என்று கேட்டாள்...

"உட்காருடி..." என்றான் அவன், அழுத்தமான குரலில்.

"சீக்கிரம் சொல்லுங்கன்... நான் போக வேண்டும்..."

"அடச் சீ... உட்காரு..."

அவன் அதட்டல் போடவும்.. அவசரமாய் அவன் பக்கத்தில் உட்கார்ந்தவள்... அடிக்கடி பக்கவாட்டிலும்... பின்னாலும் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்..

"என்ன பார்க்கிற..?"

"இல்லை... யாராவது... தெரிந்தவங்க...."

"உன்னை அடித்துத் தூக்கிக் கடலில் போட்டுவிடுவேன்... உன் மனதில் என்னடி நினைத்துக் கொண்டிருக்கிறாய்? யாராவது பார்த்தால்தான் என்ன...? உனக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் கனவு ஏதாவது உன் மனதில் இருக்கிறதா...? இருந்தால் அதையாவது சொல்லித்தொலை... இப்படிப் பேசாமல் முழித்து என் கழுத்தை அறுக்காதே..."

அவள் தலை குனிந்து பின்னலை நோண்ட ஆரம்பித்து விட்டாள்... அவளது இமையோரம் துளிர்த்த நீர் முத்துக்கள்,

'நான் நிற்கவா... இல்லை உதிரவா...?' என்று கேட்டன...

அவன் மனம் இளகியது.. அவளின் தோள் தொட்டு அணைத்து அவளின் கண்ணீரைத் துடைத்து விட வேண்டும் என்று அவன் விரும்பினான்..

ஆனால்... அருகில் இடைவெளி விட்டுத் தள்ளி அமர்ந்து பேசவே இவ்வளவு தூரம் பயப்படுகிறவள்... அவன் விரல் பட்டால் எழுந்து ஓடிவிடுவாள் என்பது புரிந்திருந்ததால் அமைதியானான்.

2

உமா மகேஸ்வரியின் மனம் வருந்தியது.. ஒரு நாளின் இருபத்து நான்குமணி நேரத்தின் ஓவ்வொரு மணித் துளியிலும் எவன் நினைவு அவளது நெஞ்சில் நீந்திக் கொண்டிருக்கிறதோ... அந்த அவன் அவளைப் பார்த்துக் கேட்கிறான்...

'வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொள்ளும் கனவு ஏதாவது உன் மனதில் இருக்கிறதா...' என்று...

இதைவிடக் கொடுமையான கேள்வி ஒன்று இந்த உலகில் இருக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியவில்லையே என்று அவளுக்குத் துக்கமாக இருந்தது...

அவளுக்கு அவனிடம் பேச ஆசைதான்.. வெறும் ஆசையில்லை.. கொள்ளை ஆசை.. அவனின் அருகாமையில் அமர்ந்திருக்கும் இந்த நேரத்தின் ஒவ்வொரு நொடியையும் ரசித்து அனுபவித்தாள் அவள்.. இந்த நிகழ்வை அவள் மனதில் பூட்டி வைத்து... மீண்டும்... மீண்டும் இதை நினைத்துப் பார்த்து ரசிப்பாள் என்பதை அவன் ஏன் உணராமல் போனான்... என்று இருந்தது உமாவிற்கு..

அவன் உணர மறுக்கிறான் என்று நினைப்பவளுக்கு அவனை உணரவைக்கத் தான் முயலாதது கவனத்தில் படவில்லை.

அவளைச் சந்திக்க விரும்பி அவன் கோவிலுக்கு அருகில் உள்ள இந்தக் கடற்கரைக்கு வரச் சொன்ன நாளில் இருந்து இந்த நிமிடம் வரை அவனைச் சந்திக்கப்போகும் ஆவலில் மனம் பரபரக்க அவள் சாப்பாடு தூக்கம் இன்றித் தவித்தது அவனுக்குத் தெரியுமா...?

அவனுக்குத் தெரியாது என்பது அவளுக்குத் தெரியவில்லை... அவள் தொண்டை அடைக்கக் கடலை வெறித்தாள்... அலை வேகமாய் ஓடி வந்து... கரையைக் கடக்காமல் மோதிச் சிதறியது..

இந்த அலையைப் போல்தான் அவளும்.. சிவகைலாசம் என்ற கரைக்குள் அடங்கியவள்.. அவனைக் கடக்க அவள் நினைக்க மாட்டாள்.. அவனைக் கடந்து அவளுக்கு எதுவும் இல்லை.. அப்படிக் கடக்க வேண்டிய சூழ்நிலை நேர்ந்தால்.. சுனாமியைப் போல்.. பேரழிவை உண்டு பண்ணி விட்டு மீண்டும் கடலுக்குத் திரும்பி.. கரைக்குள்தான் அடக்கி விடுவாள்.. அவனில்லாமல் அவளுக்கு எதுவும் இல்லை.. இருக்கவும் முடியாது...

'பெரிதாய்ப் பேச வந்து விட்டான்...' அவள் மனம் பொருமியது...

இவனுக்காக அவளுடைய வீட்டில் அவள் நடத்திய சாத்வீகப் போராட்டம் பற்றி இவனுக்கென்ன தெரியும்..?

பெண் பார்க்க என்று யாராவது வந்துவிட்டால்... அவர்களின் முன்னால் சபைக்கு வந்து நிற்காமல் இருக்க என்னவெல்லாம் வெளியே தெரியாத சாகசங்களை

அவள் செய்ய வேண்டியதிருக்கிறது. இல்லை... செய்ய வேண்டியதிருந்தது என்று அவன் அறிவானா...?

இதுவரை பல இடங்களில் இருந்து அவளைப் பெண் கேட்டு வந்தார்கள்.. இதுவரை யார் முன்னாலும் அவள் காட்சிப் பொருளாக வந்து நின்றதில்லை... நிற்கும் சூழ்நிலை வராமல் தன்னைத்தானே அவள் தனி மனுஷியாய் நின்று காத்துக் கொண்டாள்.

முதல் முறை மாப்பிள்ளை வீட்டில் ஹாலில் காத்திருந்தபோது.. அவள் காபி கலக்க வைத்திருந்த சுடு பாலைத் தன் பாதங்களில் ஊற்றிக் கொண்டாள்..

பாதம் கொப்புளிக்க.. வலி தாங்க முடியாமல் துடித்தவளைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு நடக்கத்தான் அவளுடைய தந்தை தணிகாசலத்திற்குத் தோன்றியது... மகளைப் பெண் பார்க்க வந்திருப்பவர்களைப் பற்றி அவர் மறந்தே போனார்...

மாப்பிள்ளை வீட்டாரின் மனதில் என்ன தோன்றியதோ... அபசகுனம் என்று அவர்கள் நினைத்துவிட்டது ஊடே பாலமாய் இருந்தவர்கள் மூலம் தெரிய வந்த போது தணிகாசலம் கொதித்துப் போனார்...

"இந்த சம்பந்தமே நமக்கு வேண்டாம் சுந்தரி... என்ன பொண்ணு கால் கொப்புளிக்கக் கிடக்கிறா... அதைப் பெரிதாக நினைக்காமல் சகுனத்தைப் பெரிதாக நினைப்பவர்களின் வீட்டில் நாம் பெண் கொடுக்கக் கூடாது... இன்றைக்கே இப்படி இரக்கமில்லாமல் இருப்பவங்க.. நாளைக்கு நம்ம பொண்ணு அவங்க வீட்டுக்கு மருமகளாப் போயிட்டா கரிசனமாய்க்

கவனிச்சுக்குவாங்கன்னு எப்படிச் சொல்ல முடியும்...? அவங்களே திரும்பப் பெண் கேட்டு வந்தாலும்... நான்

என் பெண்ணை அவங்க வீட்டில் கொடுக்க மாட்டேன்..."

தணிகாசலத்தின் கொதிப்பை... சுந்தரி... இன்று.. நேற்றா பார்க்கிறாள்...? இருபத்து நான்கு வருடங்களாய் அதைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறாள்...?

சுந்தரியைப் பெண் கேட்டு வந்தபோது... தணிகாசலத்தின் வேலையைப் பற்றிச் சுந்தரியின் தந்தை துருவித் துருவி விசாரிக்க... தணிகாசலம் கொதிப்புடன்... நீயும் வேண்டாம்... உன் பெண்ணும் வேண்டாம் என்று கிளம்பிவிட்டார்...

பெண் பார்க்க வந்திருந்தவர்களின் முன்னால் அடக்க ஒடுக்கமாய்.. சபையில் நின்றிருந்த சுந்தரி... சட்டென்று விழியுர்த்தித் தணிகாசலத்தை இறைஞ்சும் பார்வையுடன் பார்க்க... அந்தப் பார்வையால் தாக்கப்பட்ட தணிகாசலம்... அந்தப் பார்வையின் இறைஞ்சலுக்குக் கட்டுப்பட்டார்... சுந்தரியின் தகப்பனாரிடம் தன்மையாகப் பதில் சொன்னார்.

அன்றிலிருந்து இன்றுவரை அவரைப் பார்வையாலேயே சிறைப்பிடித்துத் தன் கட்டுக்குள் வைத்திருக்கும் சுந்தரி... தன் பார்வையின் வீச்சை அப்போது பயன்படுத்த முனையவில்லை...

ஏனென்றால் அவள் மனதிற்குள் ஒரு சந்தேக விதையின் வித்து விழுந்திருந்தது...

காபி கலக்கப் பாலைக் காய்ச்சி இறக்கி வைத்த சுந்தரி மகளைக் காபி கலக்கச் சொல்லவேயில்லை.. பால் இருந்த பாத்திரத்தை இறக்கிக் கை படாத தூரத்தில் தள்ளி வைத்திருந்தாள் சுந்தரி...

அங்கே போய்ப் பாத்திரத்தை எடுத்து.. தானாகக் காலில் ஊற்றிக் கொள்ளாமல் அதுவாகக் கொட்டிக் கவிழ்ந்து உமாவின் கால்களில் படும் சாத்தியக் கூறு இல்லை...

அப்படியெனில்...? உமாவாகத்தான் காலில் பாலை ஊற்றிக் கொண்டிருக்கிறாள் என்பதுதான் உண்மை....

உமாவின் கால் ஆறச் சில நாள்கள் ஆயின.. அந்த நாள்களில் மகள் பட்ட வேதனையைப் பார்த்துத் தாய் மனம் தவித்தது...

'எதற்காக இப்படிச் செய்தாய்...? யாருக்காக இந்த ரணத்தை நீ ஏற்றுக் கொண்டாய்...?

அடுத்துச் சில மாதங்கள் கழித்து... மீண்டும் ஒரு பெண் பார்க்கும் படலம் நடந்தபோது... சுந்தரி மனதிற்குள் பதைத்தாள். கணவனிடம் பகிர்ந்து கொள்ளவும் முடியாமல்.. தானே மனதிற்குள் மறுகிக் கொண்டிருந்தாள்... அவள் பயந்தது போலத்தான் நடந்தது...

பெண் பார்க்க வந்திருந்தவர்கள்... வீட்டிற்குள் நுழையும் போதே.. பூஜையறையில் சாமி விளக்கேற்றிக் கொண்டிருந்த உமாவின் சேலை முந்தானை விளக்கின் திரியில் பட்டு சேலை பற்றிக் கொண்டது..

"அம்மா...!" என்று உமா அலறிய சத்தம் தெருக்கோடி வரை கேட்டது...

பழைய கதை மீண்டும் தொடர்ந்தது... சுந்தரியின் மனதில் விழுந்த சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது...

ஆனால் மகளின் மனதில் இருப்பது யார் என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை... அதைக் கண்டு பிடிப்பதும் அவ்வளவு சுலபமானதில்லை...

ஏனென்றால்.. உமா மகேஸ்வரி... தன் மனதிலிருப்பதை எப்போதுமே வெளிப்படையாய்ப் பேச மாட்டாள்.. சிறுவயதிலிருந்தே அவளுக்கு அந்த வழக்கம் வந்து விட்டதற்கு.. எதற்கெடுத்தாலும் கொதிக்கும் தணிகாசலத்தின் சுபாவமே முக்கிய காரணமாய் அமைந்து விட்டது.

தகப்பனாரின் கோபத்திற்க்கு அஞ்சி... எதைப் பேசினால் தந்தை கோபித்துக் கொள்வார்... எதைப் பேசினால்

கோபித்துக் கொள்ள மாட்டார்.. என்று அறியாதவளாய்... தன் மனதிலிருந்த எண்ணங்களை வெளியே சொல்லாமல் மனதிற்குள் பூட்டி வைத்துக் கொள்ள ஆரம்பித்தால் உமா... மெல்ல...மெல்ல... அதுவே அவளுடைய சுபாவம் ஆகிவிட்டது.. இன்றுவரை வாய் திறந்து தன் மனதிலிருப்பதை வெளியே அவள் சொல்லியதில்லை...

மகளின் இந்த குணம் சுந்தரிக்கு வேதனையை அளிக்க, தணிகாசலமோ.... மகிழ்ந்து போனார்.

"எங்க உமா சாது.. பேசவே மாட்டாள்..." என்று அவர் பெருமை பேசிப்பேசி... கொஞ்ச நஞ்சம் அவள் வாய் திறந்து பேசியதையும் குறைத்து அவளை ஊமையாக்கி விட்டார்.

அடுத்து நடந்த திருமணப் பேச்சுக்களைச் சுந்தரியே தன் சக்தியைப் பயன்படுத்தித் தடுத்து விட்டாள்.

"ஏங்க.. மாப்பிள்ளைப் பையன் என்னவோ சொங்கித் தனமாய்த் தெரிகிறானே.. உங்களைப் போல் வீரமான பையனாகப் பார்த்துப் பெண் கொடுங்க..."

"என்னங்க... அந்த மாப்பிள்ளையின் அக்கா என்ன சொல்கிறாளோ.. அதற்குத்தான் அந்த மாப்பிள்ளைப் பையன் தலையை ஆட்டுவானாம்... அந்த அக்காவோ.. புருசன் வெளிநாட்டில் வேலை பார்க்கிறான்னு சொல்லிக் கொண்டு பிறந்த வீடே கதின்னு கிடக்கிறாளாம்...

நம்ம பொண்ணு பாவம் சாது.. காலமெல்லாம் புருசன் வீட்டுக்குப் போகாமல் பிறந்த வீட்டைக் காவல் காக்கும் நாத்தியிடம் பிடுங்குப் படணும்னு அவளுக்கு என்ன தலையெழுத்தா...?"

"ஏங்க.. இந்த மாப்பிள்ளைக்குக் குடிப்பழக்கம் இருக்குதாமே..."

"இந்த மாப்பிள்ளையா...? இவன் தூணுக்குச் சேலை கட்டி விட்டாலும் திரும்பிப் பார்ப்பானாமே..."

வருகின்ற மாப்பிள்ளைகளைப் பற்றிச் சுந்தரி... அவர்கள் வருமுன்னரே தன் வாயிலிருந்து அபிப்பிராய முத்துக்களை

உதிர்க்க.. வருமுன்னரே தன் மகளைக் காத்து அந்த மாப்பிள்ளைகளைப் பெண் பார்க்க வரவிடாமல் தடுத்து விட்டார்... தணிகாசலம்..

எத்தனை மாப்பிள்ளைகளைப் பற்றி இப்படி இல்லாததும்.. பொல்லாததும் பேச வேண்டியிருக்குமோ... என்று சுந்தரி மனதிற்குள் நொந்து கொண்டாள்... ஆனால் அவளுக்கும் வேறு வழி இருக்கவில்லை.. உயிரைப் பணையம் வைத்தாவது திருமண ஏற்பாடை நிறுத்த அவள் பெற்ற மகள் துணிவதை அறிந்து கொண்ட பின்னால் விசப் பரிட்சையில் இறங்க அவளால் முடியவில்i...

நல்ல வேளையாக ஒருநாளள் கோவிலுக்குப் போயிருந்த போது... சிவாவின் தாயாருடன் சிவாவைச் சுந்தரி காண நேர்ந்தது. அவனைக் கண்டதும் மகளின் முகத்தில் தோன்றிய மலர்ச்சியையும்... அவளது விழிகளில் தெரிந்த மின்னல்களையும் சுந்தரி இனம் கண்டு கொண்டாள்.

3

சிவ கைலாசத்தின் தாய் சௌதாமினி... தணிகாசலத்தின் ஒன்று விட்ட தங்கை... தணிகாசலத்தின் தாத்தா முத்தையாவிற்கு இரண்டே மகன்தான்... மூத்தவர் தணிகாசலத்தின் தந்தையான அருணகிரி.. இளையவர் சௌதாமினியின் தந்தையான வேதகிரி... கூட்டுக் குடும்பமாக ஒரே வியாபாரம் செய்து வந்த அருணகிரியும்... வேதகிரியும் அவர்களது பெற்றோர்களின் மறைவிற்குப் பின்னாலும் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள விரும்பவில்லை..

ஆனால்... அருணகிரியின் மகன் தணிகாசலம்.. படித்து சர்விஸ் கமிசன் பரிட்சை எழுதி... தாலுகா ஆபிஸில் வேலைக்குச் சேர்ந்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகிவிட... வேதகிரியின் ஒரே மகளான சௌதாமினி வெட்டினரி

டாக்டரான பாலசுப்பிரமணியத்திற்கு மனைவியாகி விட்டாள்.

இரு சகோதரர்களின் வாரிசுகளும் வியாபாரத்தில் ஈடுபடாமல் ஒதுங்கிவிட.. அவர்களின் பணத் தேவைக்காக அருணகிரியும்.. வேதகிரியும் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள நேர்ந்தது..

சொத்து பகிரும்போது டவுனில் உள்ள வீட்டைச் சௌதாமினியின் கணவர் கேட்க.. தணிகாசலம் வழக்கமான கொதிப்புடன்..

"நீ யார் அதைக் கேட்க...? நீ இந்தச் சொத்திற்கு உடந்தைப் பட்டவனா...?" என்று கேட்டு விட்டார்...

தன்மானம் மிகுந்த பாலசுப்பிரமணியம் அப்போதே அந்த இடத்தை விட்டு வெளியேறி விட.. சௌதாமினி.. தமையனுடன் மல்லுக்கு நின்று விட்டாள்..

வார்த்தை தடித்து... இரு குடும்பங்களுக்கும் நடுவே பேச்சு வார்த்தை நின்று விட்டது.. ஒற்றுமைக்குப் பெயர் பெற்ற அருணகிரியும்.. வேதகிரியும்.. கோவிலில் சந்தித்து உரையாடிக் கொள்ளும் அளவிற்குப் பகை முற்றிவிட்டது...

குடும்பத்திற்குள் சண்டை நடந்து... இருவீட்டாரும் பிரியும்போது... உமாமகேஸ்வரியின் வயது பதினைந்து... சிவகைலாசத்தின் வயது இருபத்தொன்று...

சிறு வயதிலிருந்தே.. இன்னார்க்கு.. இன்னார் என்று வளர்ந்து வந்தவர்கள் திடீரென்று பிரிவு நேரவும் துடித்துப் போய் விட்டார்கள்...

வாய் பேசாத உமா மகேஸ்வரியிடம் யாருமில்லாத தனிமையில் அவள் சிக்கிக் கொண்டால்..

"ஏய்ய்.. இங்கே வாடி..." என்றுதான் உரிமை எடுத்துப் பேசுவான் சிவகைலாசம்...

எட்டு வயதில் அறியாச் சிறுமியாய் அவளிருக்கும் போதே... "ஏன்டி... உன் கிளாஸ்மேட் ரமேஷ் கிட்டப் பேசின...? நீ என் பெண்டாட்டி... நினைவிருக்கட்டும்.. மீறி அவன் கிட்டப்

பேசினால் பல்லை உடைத்து விடுவேன்.. உன் பல்லை இல்லை... அவன் பல்லை..." என்று மிரட்டி வைத்திருந்தவன் சிவகைலாசம்...

மற்றவர்களுக்குத் தன்னால் துன்பம் நேர்ந்து விடக் கூடாது என்ற கொள்கை படைத்த சாதுப் பெண் உமா மகேஸ்வரி என்பது அவனுடைய கணிப்பு... அதனால் ரமேஷின் பல்லைக் காப்பாற்ற அவனுடன் பேச மாட்டாள் என்று எதிப்பார்த்தான்.. அவனது எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை.. உமா ரமேஷுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டாள்...

"ஏய்ய்... தண்ணீர் கொண்டு வாடி..."

"ஏன்டி... முகம் கழுவிக் கொண்டு வந்தால் டவல் எடுத்துத் தர மாட்டாயா...?"

"ஏய்ய்... டிபன் எடுத்து வைடி..."

தணிகாசலம் அருணகிரி, வேதகிரி குடும்பத்துடன் சொந்தமான பரம்பரை வீட்டில் வசித்து வந்து கொண்டிருந்த போது... தாத்தாக்களைப் பார்க்க என்று... சௌதாமினியுடன் வாரத்திற்கு நான்கு நாள்கள் அங்கே வந்து விடும் சிவகைலாசம்... உமா மகேஸ்வரியைத் தனிமையில் உரிமையோடு அதட்டுவான்...

அவளுக்கு அவனின் அந்த உரிமை கலந்த அதட்டல் மிகவும் பிடிக்கும்.. மிரள.. மிரள விழித்துக் கொண்டு அவன் கேட்பதையெல்லாமல் உடனே செய்து கொடுப்பாள்...

அவளை ஓட... ஓட... விரட்டுவதில் அவனுக்குத் தனிச் சுகம் கிடைக்கும்... அப்படி ஓர் கணவன்.. மனைவி பந்தத்தில் சிறு வயது முதல் பிணைக்கப்பட்டு வளர்ந்த சிறிசுகள்... பிரிவு நேரவும் அதிர்ந்து நின்றார்கள்..

சிவகைலாசம், உமாமகேஸ்வரி படிக்கும் பள்ளிக்குப் போய், அவளைப் பார்த்தான்.. அவள் பயந்தாள்...

"அத்தான்.. இங்கேயெல்லாம் வராதீங்க..." என்று பட்டென்று சொல்லியும் விட்டாள்...

"வரக்கூடாதா... நான் உன்னைப் பார்க்க வரவே கூடாதா...?" என்று அவளின் விழிகளை ஊடுருவிப் பார்த்துக் கேட்டவன்.. சட்டென்று போய் விட்டான்..

அன்று இரவு முழுவதும் உமா தூங்கவில்லை... இருளின் கனத்த போர்வையில்.. எவரும் அறியாமல் மௌனமாய்க் கண்ணீர் விட்டுத் தலையணையை நனைத் தாள் அவள்...

அதற்குப் பின் அந்தப் பள்ளிக்கு அவளைப் பார்க்கச் சிவா வரவேயில்லை.. எதிர்பார்த்த கண்கள் பூத்தப் போக... ஏன் அப்படிச் சொன்னோம் என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள் உமா...

ப்ளஸ் டூ முடிந்து அவள் கல்லூரியில் சேர்ந்தாள்... கல்லூரியில் இருந்து அவள் திரும்பிக் கொண்டிருந்த ஓர் மழைநாளில்... அவள் அவனை மீண்டும் சந்தித்தாள்...

மழையில் சுடிதார் நனைந்து விட... பஸ் நிறுத்தத்தில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தவளின் அருகே தன் காரை நிறுத்தி விட்டு இறங்கி வந்தான் அவன்.

"வா... உன்னை வீட்டில் டிராப் பண்ணுகிறேன்..."

மூன்று ஆண்டுகள் கழித்துத் திடீரென்று தன் முன் தோன்றிய அவனைக் கண்ட பரவசத்தில் பார்த்தை வராமல் தவித்தாள் உமா.. தன் மனதின் படபடப்பை மறைக்கத் தலையைக் குனிந்தும் கொண்டாள்.. அவன் முகம் கடுத்தான்...

"ஏய்.. நான் கேட்பது உன் காதில் விழுகிறதா இல்லையா..? அக்கம் பக்கத்தில் பஸ் ஸ்டாண்டில் நிற்கும் வயதுப் பெண்ணிடம் நான் வம்பு பண்ணுகிறேன்னு நினைத்து எனக்குத் தர்ம அடிவாங்கிக் கொடுக்க.. மனதில் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாயா...?"

அவளுக்குக் கண்கள் கரித்தன... 'நான் அப்படிச் செய்வேனா...?' என்று கேட்க நினைத்தாள். வார்த்தைகள் வெளிவராமல் தொண்டைக் குழிக்குள் சிக்கிக் கொண்டன.

தேவர் மகன் திரைப்படத்தில் கமல்ஹாசன் கேட்ட போது...'இஞ்சி இடுப்பழகா...' என்று பாடிய ரேவதிக்குத் தொடர்ந்து பாட வார்த்தைகள் வராமல்... ஏன் காற்று வந்தது என்பதை உணர்வு பூர்வமாய் அன்று அவள் உணர்ந்து கொண்டாள்..

அதை அறியாத சிவா பல்லைக் கடித்தான்...

'இவ்வளவு சொல்கிறேன்... அசைகிறாளா பார்... அப்படியே அப்பனின் திமிரை மொத்தமாய் குத்தகை எடுத்துக் கொண்டு பிறந்து வந்திருக்கிறாள்... கல்லூளி மங்கி...'

"இப்ப வரப் போகிறாயா... இல்லையாடி.."

அவன் குரலை உயர்ந்த.. அக்கம் பக்கத்தினர் லேசாகத் திரும்பிப் பார்த்தார்கள்.. உமா கிலேசம் அடைந்தாள்...

"எல்லோரும் பார்க்கிறாங்க..."

அவள் மெல்லிய குரலில்தான் முணுமுணுத்தாள்... ஆனால் அவன் என்னவோ.. அவனைத் தொட்டுத் தழுவிக் காதல் சொல்லி விட்டது போல் சிவா மகிழ்ந்து போய்விட்டான்...

"பார்த்தால் என்ன...?"

"உங்களுக்கு ஒன்றுமில்லை... எனக்குத்தான் எல்லாமும்.." காலம்.. காலமாய் மனதின் உணர்வுகளைத் தங்களுக்குள்ளே புதைத்துக் கொண்டு வாழ நேர்ந்த பெண்களின் தலைவிதியை நினைத்துத் துயரத்துடன் கூறினாள் உமா...

அவனோ பேச்சை வளர்த்த விரும்பினான்... மூன்று ஆண்டுகள் கழித்து வாய்திறந்து அவள் சிந்தும் வார்த்தை முத்துக்களை விட்டுவிட அவன் தயாராக இல்லை...

"உனக்குத்தான் என்ன வந்துவிட்டது...? என்னோடு பேசினால் உன் கல்யாணம் நின்று போய்விடுமா...?"

அவள் செல்லக் கோபத்துடன் முறைப்பாள் என்று அவன் எதிர்பார்த்து நிற்க... அவளோ...

"எனக்கு பஸ் வந்து விட்டது..." என்று ஓடிப்போய் வந்து நின்ற பேருந்தில் ஏறிக் கொண்டாள்...

கண் பார்வையிலிருந்து பேருந்து மறையும் வரை அதை வெறித்துப் பார்ததுக் கொண்டு நின்ற சிவாவிற்கு மனதில் கோபம் கொந்தளித்தது.

மறுநாள் அவளது கல்லூரிவாசலில் காருடன் நின்று கொண்டிருந்தான் சிவா.. அவனைக் கண்டதும்... தோழிகளுடன் பேசிக் கொண்டே கல்லூரியை விட்டு வெளியே வந்த உமா கால்கள் பின்ன நின்று விட்டாள்..

அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு கைகளை முன்புறம் மடித்துக் கட்டிக்கொண்டு... காரில் சாய்ந்த வண்ணம் அசையாமல் நின்றான் சிவா...

அவனைக் கடந்து செல்ல முடியாமல்.. தலை கவிழ்நது.. மனம் சிறகடிக்க அவனருகில் வந்து நின்றவள்.. வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்க மாட்டாமல்...

"இங்கேயெல்லாம்... ஏன் வருகிறீங்க, அத்தான்..." என்று கேட்டு வைத்தாள்...

"ஏன்.. வந்தால் என்ன...?" அவன் அமர்த்தலாகக் கேட்டான்...

"என் பிரண்ட்ஸ் என்னைத் தப்பாக நினைப்பார்கள்..."

"நான் என்ன உன்னையா பார்க்க வந்தேன்..?"

"பின் வேறு யாரைப் பார்க்க வந்தீங்களாம்..."

"கலர் பார்க்க வந்தேன்டி..."

"கலர் பார்க்கவா...?"

"ஆமாம்டி... இங்கே பார் எத்தனை பிகர்... கலர்... கலராய் அழகாய் வருகிறார்கள்... அவர்களைப் பார்ப்பதை விட்டு... உன்னைப் பார்க்க நான் ஏன் வரப்போகிறேன்..."

இப்போதும் அவள் கோபமாய் முறைக்கவில்லை... அவன் அவளுடைய முறைப்பை எதிர்பார்த்து நிற்க.. அவளோ அமைதியாய் அங்கிருந்து நகரப் போனாள்...

"ஏய்... எங்கேடி போகிறாய்...?"

"நீங்கள்தான் என்னைப் பார்க்க வரவில்லையே... வேறு யாரையோ பார்க்க வந்திருக்கீங்க போல இருக்கே..."

"அந்த 'வேறு யார்'... யார் என்றுதான் நீயே அடையாளம் காட்டேன்."

"நான் காட்டவா...?"

"வேறு யார் காட்டுவது..? உனக்குத்தானே உன் காலேஜ் பெண்களின் குணநலன்கள் பற்றித் தெரியும்..."

உமா மகேஸ்வரியின் மனம் சிணுங்கியதை... அவளது முகம் உணர்த்தியிருந்தால் சிவா மிகவும் சந்தோசப்பட்டிருப்பான்... அவளோ மௌனமாகக் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்...

"என்னடி... நேரமாகி விட்டதா...? போ... போ..."

"நீங்கள் போகவில்லையா...?"

"ம்ம்.. எல்லாம் என் நேரம்டி... நிம்மதியாய் சாப்ட்வேர் என்ஜினியர் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் என்னை...ரோட்டோர ரோமியோ போல்... வுமன்ஸ் காலேஜ் வாசலில் நிற்க வைத்து விட்டு... கேள்வி வேறு கேட்கிறாயா...?"

"நானா உங்களை வரச் சொன்னேன்...?"

"அப்படிச் சொல்லியிருந்தால்தான் பரவாயில்லையே.. நீ அப்படிச் சொல்கிற ஆளா?"

"எனக்கு நேரமாகிறது அத்தான்..."

"அத்தான்... கேட்கவே காது குளிர்கிறது..நான் உனக்கு அத்தான் என்பது உனக்கு நினைவு இருக்கிறதா...?"

அவள் உதடு கடித்துத் தன் உணர்வுகளை அடக்கிக் கொள்ள... அவன் காரில் ஏறிப் போய் விட்டான்..

'நீயும் காரில் வா என்று ஏன் என்னைக் கூப்பிடவில்லை...?

முதல் நாள் அவனது வேண்டுகோளை மறுத்து.. பஸ்ஸில் ஏறிச் சென்றதை மறந்துவிட்டு.. இரவு முழுவதும் அழுது தலையணையை நனைத்தாள் உமா...

அடுத்த நாள் கல்லூரி வாசலில் அவனை அவளது விழிகள் தேடின.. ஆனால் சிவா வரவில்லை...

4

சிவாவிற்குப் பித்துப் பிடித்தது போல் ஆகிவிட்டது... வீட்டில் அவனுக்குப் பெண் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்... பாலசுப்பிரமணியத்திடம் பேசத் தயங்கிய சிவா.. சௌதாமினியைத் தஞ்சம் அடைந்தான்.

"அம்மா.. எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம்..."

"பின் எப்போது கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாய்? தடியூன்றி... தொண்டுக் கிழவனாய் நடக்கும்போதா...?"

"நீங்கள் இப்படி வெளி இடத்தில் பெண் பார்ப்பதாக இருந்தால் எனக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் வேண்டாம்..."

சௌதாமினி சட்டென்று கை வேலையை நிறுத்தி விட்டு மகனின் முகம் பார்த்தாள்... அவளது விழிகள் அவன் முகத்தில் எதையோ தேடின...

"சிவா... நீ என்னடா சொல்கிறாய்...?"

"ஏம்மா... அவள் பிறந்தபோதே.. அவள்தான் உன் பொண்டாட்டின்னு என்கிட்ட சொல்லிட்டு... இப்ப என்னம்மா மாற்றிப் பேசுசிறீங்க...?"

சௌதாமினியின் மனம் ஆனந்தப் பரவசத்தில் ஆழ்ந்தது.. மகன் சொல்ல வருவதைப் புரிந்து கொண்டாலும் அவன் வாயாலேயே.. இன்னும் தெளிவாக உண்மையை வரவழைக்க அவள் விரும்பினாள்..

"யாரைடா சொல்கிற...?"

"ஏம்மா.. உங்களுக்கு அவள் யார்ன்னு தெரியாதா?"

"தெரியாதுடா.."

"அப்பாதான் வீம்பு பிடிக்கிறாருன்னா.. நீங்க அவரை விட வீம்பு பிடிச்சவங்களா இருக்கீங்களே..."

"நீதான் வீம்பு பிடிக்காத ஆளாச்சே.. நீதான் சொல்லேன்..."

"அவளைத்தான் சொல்கிறேன்ம்மா..."

"எவளைடா....?"

"உமாவைத்தான் சொல்கிறேன்... நீங்க அவளைத் தானே பிறந்தவுடன் என்னிடம் தூக்கிக் காட்டி.. உன் பொண்டாட்டின்னு சொன்னீங்க...?"

தணிகாசலம் பெரியப்பா மகனாக இருந்த போதிலும்.. ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக வளர்ந்ததால்... சௌதாமினியைத் தன் சொந்தத் தங்கை போலவே பாவித்தார்... அதனால்.. தான் முதலில் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தவிட்டார்...

"கல்யாண வயசில் தங்கச்சியை வீட்டில் வைத்துக் கிட்டு நான் முதலில் கல்யாணம் பண்ணிக்கிட்டால் நல்லாயிருக்காதுப்பா.."

அதன்படி சௌதாமினி... பாலசுப்பிரமணியத்தின் கல்யாணம் முதலில் நடந்தது.. அதன் பின்னும்... தங்கையின் தலைத் திபாவளி... முதல் பிரசவம்... பிறந்த குழந்தைக்குக் காதணி விழா நடத்த தாய்மாமனாகச் சீர் செய்தல் என்று தணிகாசலம் தன் கல்யாணத்தை மறந்து நிற்க... சௌதாமினி அருணகிரியோடு சண்டை போட்டாள்...

"ஏன் பெரியப்பா.. அண்ணனுக்குக் கல்யாணம் பண்ணணும்கிற எண்ணமே உங்களுக்கு இல்லையா...?"

"எனக்கிருந்து என்னம்மா பிரயோசனம்... அவனுக்கு அந்த எண்ணமே இல்லாமல்... தங்கையைச் சீராட்டிக் கிட்டு இருக்கிறானே..."

இதைக் குறை போல்... மிகப் பெருமையாய்க் கூறிச் சிரித்த அருணகிரியையும்... அதைப் பெருமையுடன் கேட்டுக் கொண்டிருந்த பெரியன்னை சரஸ்வதியையும் நினைக்கும் போது இப்போதும் சௌதாமினியின் நெஞ்சம் நெகிழ்ந்தது...

அவளுக்குத் தாய் இல்லை... சௌதாமினி சிறு வயதாக இருக்கும் போதே வேதகிரியின் மனைவி மரகத வள்ளி இறந்து விட்டாள்.. தாயில்லாத குறை தெரியாமல் சௌதாமினியை வளர்த்து ஆளாக்கியது சரஸ்வதி தான்... பெற்றவளுக்கும் மேலாக இருந்த அந்தப் பெரியன்னையின் பேத்தியைத் தன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாமல் போய்விடுமோ... என்ற கவலை அவளது நெஞ்சைச் சமீப காலமாக அரித்துக் கொண்டிருந்தது...

தணிகாசலத்தின் திருமணம் முடிந்தபோது... சிவா நான்கு வயதுக் குழந்தையாக இருந்தான்... தணிகாசலம்... சுந்தரி தம்பதியினருக்கு உமா மகேஸ்வரி பிறக்கும் போது.. சிவாவின் வயது ஆறு..

பாலசுப்ரமணியம்.. சௌதாமினி தம்பதியினருக்குச் சிவா மட்டுமே ஒற்றை மகனாய் இருந்த போது.. தணிகாசலம் - சுந்தரி தம்பதியினருக்கும் உமா மகேஸ்வரி ஒற்றை மகளாய் இருந்தாள்...

அந்தக் கணக்கீட்டில்தான் பாலசுப்பிரமணியம் என்றைக்கு இருந்தாலும்... உமாமகேஸ்வரிக்குச் சீதனமாய் வரும் சொத்துத்தானே... சிவாதான் உமாவைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறானே என்ற எண்ணத்தில்... முதலிலேயே டவுனுக்குள் இருந்த வீட்டைக் கேட்டு விட்டார்...

வார்த்தை முற்றிப் பிரிந்து வந்த பின்னாலும்.... அடிக்கடி சௌதாமினியிடம் அதைக் கூறுவார்.

"ஏண்டி... அந்தப் பெண் உமாவைத்தான் நம்ம சிவாவுக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோமே.. அந்த வீடு எங்கே போய் விடப் போகிறது... உன் அண்ணன் மகள்தானே அந்த வீட்டில் வாழப் போகிறாள்...? அந்த

நினைப்பு உன் அண்ணன் மனதில் இருந்தால்... இப்படி ஒரு வார்த்தையை என்னைப் பார்த்துக் கேட்பானா...?"

சௌதாமினிக்கும் அந்த வருத்தம் இருக்கும்... டவுனில் ஒன்றும்... புறநகரில் ஒன்றும்.. பரம்பரை வீடுகள் உள்ள அந்தக் குடும்பத்தில்.... எந்த வீடு யாருக்கு வந்து சேர்ந்தாலும் அதில் இசைந்து வாழப் போகிறவர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைகள்தானே என்ற நினைவு கொஞ்சமாவது.. பெரியப்பாவின் மகனுக்கு இருந்திருந்தால் சௌதாமினியின் கணவரைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தையைக் கேட்டிருக்க மாட்டார்தான்... ஒரு வேளை... தன் வீட்டில் பெண் கொடுக்கத் தமையன் நினைக்கவில்லையோ...?

சௌதாமினியின் சந்தேகத்தை உறுதிப் படுத்துவது போல, தணிகாசலம் பகையுணர்வு மிகுந்தவராய்ப் பிரிந்தே இருந்தார்... அவரது விருப்பப்படி டவுனில் இருந்த

வீட்டை அவருக்கே சௌதாமினி விட்டுக் கொடுத்து விட்டு... புறநகர் வீட்டைப் பெற்றுக் கொண்ட பின்பும்... அவரது கோபம் குறையவில்லை... உறவினர் விட்டு விசேஷங்களில் சௌதாமினியையும்... அவளுடைய கணவரையும் பார்க்க நேர்ந்தாலும்... பாராதது போல் போய் விடுவார்...

உமா மகேஸ்வரி கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்த பின்பு சௌதாமினி... இரு வீட்டினருக்கும் பொதுவான உறவினர் மூலம் உமாமகேஸ்வரியைப் பெண் கேட்கத் தான் செய்தாள்... ஆனால் தணிகாசலம் ஒரேயடியாய் முடியாது என்று சொல்லிவிட்டதாகத் தூது போன உறவினர்கள் வந்து சொன்னார்கள்...

'அவர் அது மட்டுமா சொன்னார்....?' சௌதாமினி பெருமூச்சு விட்டாள்...

"கை நழுவிப் போன டவுன் வீட்டைத் திரும்பவும் கைப்பற்றிக் கொள்ளலாமுன்னு புருசனும் பெண்டாட்டியும் திட்டம் போட்டுப் பெண் கேட்கிறாங்களா...?" என்று கேட்டாராம்...

பாலசுப்பிரமணியத்திற்கு இது தெரிய வந்தபோது என்றைக்கும் கை நீட்டாத மனிதர்... தன் மனைவியைக் கைநீட்டி அடித்து விட்டார்...

"உன் அண்ணன் அன்றைக்கே எனக்கு ஊரான் சொத்துக்கு ஆசைப்படுகிறவன்னு பெயர் கட்டி விட்டான்டி. நீ இன்னும் அந்தப் பெயரை நிலைக்க வைக்கப் பார்க்கிறாயா..." என்று கொதித்து விட்டார்.

அதன் பின் சௌதாமினி... கணவனுக்குத் தெரியாமல் உமாவைப் பெண் கேட்கும் முயற்சியைக் கைவிட்டு விட்டாள்... பாலசுப்ரமணியம் சிவாவுக்கு வெளியே பெண் தேட ஆரம்பித்தபோது அவள் தடுக்கவில்லை... ஆனால் அவளது அடிமனதில் பெரியப்பா மகனின் மகனைத் தன் மருமகளாக்கிக் கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம்.. அப்படியே இருந்தது...

அவள் எதிர்பாராமல் சிவா... உமாவைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும் அவள் மனதிற்குள் நம்பிக்கை துளிர் விட்டது...

"சிவா... உடம்பெல்லாம் எண்ணெயைப் பூசிக் கொண்டு மண்ணில் உருண்டு புரண்டாலும்... ஒட்டுகிற மண்தான் ஒட்டும்..."

"ஆஹா.. என்ன ஒரு தத்துவம்.. என்ன ஒரு தத்துவம்..."

"ஏன்டா, என் வேதனை உனக்குக் கிண்டலாகப் போய்விட்டதா?"

"சும்மாயிருங்கம்மா... எத்தனை நாள்தான் இதே பல்லவியைப் பாடுவீங்க்... கொஞ்சம் மாத்தி யோசிக்க மாட்டீங்களா...?"

"என்னடா சொல்கிற...?"

"எதுக்கு வீணாய் உடம்பில் எண்ணெயைப் பூசிக் கொண்டு மண்ணில் உருண்டு புரளணும்...? கொஞ்சம் பசையை நுனி விரலில் தடவிக் கொண்டு... எந்த மண் தேவையோ... அந்த

மண்ணில் விரலை வைத்தால்... அது பாட்டுக்கு ஒட்டிக் கொள்ளாதா?"

சௌதாமினி சிரித்து விட்டாள்.

"பிழைத்துக் கொள்வடா மகனே..."

"உமாவை எனக்குக் கல்யாணம் பண்ணி வைத்தால் இன்னும் நன்றாகப் பிழைத்துக் கொள்வேன்..."

"இதை உன் அப்பாவிடம் யாருடா சொல்வது?"

"ஏன்... நீங்கள் சொல்ல வேண்டியதுதானே..."

"வேறு வினையே வேண்டாம்... ஏற்கெனவே... வைஜெயந்தி அத்தை மூலம் அண்ணன்கிட்ட உன் அப்பாவுக்குத் தெரியாமல் பெண் கேட்டு விட்டதற்கு... உன் அப்பா என்னைக் காய்ச்சு காய்ச்சுன்னு காய்ச்சி எடுத்துவிட்டார்..."

"அப்போ... எனக்கென்ன வழி...?"

"ம்ம்... யோசிக்கிறேன்..."

சௌதாமினி யோசித்தாள்... வைஜெயந்தி அத்தையிடம் தணிகாசலம் வீட்டில் என்ன நடக்கிறது என்று விசாரித்தாள்..

"அதையேன் கேட்கிற சௌதா... உன் அண்ணன் மகள் இப்பத்தான் மூன்றாவது வருசம் டிகிரி படித்துக் கொண்டிருக்கிறாள்.. அவள் படிப்பை முடிக்கிறதுக்குள்ள உன் அண்ணன் மாப்பிள்ளை தேடி அலைய ஆரம்பித்து விட்டார்..."

"எதுக்கு இத்தனை அவசரமாம் அத்தை...?"

"வேறு எதுக்கு... எல்லாம் நீ பெண் கேட்டு விட்ட பயம் தான்... பொண்ணு படிப்பு முடிந்து வீட்டில் ஒருநாள் கூட உட்காரக் கூடாதாம்.. அதனால்... காலில் சுடு தண்ணியை ஊற்றிக்கிட்டு பறக்கிறான்..."

"சம்பந்தம் அமைந்ததா அத்தை...?"

"அமையாமல் என்ன செய்யும்...? தணிகாசலம் இப்ப தாசில்தார் ஆகிவிட்டான். டவுனில் இரண்டு வீடுகள் கட்டிப் போட்டிருக்கிறான்... கிராமத்தில் தோப்பு... துரவு... எல்லாம் உமாவுக்குத்தானே... அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நீ.. நான்னு போட்டி போட்டுக் கொண்டு வரத்தானே செய்வாங்க..."

"அதுக்காக.. என் சொந்தத்தை அண்ணன் தள்ளி வைக்கலாமா?"

"அது உனக்குத் தெரியுது... எனக்குத் தெரியுது... அவனுக்குத் தெரியலையே..."

"எதுவும் முடிவாகி விட்டதா அத்தை...?"

அதற்கு வைஜெயந்தி சொன்ன பதில் கேட்டுச் சௌதாமினியின் நெற்றியில் சிந்தனை ரேகை படிந்தது...

இன்றைய நடுவயதினர் எல்லாம் ஒருநாளில் இளம் பருவத்தைத் தாண்டி வந்தவர்கள்தானே... அவர்களுக்குத் தெரியாதா... இளையவர்களின் ஆழ்மனதைப்பற்றி....?

5

"அதையேன் சௌதாமினி கேட்கிற... முதன் முதலாய் உமாவைப் பெண் கேட்டு வந்த இடம் பெரிய இடம்... மாப்பிள்ளையின் அப்பா ரிட்டயர்டு ஜட்ஜ்... ஆனால் பாரு... அவங்க வந்த சமயம் பார்த்து... உன் அண்ணன் மகள் காலில் சுடுபால் கொட்டி... பெரிய களேபரமாகி விட்டது..."

"அப்புறம்....?"

"அப்புறம்... உன் அண்ணன்காரன் பொண்ணை மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கிட்ட காட்ட முடியாமல்.... டாக்டரிடம் காட்ட ஓடினான்..."

"அடப் பாவமே..."

"அந்தப் பேச்சு அப்படியே நின்னு போச்சு... அடுத்து ஒரு சம்பந்தம் முன்னதை விடப் பெரிதா வந்தது...

மாப்பிள்ளையின் குடும்பம்.. கோடீஸ்வரக் குடும்பம்..."

"ஓஹோ..."

"ஏன் சுரத்தில்லாமல் பேசுகிற....?"

"ஒன்றுமில்லை அத்தை..."

"கவலையே படாதே... இந்த இடமும் உன் அண்ணன் மகளுக்கு அமையவில்லை..."

"ஏன்... என்ன ஆச்சாம்?"

"இப்போ... பொண்ணோட சேலையில் விளக்கின் திரியில் இருந்த நெருப்பு பட்டு... பற்றிக் கொண்டதாம்..."

சௌதாமினி திகைத்து விட்டாள்..

'இது என்ன கதையாய் இருக்கு... பொண்ணு பார்க்க ஆள் வந்தால்... பெண்ணுக்கு ஏதாவது நடக்கிறதே...'

அவள் மனம் விழித்துக் கொண்டது...

'ஆஹா...' என்று மகிழ்ந்து போனாள் அவள்...

"அப்புறம் நிறைய இடத்தில் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கிறாங்க... உன் அண்ணன் பெண்டாட்டிக்கு யாரையும் பிடிக்கவில்லை... அது சொத்தை... இது சொத்தைன்னு தட்டிக் கழிக்கிறாளாம்..."

"அண்ணன் ஒன்றும் சொல்லவில்லையா...?"

"யாரு தணிகாசலமா? அவன் உன்கிட்டயும்... என் கிட்டயும்தான் வாய் பேசுவான்... பெண்டாட்டிகிட்டப் பேசுவானா...? சுந்தரி 'எள்' ளுன்னு சொன்னால்... இவன் எண்ணெயாய் நிற்பானே..."

வைஜெயந்தி போய்விட்டாள்... அன்று மாலை சிவா வந்ததும் சௌதாமினி அவனுக்குக் காபியைக் கொடுத்தபடி வினவினாள்..

"உமா படிப்பை முடித்து விட்டாளாடா...?"

"ம்ம்... அதெல்லாம் இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே எக்ஸாம் எழுதி முடித்து விட்டாள்.."

"சிவா.. உன் மாமா வீட்டில் நான் பேசணுமின்னா... நீ ஒரு காரியம் செய்யணும்..."

"என்னம்மா செய்யணும்..."

"இது இரண்டு வீட்டுக்கும் இடையில் எரிகிற பிரச்சனை... அதை முதலில் தண்ணியை ஊற்றி அமர்த்து... அதுக்குப் பின்னாலதான் அவங்க வீட்டில்... நான் பெண் கேட்டுப் படியேற முடியும்..."

"தண்ணியை ஊற்றித் தீயை அணைக்க.. நான் என்ன பயர் சர்வீஸா...?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது... அந்தப் பெண்தான் உனக்கு வேண்டும்ன்னா... நான் சொன்னதைச் செய்..."

"முதலில் யாரிடமிருந்து ஆரம்பிக்க...?"

"நம்ம வீட்டில்... உன் அப்பாவை நாம் எப்போது வேண்டுமானாலும் சமாதானப் படுத்திக் கொள்ளலாம்... ஆனால் உன் மாமாவை முதலில் சமாதானப் படுத்த வேண்டுமே..."

"நான் போய் அவரிடம் பேசவா...?"

"இப்போது வேண்டாம்..."

"வேறு எப்போது பேசுவது...?"

"நான் சொல்லும்போது பேசு..."

"அம்மா... அவள் கழுத்தில் தாலி கட்ட வேண்டுமானால்... நான்.. நாள் நட்சத்திரம் பார்க்கலாம்.. அவருடைய அப்பனிடம் சமாதானம் பேசவும் நாள் நட்சத்திரம் பார்க்கணுமா..?"

"பொறுடா... என் அண்ணன் கோபக்காரர்..."

"நானும் கோபக்காரன்தான்..."

"அந்த வீரத்தை உன் அப்பா பதிலுக்குக் காட்டித்தான்... நம்ம இரண்டு வீட்டுக்கும் பகையை உண்டாக்கிட்டாரே... இப்ப நீ வேற ஆரம்பிக்கிறாயா...? போ... போய் உன் மாமனிடம் மல்லுக்கட்டு... ஆனால்.... அதற்குப் பின்னால்... அவருடைய பெண்ணைக் கட்டலாமுன்னு மட்டும் கனவில் கூட நினைக்காதே...."

"இப்போ ஏம்மா... அவ பேச்சை இழுக்கறீங்க..."

"ஏன்டா... பெரிசா தாலிகட்டிவிட்டவன் போல்... அவள்.. இவள்ன்னு உரிமை கொண்டாடுகிற...."

"என்னை விட்டு வேறொருத்தன அவள் கழுத்தில் தாலி கட்டி விடுவாளா...?"

"பார்க்கலாம்.. நாளைக்கு நான் கோவிலுக்குப் போகும் போது என் துணைக்கு வருகிறாயா...?"

"இது என்னம்மா புதுசா இருக்கு..."

"புதுசுதான்... நீ கூட வா. சொல்கிறேன்.."

சௌதாமினி அருகில் இருக்கும் கோவில்களை விட்டு... ஏன்... தணிகாசலத்தின் ஏரியாவில் இருக்கும் கோவிலுக்குப் போக அடம் பிடித்தாள் என்று புரியாதவனாய்... தன் காரை எடுத்துக் கொண்டு... அவளுக்குத் துணையாகக் கோவிலுக்கு போனான்

சிவா...

கோவிலின் பிராகாரத்தைச் சுற்றிவரும் போதுதான் ஏன் சௌதாமினி... அந்தக் கோவிலுக்கு வர வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள் என்பது அவனுக்குப் புரிந்தது...

எதிரே சுந்தரியுடன் உமா மகேஸ்வரி வந்து கொண்டிருந்தாள்... ஆண்கள் மோதிக்கொண்ட குடும்பப் பகையில்.. பெண்கள் அமைதி காத்து...அவரவர் குடும்பத்தில் ஒதுங்கிக் கொண்டாலும்... எதிர்ப்படும் நேரங்களில் லேசாகச் சிரித்து... நலம் விசாரித்துக் கொள்வது உண்டு. அதுபோல் இப்போதும் இரு

பெண்மணிகளும்... நடை தளர்ந்து நின்று நலம் விசாரித்துக் கொண்டார்கள்...

"எப்படியிருக்கீங்க அண்ணி?" என்று கேட்ட சௌதாமினியின் விழிகள் உமாமகேஸ்வரியின் மீதே இருக்க... சுந்தரியும் அதே சமயம் உமாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்...

சிவாவைக் கண்டதும்.. தாய்ப்பசுவைக் கண்டு விட்ட கன்று போல் அவள் முகத்தில் தோன்றிய நிறைவு... எதையோ சொல்லத் துடிக்கும் தவிப்பு... வேதனையின் நிழல்... அவளது உதடுகள் துடித்து... கண்களில் தோன்றிய மின்னல்... அனைத்தும் ஒரு நிமிடத்திற்குள் தோன்றி மறைந்து விட... வழக்கம் போல் மனதை அடக்கி... மறைந்து தலை குனிந்து கொண்டாள் உமா...

அந்த ஒருநிமிடமும்... ஆச்சரியமாய்ச் சௌதாமினியை நோக்கிக் கொண்டிருந்த சிவா... உமாவைப் பார்க்கும் போது அவள் தலை கவிழ்ந்திருந்ததால் எரிச்சல் ஏற்பட.. மனதின் கோபத்தை அடக்கிக் கொண்டு... கோவில் கோபுரத்தை வெறித்தான்...

"எப்படியிருப்பேன் சௌதாமினி... மனசு பூரா கவலை நிரம்பியிருக்கும்போது என்னால் சிரித்துக் கொண்டா இருக்க முடியும்...?"

எப்போதும் ஒரு சின்னச் சிரிப்புடன் நகர்ந்து விடும் சுந்தரி... இன்றைக்கு இவ்வளவு நீளமாகப் பேசியதற்குக் காரணம்... உமாவின் முகத்தில் ஒரு நிமிடத்திற்குள் தோன்றி மறைந்த ஓராயிரம் உணர்ச்சிகள்தான் என்பதைப் புரிந்து கொண்ட சௌதாமினி மனதிற்குள் லேசாக நம்பிக்கை வரப் பெற்று நிமிர்ந்து நின்றாள்...

உமாவின் முகம் பிரதிபலித்த உணர்வுகளைச் சௌதாமினியுடன் சேர்ந்து சுந்தரியும் பார்த்துக் கொண்டிருந்ததையும் மகளின் உணர்வுகளை இனம் கண்டு கொண்டு விட்ட விதமாய் அவளது கண்கள் சுருங்கியதையும்... சட்டென்று சௌதாமினியின் பார்வையை... அவளது பார்வை சந்தித்ததையும்... அதைத்

தொடர்ந்து சௌதாமினியுடன் அவள் பேச்சை வளர்த்தியதையும் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டாள் சௌதாமினி...

சுந்தரியின் போக்கிலேயே... தன் பங்குக்குப் பேச்சைத் தொடர்ந்தாள் சௌதாமினி...

"என்ன அண்ணி இது...? கவலை வரும்போது சாய்ந்து கொள்ளத் தோள் கொடுக்கத்தான் சொந்தபந்தம் இருக்கு... நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்...?

நீங்க தனியாக் கவலையைச் சுமந்துக்கிட்டு அல்லாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கா இருக்கிறோம்...?"

"நீங்க இருந்து எனக்கு என்ன ஆகப் போகிறது சௌதா... உன் அண்ணன் கோபத்தில் ஒரு வார்த்தை சொன்னாருன்னு ஓடியே போய் விட்டாய்... கொஞ்சமாவது என்னைப் பற்றியும்... உமாவைப் பற்றியும் நீ யோசிச்சுப் பார்த்தாயா...?"

"நீரடிச்சு நீர் விலகிப் போய் விடுமா, அண்ணி... விலகி நின்றாலும் நம்ம சொந்தம் விலகி விடுமா...?"

இந்த வார்த்தைகளை மனதிலிருந்து உண்டையாகச் சொன்னாள் சௌதாமினி... சொல்லும்போதே அவள் கண்களில் நீர் நிரம்பி விட்டது...

சட்டென்று சௌதாமினியின் கையைப் பிடித்துக் கொண்ட சுந்தரிக்கு... மனதிற்குள் ஆயிரம் யானை பலம் வந்தது போல் இருந்தது... மகளின் மனதில் இருப்பது யார் என்று கண்டு கொண்டு விட்ட தெம்பு... அவள் மனதின் பிரகாரம் திருமணம் நடத்தி வைப்பதில் சௌதாமினி உதவிக் கரம் நீட்டுவாளென்ற நம்பிக்கை... இவ்வளவும் சேர... அவள் மனதில்... மகளின் திருமணத்தைப் பற்றி இருந்த கவலை மறைந்தது...

"வா சௌதா... அப்படி உட்கார்ந்து பேசலாம்..."

சௌதாமினியின் கையைப் பிடித்துக் கொண்டு சந்தரி கூறியதும்... சௌதாமினிக்குள் இருந்த கொஞ்ச நஞ்ச அவ நம்பிக்கையும் போய் விட்டது... குதூகலத்துடன் தமையனின் மனைவியைத் தொடர்ந்து சென்று அமர்ந்தாள் அவள்....

உமா... தூண் மறைவில் மறைந்து அமர்ந்து கொண்டு... சிவாவின் முகம் பார்ப்பதும்... அவன் பார்க்கும்போது நிலம் பார்ப்பதுமாக இருந்தாள்...

சிவாவோ... அவளை ஆவலுடன் பார்ப்பதும்... அவனது ஆவல் கலந்த பார்வைக்கு அவளிடமிருந்து பதில் கிடைக்காவிட்டால்... கோபமாய் முறைப்பதுமாக இருந்தான்...

மகனின் மனம் அறிந்த தாயும்... மகளின் மனம் அறிந்த தாயும்... பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்...

"உமாவிற்குப் படிப்பு முடிந்து விட்டதா அண்ணி...?" பேச்சை அழகாக ஆரம்பித்து வைத்தாள் சௌதாமினி....

"ம்ம்... படிப்பு முடிந்து விட்டது... இவள் மேல

படிக்க ஆசைப்படுகிறாள்.. அவளுடைய அப்பா கல்யாணத்தை முடித்து இவளை இன்னொருத்தர் வீட்டிற்கு அனுப்பிவதிலேயே... குறியாய் இருக்கிறார்." சௌதாமினி ஆரம்பித்து வைத்த பாதையில் அழகாய் அடியெடுத்து வைத்துத் தொடர்ந்தாள் சுந்தரி..

"அதை ஏன் அண்ணி இவ்வளவு கவலையாய்ச் சொல்கிறீங்க...?"

"கவலைப் படாமல் என்ன செய்வது சௌதா... ஒற்றைப் பெண்ணைப் பெற்றவள்... அவளைக் கண்ணுக்குள் வைத்த வளர்த்தேன்... வாழப்போகும் வீட்டில்... இவளுடைய அருமையைத் தெரிந்து வைத்து வாழ வேண்டுமே... உனக்கே தெரியும்... இவள் ஒரு சொல் தாங்க மாட்டாள்... ஆனால் போகிற இடத்தில் இவள் மனமறிந்து யார் நடந்து கொள்வார்க்ள்...?"

எப்படி சௌதாமினி... மனதிலிருந்து பேசினாளோ... அப்படியே... சுந்தரியும் இந்த வார்த்தைகளை உண்மையான கவலையுடன் சொன்னாள்.

6

"அறியாதவங்க வீட்டில் பெண் கொடுத்தால் தானே... இந்த அவதி... என் வீட்டு மருமகளாக என் அண்ணன் மகளை அனுப்பக் கூடாதா அண்ணி...? என் கண்ணுக்குள் வைத்து நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா...?" சௌதாமினி கேட்டே விட்டாள்...

"இதைக் கேட்க என் மனதுக்கு எவ்வளவு ஆறுதலா இருக்குன்னு... உனக்குத் தெரியாது சௌதா... ஆனால் உன் அண்ணன் கோபத்தை யார் தணிப்பது...? நீ பெண் கேட்டு விட்டதற்கு அவர் பேசிய சுடுவார்த்தைகளை நினைவில் வைத்திருக்கும் உன் கணவரிடம் யார் பேசுவது...?" சுந்தரி நியாயமான கவலையுடன் கேட்டாள்.

"நான் பேசுகிறேன், அத்தை..." என்றான் சிவா...

சுந்தரி ஆச்சரியத்துடன் தன் ஒன்றுவிட்ட நாத்தனாரின் மகனின் முகத்தைப் பார்த்தாள்...

சிறுவயதிலிருந்து... அவள் சிவாவைப் பார்த்திருந்தாலும் சிவா வளர்ந்து வாலிபனாகி விட்ட பின்... அவனுடன் பேசியதில்லை... அதுவும் அவனுக்குச் சௌதாமினி பெண் கேட்டு.... தணிகாசலம் அதை மறுத்து விட்ட பின்னால் சுத்தமாக அவன் முகம்பார்த்துப் பேச அவளால் முடிந்ததில்லை...

இன்று மகள் தன் மனதில் வரித்து வைத்திருக்கும் மணாளன் அவன்தான் என்பதை அறிந்து கொண்டதால் அவள் அவன் முகம் பார்த்துப் பேச முயன்றாள்...

"உங்களால் எப்படி முடியும், தம்பி..."

"முடியாது என்பது முட்டாள்களின் அகராதி... நான் முட்டாள் என்பது உங்களின் எண்ணமில்லையே..."

கேள்வியைச் சுந்தரியிடம் கேட்டுக் கொண்டே.... உமாவின் முகத்தைப் பார்த்தான் சிவா... அவளது பார்வை உயர்ந்து அவன் மேல் ஒரு நொடி தன் வீச்சை வீசியது...

எதிர்பார்த்தது நடந்து விட்ட மகிழ்வில் அவனது கண்கள்பளபளத்தன... உமா சட்டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்...

"நீங்கள் கெட்டிக்காரரர் என்பது எனக்கு இன்று... நேற்றுத் தெரிந்த விசயமில்லையே... அதேபோல உங்களின் மாமாவின் கோபம் பற்றியும் உங்களுக்குப் புதிதாய்த் தெரிய வேண்டியதில்லையே..."

"பிறந்ததிலிருந்து தெரியும் என்பதால் அதைப் போக்கும் வழிமுறை பற்றியும் எனக்குத் தெரியும்... நான் நாளைக்குச் சாயங்காலம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன், அத்தை..."

"வந்து..."

"முதலில் மாமாவைச் சரிப்படுத்தப் பார்ப்போம்... அதற்குப் பிறகு... அப்பாவிடம் நான் பேசுகிறேன்..."

சுந்தரியின் மனதில் இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்பட்டது.. முதலாவதாக... மகளின் மனதுக்குப் பிடித்தவனைக் கண்டுபிடித்துத் திருமணப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து விட்டது... இரண்டாவதாக.... மகளின் மனதிற்குப் பிடித்தவனுக்கு... மகளைப் பிடித்திருப்பது...

உமாவின் மீது சிவா கொண்டிருந்த மையலை அவனது முகம் வெளிப்படையாகத் தெரிவித்தது... அவன் உமாவைப் போல் ரகசியப் பார்வை பார்க்கவில்லை... அவளை விழுங்கி விடுவது போல் பார்த்து வைத்தான்... திருமணம் பற்றி யார் தணிகாசலத்திடம் பேசுவது... என்று எல்லோரும் பயந்து கொண்டிருந்தபோது... தான் பேச முன் வந்திருக்கிறான்... திருமணம் ஆன நாள் முதலாய்... தன் கண்ணிசைவில்... கணவனைக் கட்டிப் போட்டிருந்த சுந்தரியாலேயே செய்ய முடியாத ஓர் காரியத்தைச் செய்து முடிப்பதாய் மிக எளிதாக்ச் சொல்கிறான்... இதை அவன்

செய்ய நினைப்பது தன் மகளுக்காக என்பதை நினைத்துப் பார்த்தபோது... சுந்தரிக்கு அவன் மேல் பரிவு ஏற்பட்டது...

மறுநாள் சொன்னபடியே மாலை நேரத்தில் சிவா தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்தான்... காலையிலிருந்தே பரபரப்பாக நகம் கடித்துக் கொண்டு... சாப்பாடு உள்ளே இறங்காமல் வாசலைப் பார்த்துக் கொண்டிருந்த மகளின் பரிதவிப்பைக் காணாதது போல் கண்டு கொண்டிருந்த சுந்தரிக்கு... எதிர்பார்த்தது போல் எல்லாமும் நடக்க வேண்டுமே... என்று கவலையாக இருந்தது...

வாசலில் அழைப்பு மணியின் ஒலி கேட்டதும்.. உமா பதட்டமாக எழுந்து நின்று வாசலைப் பார்க்க... சுந்தரி அவசரமாய் வாசலுக்குச் சென்று கதவைத் திறந்தாள்...

"அத்தை..." என்றபடி சிவா அங்கு நின்றான்...

"உங்களுடைய மாமா ஹாலில்தான் இருக்கிறார்... பார்த்துப் பேசுங்கள்... இருக்கிற பகையை அதிகப் படுத்தி விட்டு விடாதீர்கள்..."

"நீங்கள் கவலையே பட வேண்டாம் அத்தை... அதை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

சுந்தரி மாடிப்படியின் வளைவில் ஒளிந்து நின்று கொண்டு, விரல்கள் நடுங்கப் பார்த்துக் கொண்டிருந்த மகளைக் கவனித்தாள்..

'எல்லாம் நல்லபடி நடக்கவேண்டும்' என்று மனதிற்குள் கவலை எழுந்தது...

"வாங்க..."

சுந்தரி முன்னால் செல்ல... டிவி பார்த்துக் கொண்டிருந்த தணிகாசலம்...

"வாசலில் யார் வந்திருக்கிறது சுந்தரி?" என்று வினவினார்..

சுந்தரி பதில் பேசாமல் சமையலறைக்குள் போய்விட.. அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த சிவா..

முன்னால் வந்து தணிகாசலத்திடம் கை கூப்பினான்...

"வணக்கம் மாமா..."

அவனை அங்கே எதிர்பார்க்காத தணிகாசலம் சட்டென்று எழுந்து நின்றுவிட்டார்... பின் சுதாரித்துக் கொண்டவராய்..

"நீ எங்கே இங்கே வந்த...?" என்று கேட்டார்...

"ஏன் மாமா.. நான் இங்கே வரக் கூடாதா...? எனக்கு அந்த உரிமை இல்லையா...?"

"உரிமையைப் பற்றிப் பேசச் சொல்லி உன் அப்பா சொல்லி அனுப்பி வைத்தாரா....?"

"நான் சொத்து உரிமையைப் பற்றிப் பேசவில்லை.. சொந்தபந்தம் என்ற உரிமையைப் பற்றிப் பேசுகிறேன், மாமா... யாருக்கு வேண்டும் உங்கள் சொத்து...? இன்றைக்கு நான் ஒரு பெரிய வேலையில் இருக்கிறேன்... என் சம்பாத்தியத்தில் வாங்கிய கார்... சொந்த பிளாட்... கை நிறையச் சம்பளம் என்று வசதியாக இருக்கிறேன்...

எனக்கு என் அப்பாவின் சொத்தே தேவையில்லை... என்று நினைப்பவன் நான்... உங்கள் சொத்து எனக்கு எதற்கு...? எனக்கு வேண்டியது என் மாமாவின் சொந்தம்... நான் பிறந்தவுடன் கையில் தூக்கி... அவர் மடியில் என்னை உட்கார வைத்து மொட்டையடித்து.. காது குத்தி விட்ட மாமாவின் சொந்தம் எனக்கு வேண்டும்... அதைக் கூட உங்களால் கொடுக்க முடியாதா...?"

சமையலறையில் காபி கலந்து கொண்டிருந்த சுந்தரி மனதிற்குள் சிவாவின் அணுகுமுறையை மெச்சி 'சபாஷ்' போட்டுக் கொண்டாள்.

தணிகாசலம் சிவாவின் பேச்சில் அயர்ந்து போய் நின்றார்..

இப்படி அவன் பேசிக் கொண்டு வீட்டுக்குள் வந்து நிற்பான் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை....

"உட்கார்..." என்றபடி அமர்ந்தார்...

முதல் அடியை வெற்றிகரமாக எடுத்து வைத்து விட்ட சிவா... வெற்றிக் களிப்புடன் அமர்ந்தான்...

உள்ளேயிருந்து அவனுக்குக் காபி கொண்டு வந்து கொடுத்த சுந்தரி... மெச்சுதலான பார்வை ஒன்றை அவனை நோக்கி வீசி விட்டுச் சென்றாள்.

"அப்புறம்.. எங்கே வேலை பார்க்கிறாய்...?"

சொன்னான்....

"எவ்வளவு சம்பளம்...?"

சொன்னான்....

எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டு வந்த தணிகாசலம்... இயல்பாக அந்தக் கேள்வியையும் கேட்டுவிட்டார்.

"எப்போ கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இருக்கிறாய்..?"

"நீங்கள் உங்கள் மகளை எப்போது எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பீர்களோ... அப்போதுதான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இருக்கிறேன்..."

தணிகாசலம் அவனது தைரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனார்... எதிர்த்து நிற்கிறவனிடம் கொதிப்பைக் காட்டலாம்... உறவைக் கொண்டாடி... பாசத்தைக் காட்டி... 'நீயாக உன் பெண்ணை எனக்கு எப்போது கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறாயோ... அப்போது நான் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்...' என்று தன் விருப்பத்தைத் தெரிவித்து... வேண்டுகோள் வைப்பவனிடம் எப்படிக் கொதிப்பைக் காட்டுவது?

தணிகாசலம் தாடைளைத் தடவி யோசித்தார்... சிவா எழுந்து கொண்டான்...

"அப்போ... நான் போய் வரவா, மாமா...."

திரும்பவும் வருவேன் என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டு அவன் போய்விட... சுந்தரி தன் வேலையை

ஆரம்பித்தாள்..

"என்னங்க...அந்தத் தம்பி சிவா போன பாதையையே பார்த்துக் கொண்ட உட்கார்ந்திருக்கீங்க..."

"இல்லை... சுந்தரி.. இவன் அப்பன் ஒரு மாதிரி என்றால்.... இவன் வேற மாதிரி இருக்கானே...."

"உங்க தங்கச்சி வளர்த்த மகன் வேறு எப்படியிருப்பார்..." சுந்தரி பாசக் கனலை மூட்டிவிட்டாள்... நீரு பூத்த நெருப்பாக மனதின் அடி ஆழத்தில் தணிகாசலம் அமிழ்த்தி வைத்திருந்த பாசம் மேலே எழுந்து வரப் பார்த்தது... அவர் அதை மீண்டும் அமிழ்த்தப் பார்த்தார்.

"சௌதாமினி ஒன்றும்... என் கூடப் பிறந்த தங்கை இல்லையே..."

சுந்தரியா விடுகிறவள்.. கணவனின் கண்களைப் பார்த்தே அதில் உள்ள பாசத்தின் சலனத்திக் கண்டு பிடித்து விட்டவள்... அதை அறியாதது போல் பேசினாள்...

"ஆனால்... உங்கள் அம்மாவின் வளர்ப்பாயிற்றே..."

சுந்தரி எடுத்துக் கொடுத்தாள்.. அவள் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை....

"அதைச் சொல்லு... நாங்க இரண்டு பேரும் அடிச்சக்கிட்டாலும் அப்பாவுக்கு... சித்தப்பாவின் மேல் பாசம் போகவில்லை... கோவிலுக்கு இவர் சாமி கும்பிடவா போகிறார்? சித்தாப்பாவைப் பார்க்கத்தானே போகிறார்...!"

சமீப காலமாய்ச் சௌதாமினியுடன் ரகசிய ஆலோசனை நடத்தக் கோவிலுக்குச் சென்று வந்து கொண்டிருந்த சுந்தரி... தன் எண்ணவோட்டத்தைக் கணவன் கண்டு கொள்ளாமல் இருக்க.. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

7

இரவின் தனிமையில்... தணிகாசலத்திடம் சாதாரணமாகக் கூறுவது போல் உருவேற்றினாள் சுந்தரி..

"நமக்கு இருக்கிறது ஒரே பொண்ணு... அதுவும் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசக் கூலி கேட்கும் சாதுப் பொண்ணு... அதன் மனதைப் புரிந்து கொண்ட வாழ்க்கை நடத்தும் குணசாலியான மாப்பிள்ளை எங்கே கிடைப்பார் சொல்லுங்க... கண்ணுக்கு முன்னால் நீங்கள் தூக்கிவளர்த்த பையன் வந்து பெண் கேட்கிறார்... இதற்குப் போய் இவ்வளவு யோசித்தால் நன்றாகவா இருக்கிறது...?"

"எல்லாம் சரி, சுந்தரி.. ஆனால் அந்த பாலசுப்பிரமணியம்..."

"ஏன்... அவருக்கென்ன... பாகம் பிரிப்பதில் அவருக்கு எந்தச் சொத்தின் மீது ஆசையோ... அதை வாய் விட்டுக் கேட்டார்... அது ஒரு பெரிய தப்பா...?"

"அதில்லை சுந்தரி..."

"என்னவோ... என் மனதிற்குப் பட்டதை நான் சொன்னேன்... கேட்பதும்.. கேட்காததும் உங்கள் இஷ்டம்..."

அந்த வார இறுதியில் சிவா மீண்டும் வந்தான்.. வரும் போது.. கை நிறையப் பழங்கள் வாங்கிக் கொண்டு வந்தான்...

"இது எதுக்குப்பா...?" என்றார் தணிகாசலம்...

"சாப்பிடத்தான் மாமா..." என்று சிரிக்காமல் சொன்னான்..

"இந்த வீட்டில் இல்லாத பழங்களா...?"

"அது நான் வாங்கியவை இல்லையே.. பெரியவங்களை பார்க்கப் போகும் போது பழங்கள் வாங்கிக் கொண்டு போக வேண்டும்... என்பது ஒரு பார்மாலிட்டி மாமா..."

"ஓஹோ..."

அன்று இரவு சுந்தரியிடம்...

"பயலுக்கு மரியாதை நிறையத் தெரிந்திருக்கிறது சுந்தரி... அவனுடைய அப்பா போல இல்லை..." என்றார் தணிகாசலம்.

"அதைத்தானே நானும்.... படித்துப் படித்துச் சொல்கிறேன்..." என்று அலுத்துக் கொள்வது போல் சொல்லி வைத்தாள் சுந்தரி...

அடுத்த வாரம் சிவா வரும் போது உல்லன் சால்வை ஒன்றைக் கொண்டு வந்தான்..

"இது எதுக்குப்பா...?"

"நீலகிரியில் என் பிரண்ட் ஒருத்தன் இருக்கிறான் மாமா... அவன் கொண்டு வந்தான்.. குளிர் காலம் ஆரம்பித்து விட்டதே... உங்களுக்கு உபயோகப்படும்ன்னு கொண்டு வந்தேன்..."

வழக்கம் போல் மனைவியிடம் பேசிக் கொண்டிருந்த போது...

"நமக்கு மகன் இல்லை, சுந்தரி... மருமகனைத்தான் மகனாக நினைத்துக் கொள்ள வேண்டும்... உமாவுக்கு வருகிற மாப்பிள்ளை எப்படி இருப்பானோ...." என்று கூறினார் தணிகாசலம்...

"அந்நியத்தில் பெண்ணைக் கொடுத்தால் அப்படித் தான்... துரும்பைக் கிள்ளி மாப்பிள்ளைன்னு வைத்தாலும்... அது நிமிர்ந்து நிற்கும்... அதுபோல பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் மாப்பிள்ளை... நிமிர்ந்துதான் நிற்பார்.. நாம் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும்.. பணிந்துதான் போக வேண்டும்.. நீங்கள் வேறு சுடுதண்ணியைக் காலில் ஊற்றிக் கொள்கிற ஆள்... உங்கள் கோபத்தைத் தப்பித்தவறு மாப்பிள்ளை கிட்ட காட்டி விட்டால்... அவர் அப்படியே... நம் உமாவிடம் அதைத் திருப்பிக் காண்பித்து விடுவார்.. பாவம்.. நம்ம பெண் வாயில்லாப்பூச்சி.. ஊம்... எங்கே போய் வாழ்க்கைப் பட்டு எப்படி இம்சைப் படப் போகுதோ..."

ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்துக் கொண்டே இதைச் சொல்லி விட்டுச் சுந்தரி எழுந்து போய் விட்டாள்... அவளுக்குத் தெரியும்... மகளின் மேல் தணிகாசலம் உயிரையே வைத்திருக்கிறார் என்பது...

சற்று நேரம் கழித்துச் சுந்தரி.. வந்து பார்த்த போது தணிகாசலம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்..

அந்த முறை சிவா வந்த போது தணிகாசலம் சாதாரணமாகக் கேட்பது போல் பேச்சை ஆரம்பித்தார்...

"எனக்கும் உன் அப்பாவுக்கும் ஆகாதுன்னு உனக்குத் தெரியாதா?"

"இப்போதுதான் ஆகாதுன்னு தெரியும்..."

"அந்தப் பகையுணர்வு என் மனதில் அப்படியே இருக்கிறது..."

"அதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீங்க... தூக்கி வெளியில் போட்டு விடுங்க..."

"என்னால் சட்டுன்னு அப்படியெல்லாம் செய்து விட முடியாது சிவா..."

"இப்போது நடக்கக் கூடாதது எதுவும் நடந்து விடவில்லையே, மாமா... அப்பா என்னவோ.. அவர் விரும்பிய ஒன்றைக் கேட்டார்.. நீங்கள் நாசூக்காய் முடியாதுன்னு மறுத்திருக்கலாமே.. அதை விட்டுவிட்டு... வார்த்தைகளைக் கொட்டியது.. நீங்கள்தானே.. நீங்கள் தப்பாக நினைக்காவிட்டால் நான் ஒன்று சொல்லவா மாமா..."

"சொல்லுப்பா..."

"நீங்க பெரியவங்க... வார்த்தைகளைக் கொட்டினால் அள்ள முடியாதுன்னு உங்களுக்குத் தெரியும்... ஆனாலும் அன்றைக்கு வார்த்தைகளை.... நீங்கள்தான் கொட்டினீங்க.. அப்பா உங்களிடம் அது போல் பேசவில்லை...."

சிவா கூறிவதில் இருந்த உண்மை உறைத்ததால்... தணிகாசலம் மௌனமானார்.. சிவா தொடர்ந்து பேசினான்..

"அதனால்தான் சொல்கிறேன்.. வீண்பகையுணர்ச்சி உங்களால் ஏற்பட்டு விட்டது எனும் போது அதை விட்டு

விட்டால்தான் என்ன? மாமா... அம்மா ஒரு விசயத்தை அடிக்கடி சொல்வாங்க.. அவங்க கல்யாணம் நடக்காமல் நீங்க கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு சொல்லிட்டிங்களாம். அம்மா கல்யாணத்திற்கு உங்களுடைய சொந்தச் சேமிப்பிலிருந்துதான் நகை வாங்கிப் போட்டிங்களாம்... அதற்குப் பின்னாலும் அம்மாவிற்கு எல்லாச் சீர்வரிசைகளையும் உங்கள் சம்பளப் பணத்தில் இருந்துதான் செலவழித்தீங்களாம்... அந்தப் பணத்திற்கு நீங்கள் கணக்குப் பார்த்து ஏன்...

பாகப் பிரிவினையின் போது உங்கள் பங்கை அதிகமாகக் கேட்கவில்லை...?"

"என்ன சிவா இப்படிச் சொல்கிறாய்...? சௌதாமினி என் கூடப்பிறக்காவிட்டாலும்... என்னுடனே ஒரே வீட்டில் வளர்ந்த தங்கையில்லையா...? அவளுக்குச் சீர்செய்ததை நான் கணக்குப் பார்ப்பதா...?"

"அதைக் கணக்குப் பார்க்காத நீங்கள் வீட்டு விசயத்தில் மட்டும் ஏன் கணக்குப் பார்த்தீங்க, மாமா...?"

"சிவா... நடந்தது நடந்து விட்டது..."

"அதை மாற்றலாம்.."

"எப்படி...?"

"நீங்கள் ஒன்றும் அப்பாவிடம் என்னை மாப்பிள்ளை கேட்கவில்லையே.. அப்பாதானே உங்களிடம் பெண் கேட்டு வரப்போகிறார்...? அப்புறம் என்ன, மாமா....?"

இந்த வார்த்தைகள் தணிகாசலத்திற்குப் பிடித்துப் போக... ஒரு வழியாய் அவர் சம்மதித்து விட்டார்..

"நீ இவ்வளவு தூரம் சொல்வதால் நான் இதற்கு ஒப்புக் கொள்கிறேன்... ஆனால் உன் அப்பாதான் என் வீட்டுப் படியேறிப் பெண் கேட்டு வர வேண்டும்..."

"ஏன் மாமா... படிகளில் ஏறித்தானே வீட்டுக்குள் வர முடியும்? அவர் வருவார்.."

சிவா தணிகாசலத்தின் பிடிவாதத்தை வெற்றி கொண்ட பின்னால் பாலசுப்பிரமணியத்திடம் பேசினான்...

"ஏன்டா.. போயும்.. போயும்.. அந்தக் குணம் கெட்டவனின் பெண்தானா உனக்குக் கிடைத்தாள்...?"

"என்னப்பா செய்வது..? நான் மனதை வைத்து விட்டேனே..."

"வைத்திருந்தால் எடுத்துக் கொண்டு வா..."

"முடியவில்லையே, அப்பா..."

"அதற்காக..? என்னை அவன் வீட்டுப் படியேறிப் பெண் கேட்கச் சொல்சிறாயா...? என்னாலும்தான் அது முடியாது..."

"ஏனப்பா.. அவர்கிட்டப் பெண் கேட்டுப் போகிறதைப் பத்தியே யோசிக்கிறீங்களே.. அவர் வீட்டிலா நான் போய் வாழப்போகிறேன்...? உங்கள் வீட்டில்தானே அவருடைய பெண் வந்து வாழப் போகிறாள்...? மகளை நினைத்து உங்களிடம் பணிந்து அவர் நடந்துதானே ஆகவேண்டும்.. காலம் பூராவும் அவர் குடுமி உங்கள் கையில்தானே அப்பா இருக்கும்...?"

"ஓ.. நீ அப்படி வருகிறாயா...? ம்ம்ம்... இதுவும் சரியான யோசனைதான்...."

பாலசுப்ரமணியம் இளகிய மனம் படைத்தவர்... மிகமிக நல்லவர். அவர் மருமகளைக் கொண்டாடுவார் என்பது சிவாவிற்கு நன்கு தெரியும்.. அவராவது... மருமகளைப் பணையம் வைத்து.. மைத்துனனின் குடுமியைப் பிடிப்பதாவது... எனவேதான் துணிந்து அவரைத் தூண்டி விட்டான்..

ஒரு நல்ல நாளில் பாலசுப்பிரமணியமும்... சௌதாமினியும். சிவாவுடன்.. தணிகாசலத்தின் வீட்டிற்கு உமாவைப் பெண் கேட்டுப் போனார்கள்..

"வாங்க..." பொதுவாக வரவேற்றார் தணிகாசலம்... பாலசுப்பிரமணியமும் பொதுவாகத் தலையசைத்தார்... அவர்கள் பொதுவாகவே பேசி.. திருமணத்தை முடிவும் செய்துவிட்டனர்... ஊரை அழைத்து நிச்சயதார்த்தம்

நடத்தி... திருமண நாளையும் உறுதி செய்து விட்டார்கள்.. திருமணத்திற்கு இன்னும் பதினைந்து தினங்கள்தான்

பாக்கி இருந்தன.. திருமணப் பத்திரிகை அச்சிட்டு வந்து... ஊரெல்லாம் விநியோகிக்கப்பட ஆரம்பித்து விட்டது.

ஆனால் சிவாவின் மனதில்தான் சஞ்சலம் ஓய்ந்தபாடில்லை.. உமாவின் மனதில் அவன் இல்லையோ என்று அவன் நினைத்தான். எப்போது அவளைப் பார்த்தாலும்.. அமைதியாய்... உணர்ச்சிகள் துடைத்த முகத்துடன்.. அவள் நகர்ந்து விடுவாள்...

'ஏன்..?' அவன் மனதில் கேள்வி எழுந்தது...

'என்னை அவளுக்குப் பிடித்திருக்கிறதா... இல்லையா...' அதை அறியத்தான் அவளை அவன் கடற்கரைக்கு வரச் சொன்னான்... அப்படி வந்தவள்தான்... அருகில் உட்காராமல் ஆறடி தள்ளி அமர்ந்திருந்தாள்...

"ஏன்டி... அவ்வளவு தூரம் தள்ளிப் போய் உட்கார்ந்து இருக்கிற....?"

"எனக்கு இதுதான் வசதி, அத்தான்...."

"எனக்கு வசதியில்லையே..."

"ச்சு... யாராவது பார்த்தால் தப்பாக நினைப்பார்கள்..."

"உன்னைப் பார்த்துக்கூடத் தப்பாக நினைக்கும் பிராணி இந்த உலகத்தில் உண்டா...? சரியான பட்டிக்காடு..."

உமாவிற்கு மனதில் முள் தைத்தது... சிவாவிற்குத் அவளைப் பிடிக்கவில்லையோ என்று அவள் நினைத்தாள்...

'அத்தான் கூட வேலை பார்க்கும் பெண்கள் ஸ்டைலாய் டிரஸ் பண்ணியிருப்பாங்க போல... என்னைப் பார்த்தால் பட்டிக்காடு போலத் தோன்றுகிறது என்றால் என்னைப் பிடிக்கவில்லைன்னுதானே அர்த்தம்...'

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு எழுந்து நின்றாள்... அவளுடன் ஒரு நாள் முழுவதும் அங்கே உட்கார்ந்தாலும்

ஒரு வார்த்தைக் கூட அவளது வாயிலிருந்து பெயராது என்பதை உணர்ந்த சிவாவும் சலிப்புடன் எழுந்து கொண்டான்.

8

கோலாகலமாய் அவர்களது திருமணம் நடந்து முடிந்தது.. பணத்தைத் தண்ணீராய் வாரி இறைத்து இரு வீட்டாரும் திருமணத்தை நடத்தி முடித்திருந்தனர்... ஆனால் தாலிகட்டிய மணமகன் சிவாதான் களையிழந்த முகத்தோடு காணப்பட்டான்...

'பொம்மை மாதிரி வந்து உட்காருகிறாளே.. ஓர் பார்வை... ஓர் நாணம்... எதுவுமில்லையே...'

அவன் மனம் அலைக்கழிந்தது.. அறையின் கதவு திறக்க, திரும்பிப் பார்த்தான்.. கையில் பால் சொம்போடு உமா உள்ளே வந்தாள்...

"ஏன் வெறும் பால் செம்போடு நிறுத்திக் கொண்ட உமா... பால் குடம் தூக்கி வர வேண்டியதுதானே..." அவன் இடக்காகக் கேட்டான்...

"நான் என்ன செய்வது அத்தான்... அத்தை என் கையில் கொடுத்து... கொண்டு போகச் சொல்லி விட்டாங்க..."

"அதையும் உன் அத்தைதான் சொன்னாங்களா? உன் மண்டையில் எதுவும் தானாய் உதிக்கவில்லையா...?"

'நான் என்ன தவறு செய்தேன்...?' உமாவிற்கு விளங்கவில்லை... மலங்க.... மலங்க விழித்தாள்...

"அதை ஏன்டி நேர்த்திக் கடன் போலக் கையில் ஏந்திக் கொண்டு இருக்கிற..."

"வேறு என்ன செய்ய...?"

"அதைக்கூட நான்தான் சொல்ல வேண்டுமா...?"

"எனக்குத் தெரியவில்லையே, அத்தான்..."

அவள் அறியாமையுடன் விழி விரியக் கூறிய விதத்தில் சிவாவின் மனம் மென்மையுற்றது... அவள் கையிலிருந்த பால் செம்பை வாங்கிப் பக்கத்தில் வைத்தான்... அவளது கைபிடித்துக் கட்டிலில் அமர வைத்தான்... அவள் நடுக்கத்துடன் கையை உருவிக் கொண்டாள்...

அவனுக்குள் மீண்டும் கோபம் மூண்டது....

"ஏண்டி..." என்று சீற்றுத்துடன் கேட்டான்...

அவள் நாணம் கலந்த பரபரப்புடன் தரையைப் பார்த்தாள்.. உணர்ச்சி மிகுதியில் உடல் நடுங்க வெகு பிரயத்தனப் பட்டுத் தன் உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்...

"உமா..."

"ம்ம்..."

"நான் கேட்பது காதில் விழுகிறதா... இல்லையா...?"

"ம்ம்..."

"இங்கே பார்..."

அவள் குனிந்த தலையை நிமிரவில்லை... அவனுக்கு எரிச்சல் அதிகமாகியது...

"என்னடி பாருடி..."

அவனது கோபத்தில் அவள் உடல் தூக்கிப்போட்டது... கலவரமாய்த் தலை நிமிர்ந்தாள்.. அவனுக்குள் இரக்கம் சுரந்தது..

"ஏன்டி.. என்னை இந்தப் பாடு படுத்துகிற...?"

"நான் என்ன செய்தேன், அத்தான்..."

'எதுவும் செய்துதான் தொலைக்க மாட்டேன் என்கிறாயே... ஓர் ஓரப்பார்வை... ஒரு கள்ளச்சிரிப்பு... ஒரு நாணத் தொடுகை... ஊஹும்... இது எதுவுமில்லாமல் ஜடம் போல் உட்கார்ந்து இருக்கிறாயே...'

அவன் நகர்ந்து அவளருகில் நெருங்கி அமர்ந்தான்.. அவசரமாய் அவள் தள்ளி அமர்ந்தாள்..

"ஏன்டி...?" மீண்டும் அவன் கோபப்பட்டான்.

அவள் என்னவென்று சொல்வாள்? அவன் கரம் பட்டதும் அனல் மேல் மெழுகு போல் அவள் உருகி விடுகிறாளே... அவனுடைய முகம் பார்க்க விடாமல் வெட்கம் வந்து தடுக்கிறதே...

"சொல்லேன்டி..."

அவள் பதில் சொல்ல முயன்றாள்... நா எழும்பவில்லை...

"உமா... என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா... இல்லையா...?"

'உன்னைத்தவிர... வேறு யாரை எனக்குப் பிடிக்கும்...?' நினைவுகளை வார்த்தையில் சொல்லி விடவேண்டும்... இல்லாவிட்டால் பார்வையிலாவது உணர்த்தி விட வேண்டும்... உமா... இந்த இரண்டையும் செய்யவில்லை... அவளால் அவற்றைச் செய்ய முடியவில்லை..

"இந்தக் கல்யாணத்தில் உனக்கு விருப்பமா.. இல்லையா...?"

"இது என்ன அத்தான் இப்படிக் கேட்டு விட்டிங்க... பிரிந்து நின்ற நம்ம இரண்டு குடும்பமும் ஒன்று சேர்ந்திருக்கிறது... அது இந்தக் கல்யாணத்தால்தானே நடந்தது? அப்புறம் எப்படி எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லாமல் போகும்...?"

இந்த லட்சணத்தில் தன் விருப்பத்தை மறைமுகமாக உணர்த்துவதாக நினைத்து உமா பதில் சொல்லிவிட்டாள்... ஆனால் அந்தப் பதிலால் அவளது வாழ்வே தலைகீழாக மாறிப்போனது..

சிவாவின் முகம் இருண்டு போனது...

'அப்படியானால்... இவள் என்னை விரும்பி இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்கவில்லை... குடும்பங்களின்

ஒற்றுமைக்காக... தியாகம் பண்ணியிருக்கிறாள்...'

அவன் சட்டென்று அவளுக்கு முதுகு காட்டிப் படுத்து விட்டான்... அவளுக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை... அவனது கோபத்திற்கான காரணமும் அவளுக்கு விளங்கவில்லை... அவனை எழுப்பிக் கேட்க விடாமல் நாணம் தடுக்க அவளும் பேசாமல் கட்டிலில் ஓரமாய்ச் சுருண்டு படுத்தாள்...

சிவாவினால் மனதை அமைதிப் படுத்திக் கொள்ள முடியவில்லை... இந்த முதலிரவை எவ்வளவு ஆவலாக எதிர்பார்த்தான்... கடைசியில் இப்படி ஆகிவிட்டதே...

வேதனையுடன் மெல்லப் புரண்டு படுத்தான்... அலுப்பினாலும்.. களைப்பினாலும்.. உமா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்... அதைப் பார்த்தவனுக்கு இன்னும் கோபம் வந்தது...

'எப்படித் தூங்குகிறாள்... இது முதலிரவு அறை என்பது கொஞ்சமாவது இவளுக்கு நினைவு இருக்கிறதா...? கும்பகர்ணி... என் அப்பா.. அப்போதே சொன்னார்... போயும் ... போயும் அந்தப் பெண்ணையா கட்டிக் கொள்ளப் போகிறாய்ன்னு... நான் மடையன்.. காதில் போட்டுக் கொள்ளவில்லை... இப்போது அவஸ்தைப் படுகிறேன்...

அவன் மனதிற்குள் புலம்பித் தீர்த்தான்... தாகம் எடுத்தது... எழுந்து சென்று பால் செம்பை மடமடவென்று காலி செய்தான்.. கண் மூட முயன்று தோற்று... கொஞ்ச நேரம்... அறையில் குறுக்கும்.. நெடுக்குமாய் நடந்தான்... அவன் காலடியோசை கேட்டுக் கண் திறந்த உமா.. அவசரமாய் எழுந்து அமர்ந்தாள்... சிவா மகிழ்ந்து போய் விட்டான்...

'பாவம்... கல்யாண அலுப்பில் தூங்கிப் போயிருப்பாள்.. இப்போது நான் விழித்திருப்பதைக் கண்டதும் எழுந்து கொண்டு விட்டாள்...'

அவள் நாணத்தோடு அவனைப் பார்வையில் அழைப்பாள் என்று நம்பி... அவன் அவளைப் பார்க்க... அவள்...

"என்ன அத்தான்... விடிந்து விட்டதா...?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து கதவைத் திறக்கச் சென்றாள்...

சிவாவிற்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது... நொந்து போனவனாய் அவளைப் பார்த்துத் தலையைப் பிடித்துக் கொண்டான்...

"ஏய்... கதவுகிட்ட ஏன்டி போகிற...?"

"கதவை திறக்கத்தான்..."

"இப்போது போனால் வெளியே இருப்பவங்க என்னடி நினைப்பாங்க...?"

"வேறு எப்போது போவது...? ஓ... குளித்துவிட்டுப் போகச் சொல்கிறீங்களா...? அதுவும் சரிதான்..."

"ஆமாண்டி... இப்ப குளியல் ஒன்றுதான் குறைச்சல்... பேசாமல் அடங்கிப் படுத்து... விட்ட தூக்கத்தை கன்டினியூ பண்ணு..."

"ஏன் அத்தான்....?"

"ஏனா...? ஏன்டி உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா... இல்லை, அறிவைக் கடன் கொடுத்து விட்டாயா...?"

"நீங்க ஏன் என்னைக் கோபித்துக் கொள்வதிலேயே குறியாய் இருக்கீங்க..."

அவனுக்கு அவளது கேள்வியைக் கேட்டுச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை...

"மணி என்னன்னு பாருடி...."

"மணி என்ன...?"

"நடுராத்திரி பன்னிரண்டு மணிடி... இந்நேரம் பேய்கள் தான் குளிக்கும்... காலையில் கல்யாணமான புதுப் பொண்ணு குளிக்க மாட்டாள்..."

அவன் ஜாடையாய்க் கூறியது அவளின் புத்திக்கு எட்டியதாகவே தெரியவில்லை...

"ஓ. அப்படியா... அப்புறம் ஏன்... நீங்கள் தூங்காமல் ரூமுக்குள் குட்டி போட்ட பூனைபோல் சுற்றிக் கொண்டு இருக்கீங்க...?"

"உன்னைப் போன்ற ஒரு மகராசியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறேனே... அதற்காகத்தான்... நீ தூங்கும்மா... தூங்கு..."

"நீங்க இப்படி ரூகுக்குள் நடை பழகினால் நான் எப்படி அத்தான் தூங்க முடியும்....?"

"ஓ... நான் ரூமுக்குள் நடப்பது அம்மணியின் தூக்கத்திற்கு இடைஞ்சலாகப் போய் விட்டதாக்கும்... நான் வேண்டுமானால் வெளியே போய் விடவா....?"

"வேண்டாம்... வேண்டாம்..."

அவள் அவசரமாய்த் தடுத்தாள்... அவன் ஆசையுடன் நின்றான்.

'ஆஹா தடுக்கிறாள்... புத்தியில் இது முதலிரவு என்று உறைத்து விட்டது போல...'

"ஏன்டி வேண்டாம்கிற...?"

"இந்நேரம் வெளியே போனால் பார்க்கிறவங்க என்ன சொல்வாங்க...?"

"ஓ! அதுதான் உன் கவலையா...?"

"ஆமாம்... அத்தான்.. பேசாமல் படுத்துத் தூங்க டிரைபண்ணுங்க... பால் இருக்குமே... அதைக் குடித்துவிட்டுப் படுத்தால் உங்களுக்கு உடனே தூக்கம் வந்து விடும்..."

அவள் எழுந்து பால் செம்பைப் பார்த்தாள்... அது காலியாக இருந்தது.. அவள் யோசனையுடன் விழித்தாள்...

"இதிலிருந்த பால் எங்கே அத்தான்...?"

"மாயமாய் மறைந்து விட்டது... ஆக என்னைத் தூங்க வைக்கத்தான் பால் செம்பைத் தூக்கிக் கொண்டு

வந்தாயா...? அருமையான திட்டம்டி... ம்ம்.. நீ தூங்கும்மா... தூங்கு..."

"நீங்க...?"

"நானும் தூங்கறேன்... வேறு வழி....?"

9

அவன் கண் விழித்த போது, அறைக்குள் வெளிச்சம் பரவியிருந்தது... அருகில் பார்த்தான்... உமா இல்லை..

'ம்ம்... எழுந்து போய் விட்டாளா...?' அவனும் எழுந்து அறையை விட்டு வெளியே வந்தான்... எதிரே மாடிப் படிகளில் தலைக்குக் குளித்து... ஈரத்தலையைத் துண்டினால் இறுக்கிக் கட்டி, கையில் காபிக் கோப்பையோடு வந்து கொண்டிருந்தாள் உமா...

எப்படித்தான் இவளால் இப்படி இயல்பாய் இருக்க முடிகிறதோ என்று ஆச்சரியப் பட்டவனாய் மீண்டும் அறைக்குள் போய் விட்டான் சிவா...

"இந்தாங்க காபி...." அவனிடம் நீட்டினாள் உமா....

வாங்கிப் பருகியபடி அவளைப் பார்வை இட்டான் சிவா...

மங்களகரமான அழகோடு... முகத்தில் ஓர் அறியாமையோடு இருந்தவளை அள்ளிக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது.. நினைத்ததைச் செயலாற்ற.. காலிக் காபித் தம்ளரை வாங்கக் கை நீட்டியவளின் கையைப் பிடித்து அருகே இழுத்தான் சிவா.. அவன் பதறி விலகினாள்...

"என்ன அத்தான் இது...?"

"எது...?"

"நீங்கள் செய்வது உங்களுக்கே நியாயமாய்ப் படுகிறதா...?"

"ஏன்டி... நியாயம் கேட்க வேண்டியது நீயா.. இல்லை நானா?"

"இப்படி பட்டப் பகலில் கையைப் பிடித்து இழுக்கலாமா...?"

"அட... அப்படியா... அப்போ நேற்று ராத்திரி நான் உன் கையைப் பிடித்து இழுக்க.. நீ உன் கையைக் கொடுத்தாயாக்கும்...? நேரம்... காலம் பற்றி உன்னைப் போல் மரமாய்ப் பிறந்த பிறவிகள் பேசக்கூடாது..."

அவளுக்கு நாணம் வந்தது.. சிவா தயக்கமில்லாமல் பேசிய வார்த்தைகள் அவளால் பேச முடியவில்லை....

'உன்னை யார் தூங்கச் சொன்னது...?' என்று தன் மனதிற்குள் கேட்டபடி... தன் வெட்கத்தை மறைக்க முகம் திருப்பிக் கொண்டாள்..

அதுதான் உமாவிற்குப் பாதகமாய் அமைந்தது.. அந்த நாணப் பார்வையை அவள் மறைக்காமல் இருந்திருந்தால் சிவா அவளுடைய மனதைப் புரிந்து கொண்டிருப்பான்... ஆனால் அவள் அதைச் செய்ய விடாமல் வெட்கம் தடுத்தது... அவளது முகம் திருப்புதலை... 'வெறுப்பு' என்று நினைத்து விட்டான் சிவா.... அவளது கையை விட்டு விட்டான்...

'கையை ஏன் விட்டு விட்டான்...' உமாவிற்கு அவனை விட்டுப் போக மனமில்லை... ஆனாலும் லஜ்ஜையுடன் அறையை விட்டு வெளியே ஓடி விட்டாள்.

'என்னடா வாழ்க்கை இது..' முதல் நாள் காலை திருமணமானவன் இப்படிச் சலித்துக் கொண்டான்..

குளித்து.... வேறு உடை உடுத்தி... மாடிப்படிகளில் இறங்கும் போது... பாலசுப்பிரமணியம் எதிரே வந்தார்..

"சாப்பிட்டவுடன் நீ கிளம்ப வேண்டும், சிவா.."

"எங்கேப்பா...?"

"இது என்னடா இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிற...? மறு வீட்டிற்குத்தான்.."

"ஓ..."

ஒற்றைச் சொல்லுடன் டைனிங் ஹாலை அடைந்தான்.. தணிகாசலம் சாப்பிட்டுக் கொண்டிருக்க... அருகே நின்று பார்த்துப் பார்த்துப் பரிமாறிக் கொண்டிருந்தாள் சௌதாமினி. அவள் எதையோ நகைச்சுவையாய்க் கூற... தணிகாசலம் வெடிச்சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தார்... சிவா அவர் அருகில் சென்று அமர்ந்து.. சௌதாமினியின் அருகே நின்று கொண்டிருந்த உமாவைக் பார்த்தான்.. அவள் தன் வழக்கமாய் முகச் சிவப்பை மறைத்துக் கொண்டு வீட்டுக்குள் நகர்ந்து விட்டாள்... சிவா திரும்பித் தணிகாசலத்தின் சிரிப்பைக் கவனித்தான்... அவருடைய சிரிப்பு யாரையும் தொற்றிக் கொள்ளவில்லை.. அவனுக்கு யாரோ உடம்பில் மிளகாயை அரைத்து அப்பினாற் போல இருந்தது...

'ம்ஹும்... கடைசியில் நான் பட்ட பாடு.. என்னையும் உமாவையும் சேர்ப்பதற்காக இல்லை.. என் அம்மாவையும் அவங்க அண்ணனையும் சேர்த்து வைப்பதற்காக என்று ஆகிவிட்டது...

உமா பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வர... சௌதாமினி புன்னகையுடன் மருமகளைப் பார்த்து...

"நீயே சிவாவுக்குப் பரிமாறும்மா..." என்றாள்...

உமாவின் கரங்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன... தணிகாசலத்தின் எதிரில் சிவாவுக்கு அவள் பரிமாறுவதா...? பாத்திரத்தைச் சௌதாமினியிடம் கொடுத்து...

"நீங்களே பரிமாறி விடுங்கள், அத்தை..." என்று சொல்லிவிட்டு... ஏதோ வேலையிருப்பது போல் சமையல் கட்டிற்குள் ஓடிவிட்டாள்...

மகளின் செய்கையில் மனம் நிறைந்து போய்விட்ட தணிகாசலம் வாய் நிறையச் சிரிப்போடு மருமகனைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டார்...

'என்ன பார்வை வேண்டிக் கிடக்கு... 'உங்க மகள் என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்கிறாள்... நீங்க என்னைப்

பார்த்து என்ன செய்ய...?' சிவா மனம் கடுகடுக்கச் சாப்பிட ஆரம்பித்தான்...'

"அப்புறம்... மாப்பிள்ளை...?" தணிகாசலம் கேட்டு வைக்க,

'என்னத்தைச் சொல்லச் சொல்கிறீங்க...' எரிச்சலுற்றான் சிவா...

"சொல்லுங்க, மாமா....

"நீங்க நினைத்ததைச் சாதிச்சுட்டிங்க..."

'ம்ஹும்... நான் நினைத்தது ஒன்று... இங்கு நடந்தது ஒன்று...'

"பிடிவாதமாய் என் மகளைக் கைப்பிடிச்சுட்டிங்க..."

'அதற்குத்தான்... நீ செய்வது நியாயமான்னு...' என்னிடம் நியாயம் கேட்டு விட்டு வந்திருக்கிறாள் உங்கள் மகள்...'

"எனக்கு மனசு பூரா சந்தோசம் நிரம்பி வழியுது, மாப்பிள்ளை..."

'எனக்கு என்னென்னவோ செய்து தொலைக்கிறது... பேச்சை விடுங்க மாமா....'

இன்னும் அவர் அருகில் அமர்ந்திருந்தால், அவர் பேசியே கொல்லுவார் என்று தோன்றியதால், சிவா சட்டென்று கை கழுவ எழுந்து விட்டான்...

"என்ன மாப்பிள்ளை... இப்படிக் குருவி கொறிப்பது போல் கொறிக்கறீங்க..."

'உங்க மகளுடன் நான் பர்ஸ்ட் நைட் கொண்டாடிய லட்சணத்திற்கு இவ்வளவுதான் சாப்பிட முடியும்....'

சிவா மரியாதையின் நிமித்தம்.. ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு... அங்கிருந்து நகர்ந்து விட்டான்.. அவன் கை கழுவி முடிக்கவும் சௌதாமினி அவன் கை துடைக்கத் துண்டைக் கொண்டு வந்து தந்தாள்... அதை அவனிடம் கொடுக்கச் சொல்லிச் சௌதாமினியிடம் கொடுத்து விட்ட உமா அவளின் தோளுக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்தாள்...

'ஏன்... இதை அவள் கொடுக்க மாட்டாளாமா...?' அவன் பார்வையால் அவளை எரித்தான்...

வெட்கத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த உமா துணுக்குற்றாள்...

'ஏன்... அத்தான் இப்படி வெறுப்பாக என்னை பார்க்கிறார்... அவருக்கு என்னைப் பிடிக்கவில்லையா...? அவள் மனம் குழம்பித் தவித்தது...

அவள் சமையலறைக்குள் போய்விட... அவள் பின்னாலேயே வந்த சௌதாமினி...

"என்ன உமா... நீ சாப்பிடவில்லையா...? சாப்பிடவா.." என்று அழைத்தாள்...

"அத்தை..."

"என்னம்மா..."

"அவருடன் வேலை பார்க்கும் பெண்களில் யாரும் நம் அத்தானைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படவில்லையா...?"

"இவன் அடிக்கும் லூட்டிக்கு... ஆசைப்படாமல் எப்படி இருப்பார்கள்...? அது நிறையப் பேர் ஆசைப் பட்டார்கள்... ஆனால் இவன்தான் பிடி கொடுக்க மாட்டேன்னு சொல்லிவிட்டான்..."

"ஏன்... அவர்களில் யாரையும் அத்தானுக்குப் பிடிக்கவில்லையா...?"

"அப்படியில்லை உமா.. எல்லாப் பெண்களும் நன்றாகப் படித்தவர்கள்... கைநிறைய நம் சிவாவிற்குச் சமமாகச் சம்பளம் வாங்குபவர்கள்... நம் குடும்பங்களை விட வசதி அதிகமான குடும்பப் பின்புலம் வாய்ந்தவர்கள்... ஆனால் சிவாதான் மறுத்துவிட்டான்..."

"ஏன்...?"

'உனக்காகத்தான்...' என்று சௌதாமினி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் உமாவின் மனத்தை அரிக்க

ஆரம்பித்திருந்த கவலை நீங்கியிருக்கும்...

ஆனால் சௌதாமினி அதைச் செய்யவில்லை... மாறாக அண்ணனின் உறவு திரும்பவும் கிடைத்து விட்ட நிறைவில்,

"ஏன்னா... எனக்கு என் அண்ணனின் சொந்தத்தை மீட்டுக் கொடுக்கணும்னு என் பிள்ளை நினைத்தான்... அவன் நினைத்ததைச் செய்தே விட்டான்..." என்று பெருமையுடன் கூறிக் கொண்டே மருமகளின் தலையை வருடினாள்...

மனம் கொந்தளிக்க கண்களை மூடி... மாமியாரின் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள் உமா...

சற்று நேரத்தில் மறுவீடு கிளம்பிய புதுமணத் தம்பதி இருவரின் மனத்திலும் புயல் அடித்துக் கொண்டிருந்தது...

மனைவியைப் பார்த்த சிவாவின் விழிகளில் மையல் இல்லை...

'ஸோ... குடும்பப் பகை மறைவதற்காக... என்னை நீ கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாய்...'

கணவன் பார்க்காதபோது... அவனைப் பார்த்த உமா மனம் கலங்கினாள்..

'ஆக... அத்தையும்.. அப்பாவும் ஒன்று சேர்வதற்காக என்னை நீங்கள் கல்யாணம் செய்து கொடிருக்கிறீங்க....'

10

இரு மனங்கள் ஒன்றாய் இணைவதுதான் திருமணம் இங்கே உமாவின் மனதில் சிவா மட்டும் இருந்தான்... அவன் மேல் உயிரையே வைத்திருந்தாள் அவள்...

சிவாவின் மனத்திலும் உமாவே நிறைந்திருந்தாள்... அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தான் அவன்..

ஆனால்.. உமாவின் வாய் திறந்து மனதிலிருப்பதை வெளியே கொட்டத் தெரியாத ஊமை சுபாவம்... அவளின்

காதலை வாய்விட்டுச் சிவாவிடம் சொல்ல முடியாமல் தடுக்க... அவள் தன் காதலை மூடி மறைத்து... மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டாள்...

காதலித்தவளின் இந்தச் சுபாவத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் கோபத்தை வெளியில் கொட்டிய சிவாவின் கொதிப்பைக் கண்ட உமா... அவன் மனதில் தான் இல்லையென்ற முடிவுக்கு வந்து விட்டாள்...

திருமணத்திற்கு முன்பு... மற்றவர்கள் பார்த்து விடுவார்களோ என்று அஞ்சி விலகி... விலகிப் போன உமாவின் சுபாவத்தை... இன்று தவறாகப் பொருள் கொண்டு விட்டான் சிவா...

அவள் மனதில் நான் இல்லை... பிடிக்காமல்தான் அவள் விலகிப் போயிருக்கிறாள் என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

மொத்தத்தில் ஒருவரையொருவர் காதலித்து மறைத்த அந்த இரு மனங்களும் திருமணத்தில் ஒன்று படாமல் வேறுபட்டு நின்றன...

மாப்பிள்ளைக்கும்... பெண்ணிற்கும் ஆரத்தி எடுத்து வீட்டிற்குள் அழைத்துக் கொண்ட சுந்தரியின் மனம் நிறைவடைந்திருந்தது... மகளின் மனதிற்குப் பிடித்தவனையே அவளுக்குக் கணவனாக்கி விட்ட நிம்மதியுடன் அவர்களை ஓடி.. ஓடி... உபசரித்தாள்...

அன்று இரவு... உமா மாடியேறப் போகும் போது அவளருகில் வந்த சுந்தரி.. மகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்... அதிலிருந்த கிலேசம் கண்டு.... அவளுக்கு மனக் கிலேசம் ஏற்பட்டது...

"உமா..."

"என்னம்மா...?"

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிற...?"

"ஒன்றுமில்லை..."

"எதுவாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசிவிட வேண்டும் உமா... என்னிடம் இல்லை... சிவாவிடம்..."

"அம்மா..."

"எனக்கு உன் குணம் தெரியும்.. ஆனால் சிவாவிற்கு என்ன தெரியும்..? இனி நானும்... உன் அப்பாவும் உனக்கு அன்னியர்கள்தான்... சிவாதான் இனி உனக்குத எல்லாமும்... அதைப் புரிந்து கொள், உமா..."

"சரிம்மா..."

உமா மௌனமாக மாடியேறினாள்... சிவா அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருந்தான்... அவனது புறக்கணிப்பு தெளிவாய்த் தெரிய அவள் தயங்கி நின்றாள்... பின் கதவை தாழிட்டாள்...

"அத்தான்..."

"ம்ம்ம்..."

"பால்... அம்மா குடுத்து விட்டாங்க..."

"நேற்று உன் அத்தை கொடுத்துவிட்டாங்க... இன்றைக்கு உன் அம்மா கொடுத்து விட்டாங்களா..? ஏன்... உனக்குத் தானாய் எனக்குப் பால் எடுத்து வர வேண்டுமென்று தோன்றவே தோன்றாதா...?"

"அத்தான்..."

"எனக்கு வேண்டாம்.. நீயே குடி..."

உமாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது அவனது உதாசீனமான பேச்சைக் கேட்டு... உள்ளம் துடித்தாள் அவள்..

'பிடிக்காத பெண்டாட்டி..! வேறு எப்படிப் பேசுவான்..' அவள் கண் கலங்கினாள்...

அவளிடமிருந்து பதில் வராததால் அவன் திரும்பிப் படுத்து அவளைப் பார்த்தான்...

"ஏன்டி.. கண்ணில் என்ன டேமா வைத்திருக்கிற...? சரக்கென்றால் அது எப்படிடீ.. பொலபொலவென்று அழுது தொலைக்கிற...?"

தான் அழுவது அவனுக்குப் பிடிக்கவில்லையென்ற எண்ணத்தில் உமா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

'அழுகிறாளே... அப்போதாவத் நான் அவள் கண்ணீர் துடைக்க வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கிறாளா... இப்போதும் கூட நான் யாரோ ஒருவன் போல.. என்னிடமிருந்து முகம் திருப்பிக் கொள்கிறாளே....' அவனுக்குள் சினம் மூண்டது...

"ஏய்... அழுவதா இருந்தால் வெளியில் போய் ஆசை தீர அழுது முடித்துவிட்டு உள்ளே வா... அழுமூஞ்சி..."

உமா அவசரமாய் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு கணவனிடம் பால் தம்ளரை நீட்டினாள்...

"எனக்கு வேண்டாமென்று சொன்னேனில்லையா..."

'நான் கூடத்தான் உனக்கு வேண்டாம்... அதற்காக என்னை வேண்டாமென்று தள்ளி வைத்து விடுவாயா...?' தன் மனதிற்குள் கேட்டுக் கொண்டே அவனை ஒரு முடிவோடு பார்த்தாள் உமா...

"என்னடி பார்க்கிற...?"

"உங்களுக்கென்று கொடுத்து விட்டதை நீங்கள் குடித்துத்தானே ஆக வேண்டும், அத்தான்... நீங்கள் வேண்டாமென்று மறுத்தால்... இதற்கு என்ன வழி? கீழே ஊற்றி விட மாட்டார்களா...?"

"ஏன் நீ குடிக்க வேண்டியதுதானே..."

தன் வார்த்தைகளில் இருந்த மறைபொருளை அவன் உணர்ந்து கொள்ள மறுக்கிறானே என்று இருந்தது உமாவிற்கு...

"இல்லைஅத்தான். நீங்கள்தான் குடிக்கவேண்டும்.."

"பிடிவாதமா...?"

"இல்லை... இது என் தரப்பு வாதம்..." வாயே திறக்காதவள் இவ்வளவு பேசியது சிவாவிற்கு ஆச்சரியத்தைத் தந்தது...

'இவள் கூட இவ்வளவு பேசுவாளா...?'

அவன் எழுந்து உட்கார்ந்து... மடியில் ஒரு தலையணையை வைத்துக் கொண்டான்... அதில் கையை ஊன்றிக் கொண்டு அவளைப் பார்த்தான்..

"குடிங்க அத்தான்..."

அவள் நீட்டிய பாலை வாங்கி அருந்திக் கொண்டே அவளைப் பார்த்தான் சிவா.. அவள் தலையைக் குனிந்து கொண்டாள்... அவனது பார்வை... தன் மனதில் உள்ளதைச் செயலாற்றி விடலாம் என்ற நம்பிக்கை உமாவிற்கு கொடுத்தது...

மெலிதான... சின்தெடிக் போன்ற... பிரிண்டெட் வேலை செய்த பட்டுச் சேலை ஒன்றைக் கட்டியிருந்தாள் உமா.. அது அவளது மேனியில் நிற்காமல் நழுவியது... கண்களில் அளவாய் அழகாய்... வெளியே தெரியாத வகையில் மை தீட்டியிருந்தாள்... நெற்றியில் வட்ட வடிவமான அரக்கு நிற ஸ்டிக்கர்... அவளது தலையில் நிறையச் சூடியிந்த மல்லிகைப் பூவின் மணம் அந்த அறையெங்கும் நிறைந்து பரவியது... சிவாவின் மனம் மயங்கியது... பாதிப் பாலை மீதம் வைத்து அவளது

மனதை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவளிடம் நீட்டினான்..

"எனக்கு இவ்வளவு போதும்..."

பதில் பேசாமல் வாங்கிக் கொண்டவள்.... மீதப் பாலைக் குடித்தாள்... சிவா ஆச்சரியத்துடன் இமைக்க மறந்து அவளைப் பார்த்தான்...

'அப்படியானால்.. இன்றைக்கு இவள் என்னை ஏமாற்ற மாட்டாள்..'

அவளையே அவன் பார்த்த பார்வையில் தாபம் இருந்தது.. அழைப்பு இருந்தது... லேசாக விழியுயர்த்தி அவனைப்

பார்த்தாள் உமா... அவளது மேனி சிலிர்த்தது... அவனது அழைப்பு அவளுக்குப் புரிந்து போனது...

"உமா..."

"ம்ம்ம்.."

"பேசு.. உமா.."

"என்ன பேச...?"

"எதையாவது பேசு..."

"எதையாவது என்றால்...?"

"எதையாவது பேசு.. இல்லை பாடு..."

பேசுவதை விடப் பாடுவது எளிதான வழியாகத் தோன்றியது உமாவிற்கு... மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தாள் அவள்...

"உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்...

உன்னை... உள்ளமெங்கும்...

அள்ளித் தெளித்தேன்...

உறவினில் விளையாடி...

வரும் கனவுகள் பலகோடி..."

சிவா கிளர்ச்சியடைந்தான்.. அவள் கைகளைப் பற்றினான்.. அவள் விரல்கள் நடுங்குவதை உணர்ந்தான்... மெல்ல அவள் விரல் நீவிப் பயத்தைப் போக்க முயன்றான். அவள் நடுங்கினாலும் தன் கரத்தை உருவிக் கொள்ளவில்லை... அவன் முன்னேறினான்.. அவளைத் தன் அருகில் இழுத்தான்.. பூ மாலையாய் அவன் மேல் விழுந்தாள் உமா... அவனது கரங்கள் அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டன.. தாகத்துடன் அவளது இதழ் தேடிக் குனிந்தான் அவன்... அவள் அவன் மார்பில் முகம் புதைத்துத் தலை தூக்க மறுத்தாள்..

"ஏன்டி..." அவன் வேட்கையுடன் அவளது காதோரம் முணுமுணுத்தான்...

"விளக்கு அத்தான்.." அவன் வெட்கத்துடன் அவன் மார்பில் இன்னும் ஒன்றிக் கொண்டாள்..

"இவ்வளவுதானா...." அவன் மன நிம்மதியுடன் விளக்கை அணைத்தான்..

ஏஸியில், மெல்லிய வெளிச்சத்தில்.. அவள் கோட்டோவியம் போல் வரி வாடிவமாய்த் தெரிய அவன் அவளை ஆவலுடன் நெருங்கினான்.. உமா தன் நாணத்திற்கு அன்று விடுதலை கொடுத்தாள்... சிவாவின் மனைவியாக முழுமையாய் அவனுடன் கலந்து விட்டாள்...

11

காலையில் கண் விழித்த போது சிவாவிற்குள் ஆனந்த அயர்வு இருந்தது.. அவனது கை அருகில் உமாவைத் தேடியது... அதிசயமாய் அவள் தட்டுப்பட்டாள்...

'இவள் இன்னும் எழுந்து கொள்ளவில்லையா....?' ஆச்சரியத்துடன் அவள் மேல் கைபோட்டு நெருங்கிப் படுத்து அவளது முகம் பார்த்தான்... அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்...

முதல் நாள் இரவின் நினைவில் அவளது முகம் பார்த்தவனின் மனதில் இனிமை நிலவியது.. அவள் அவனது விருப்பத்திற்கு இசைந்து கொடுத்தது.. அவன் மனதில் நிழல் படமாய் ஓடியது..

மையலுடன் அவளது நெற்றியில் மெலிதாக முத்தமிட்டான்.. அவளிடம் லேசாக அசைவு தோன்றியது...

"அத்தான்..." என்று தூக்கக் கலக்கத்தில் முணுமுணுத்தாள்..

'தூங்குகிறாள்.. எழுப்ப வேண்டாம்...' என்ற நினைவில் அவன் அவளது தூக்கத்திற்கு இடையூறு விளைவிக்காமல்

விலகிப் படுத்துக் கொண்டு அவளையே பார்த்தான்...

களங்கமில்லாத அவள் முகம்... தூக்கத்தில் மலர்ந்திருந்தது.. அழகான மலர் ஒன்று இதழ் விரித்து அழைப்பதைப் போல் இருக்க.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் ஆசையுடன் அவளை மீண்டும் நெருங்கி... முத்தமிடப் போனான் அவன்... அந்த நேரம் பார்த்து அறைக்கதவு தட்டப்பட, விழித்து எழுந்த உமா... வெகு அருகாமையாய் தெரிந்த சிவாவின் முகத்தைப் பார்த்ததும்... மலர்ந்து சிரித்தாள்...

அந்தச் சிரிப்பில் குதூகலம் கொண்டவனாய் அவள் மேல் முகம் புதைத்து இறுகக் கட்டிக் கொண்டு முத்தமிட்டான் சிவா.. அறையின் வெளிச்சத்தை அப்போது தான் கவனித்த உமா... அவசரமாய் அவனின் கரத்தை விலக்கி எழுந்தாள்...

"ஏன்டி..."

"விடிந்து விட்டது அத்தான்..."

"விடியட்டுமே..."

"ச்சு.. பகலில் போய்..."

"பகலில் உன்னைச் சும்மாகூடத் தொடக்கூடாதா...?" மீண்டும் அவன் குரலில் எரிச்சல் தென்படவும் அவள் மறுப்பைக் கைவிட்டாள்... மௌனமாய் அவன் கரங்களுக்குள் புகுந்து கொண்டாள்..

'அட... இவளுக்கு இது கூடத் தெரியுமா...'

அவளின் அருகாமையைக் கண்டு மனதிற்குள் அதிசயப்பட்டுக் கொண்டே... அவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்... அறைக்கதவு மீண்டும் தட்டப்பட... இப்போது உமா அவனிடமிருந்து முற்றிலும் விலகி... அறைக் கதவின் அருகே ஓடினாள்.. கதவைத்திறந்தாள்... சுந்தரி காபிக் கோப்பைகளுடன் நின்றிருந்தாள்...

"ஸாரிம்மா... தூங்கிவிட்டேன்... குற்ற உணர்வுடன் உமா கூறவும், சுந்தரி சிரித்து விட்டாள்.."

"பைத்தியம் போல பேசாதே..." மகளிடம் காபியைக் கொடுத்து விட்டு அவள் போய்விட்டாள்..

அறைக் கதவைத் தாழிட்டுவிட்டு... சிவாவின் அருகே வந்து அமர்ந்து காபிக் கோப்பையை நீட்டினாள்... அவன் எழுந்து அமர்ந்து.. அவளைப் பருகுவது போல் பார்த்துக் கொண்டே காபியைப் பருகினான்.. அவனது பார்வையில் முகம் சிவந்த உமா தலையணையைத் தூக்கி அவனைச் செல்லமாக அடித்தாள்...

"ஏய்ய்... நீ அடிக்கவெல்லாம் செய்வாயாடி..."

"ம்ம்ம்... சொன்ன பேச்சு கேட்கவில்லையென்றால் இப்படித்தான் செய்வேன்..."

"நான் சொன்ன பேச்சை நீ கேட்காவிட்டால் நான் என்ன செய்வேன் தெரியுமா...?"

சிவா அவளை அருகே இழுத்துக் காதோடு சொன்னான்.. அவள் முகம் சிவந்து.. அவன் மார்பில் கை வைத்துத் தள்ளிவிட்டாள்... அவன் சிரித்துக் கொண்டே அவளது கைப் பிடித்து இழுக்க முனைய... அவள் அவனது கைகளுக்குள் அகப்படாமல் விலகி ஓடி... குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்..

சற்று நேரத்தில் அவள் உடைமாற்றிக் கீழே சென்று விட.. சிவா... எழுந்து கொள்ள மனமில்லாமல் எழுந்து குளிக்கப் போனான்..

அன்று மாலை... அவளை அஷ்டலட்சுமி கோவிலுக்கு அழைத்துக் கொண்டு போனான்... வெளியே போய் வரலாம் என்று அவன் அழைத்ததும்.. அவன் எங்கே அழைத்துச் செல்கிறான் என்று கூடத் தெரியாமல் கூட வந்த உமா.. கோவிலைக் கண்டதும் சந்தோசப்பட்டாள்...

"தேங்க்யு அத்தான்.. நீங்க இங்கே என்னைக் கூப்பிட்டுக் கொண்டு விடுவீங்கன்னு நான் நினைத்தே பார்க்கவில்லை..."

"இப்போது பார்த்து விட்டாயா.. வா..."

அவள் அவனை விட்டு விலகி நடக்காமல் சேர்ந்து நடந்தது அவன் மனதிற்கு இதமாக இருந்தது.. அஷ்டலட்சுமிகளையும் வணங்கிவிட்டு.. கடற்கரையோரம் சென்று அமர்ந்தார்கள்.. இப்போது அவள் விலகி அமராமல் அவனுடன் ஒட்டியே அமர்ந்தாள்..

"என்னடி இன்றைக்கு.. ஆச்சரியத்திற்கு மேல்... ஆச்சரியமாய் அள்ளித் தருகிற...?"

"ஏன் அத்தான் இப்படிக் கேட்கறீங்க?"

"கோவிலுக்கு வந்தால் நூறடி தள்ளி வருவ... கடற்கரையில் உட்கார்ந்தால்.. பத்தடி தள்ளி உட்காருவ.... இன்றைக்கு என்ன இவ்வளவு தாராளம்...?"

"ச்சு.. உளறாதீர்கள்..."

"உளறுகிறேனா... நானா...?"

"ஆமாம்.. இது உளறல் இல்லாமல் வேறு என்னவாம்..?"

"நீ தெளிவாய்ப் பேசுகிற ஆள்தான்... நீயே ஏன்னு சொல்லிவிடும்மா..."

"அன்றைக்கும்... இன்றைக்கும் வித்தியாச மில்லையா?"

"அன்றைக்கு வெள்ளிக்கிழமை.. இன்றைக்கு வியாழக்கிழமை... நீ அதைச் சொல்கிறாயா...?"

"மக்கு.. மக்கு..."

"யார்... நானா...?"

"ஆமாம்... வேறு யாராம்...?"

"எல்லாம் என் நேரம்டி..."

"நேரம்தான்... அன்றைக்கு நீங்கள் யாரோ... நான் யாரோ..."

"அடிப் பாவி..."

"இன்றைக்கு நீங்கள் என் ஹஸ்பெண்ட்... நான் உங்களுடைய வொய்ப்..."

"ஆஹா... என்ன ஒரு கண்டுபிடிப்பு..."

"அன்றைக்கு நாம் சேர்ந்து நிற்கக் கூடாது... இன்றைக்கு விலகி நிற்கக் கூடாது இரண்டுமே மற்றவர்கள் பார்வைக்கு வித்தியாசமாகத்தான் படும்..."

சிவாவிற்குச் 'சுருக்' கென்றது...

'அப்படியானால்... மற்றவர்களுக்காகத்தான் இவள் என்னுடன் இசைந்து பழகுகிறாளா...? எனக்காக இல்லையா...? என்னை விரும்பி இல்லையா...

அவன் மௌனமாய்க் கடலை வெறித்தான்... அமைதியடைந்த அவன் மனம் மீண்டும் அலைகடலாய்ப் பொங்கியது...

அவனது முகமாற்றத்தை உமா கவனித்து விட்டாள்.. கணவன்.. மனைவி.. பந்தத்தை நினைவு படுத்தியதும் அவன் முகம் சிணுங்குகிறான் என்று நினைத்தாள்.

'இது விடுபட முடியாத பந்தம் என்பதால் திகைக்கிறானா... இனிக் காலம் முழுவதும் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று மலைக்கிறானா...'

அவள் மனதிற்குள் ஆயாசப்பட்டாள். அவன் மனதை மாற்ற என்ன வழியென்று யோசித்தாள்...

"நேற்று வரை....

நீ யாரோ... நான் யாரோ...

இன்று முதல்

நீ வேறோ.. நான் வேறோ..."

அவள் சன்னக் குரலில் அவனை நோக்கிப் பாட... சட்டென்று மனதின் அலைகள் மறைத்து.. மனம் சமனப் பட்டு விட்டதாய் உணர்ந்தான் சிவா...

அவளது தோள் மீது அவனது கரம் படிந்தது... அவள் அவனருகில் நகர்ந்து உட்கார்ந்து கொள்ள.. அவன் இன்னும் மயங்கிப் போனான்... அவளது காதோரம்

குனிந்து கிசுகிசுப்பாய்ப் பேசி... அவளை முகம் சிவக்க வைத்தான்..

சிவாவின் முகச் சிணுக்கம் காணாமல் போய்விட்டதைக் கவனித்தாள் உமா... அவளுக்கு ஆறுதலாக இருந்தது.. அவனது மனம் ஆடாமல் இருக்க வேண்டுமானால்... அவனை நெருங்கி நிற்க வேண்டும்... விலகி நிற்கக் கூடாது என்பது புரிந்து கொண்டிருந்தாள் அவள்...

எழுந்து நடக்கும் போது.. அவளது விரல்களோடு அவனது விரல் பிணைய... அவள் தன் கைகளை விலக்கிக் கொள்ளாமல்... அவன் கையோடு கோர்த்துக் கொண்டாள்.. வீட்டிற்குத் திரும்பியதும்... சற்று நேரம் டிவி பார்த்தார்கள்.. உமா சுந்தரிக்கு உதவி செய்யச் சமையலறைக்குப் போய்விட்டாள்..

இரவு உணவை அவர்கள் பேசிக் கொண்டும்.. சிரித்துக் கொண்டும்.. சாப்பிட்டு முடித்தனர்.. வீடு கலகலப்பாக இருப்பதை உணர்ந்த தணிகாசலம் மனநிறைவுடன் சிவாவைப் பார்த்துவிட்டுச் சுந்தரியைப் பார்க்க அவள்

'நான்தான் சொன்னேனில்லையா...' என்பது போல் பதிலுக்குப் பார்த்தாள்...

அன்று இரவு... முதல் நாளை விட அதிகமான நெருக்கத்தைக் கணவனுக்கு வழங்கினாள் உமா...

## 12

வண்ண வண்ண மலர்கள்... ஒவ்வொன்றும் ஒருவித அழகுடன் இருக்க அந்தப் பூக்களுக்கு மத்தியில் ஒரு பூவைப் போலச் சுற்றி வந்து கொண்டிருந்தாள் உமா... அவளது தோள். மீது சிவாவின் கரம் படிந்து நின்றது... அதைப் புன்னகையுடன் உணர்ந்து ரசித்தபடி... அவனுடன் இணைந்து நடந்தாள்... சளசளவென்று பேசிக் கொண்டிருந்த சிவாவிற்குப் பதிலாக... அமர்த்தலான பார்வையுடன் கூடிய அமைதியான புன்னகை ஒன்றைத் தந்தபடி அவள் நடந்து கொண்டிருந்தாள்..

"உமா... இங்கிருக்கும் பூக்களிலேயே ரொம்பவும் அழகான பூ எது...? சொல்லு, பார்ப்போம்..."

"தெரியுமே..."

"தெரிந்தால் சொல்லுடி..."

"ம்ம்... என்னைத்தான் சொல்வீங்க..."

"ஹைய்யோ... எப்படிடீ...?"

"ம்ம்... ஹனிமூனில் எல்லோரும் புதுப் பெண்டாட்டியிடம் இப்படித்தான் சொல்வாங்களாம்..."

"அட... இப்படியெல்லாம் யார் உன்னிடம் சொன்னது...?"

"என் பிரண்ட்ஸ்தான்..."

"உனக்கு பிரண்ட்ஸ் கூட இருக்கிறாங்களா...?"

"என்னங்க இது... எனக்கு பிரண்ட்ஸ் இருக்கமாட்டாங்களா?"

"இருக்கலாம்.. இருக்கலாம்... இருந்தால் தப்பில்லை.."

"ஹ... என்ன ஒரு தாராள மனசு..."

"என் மனசைப் பற்றி உனக்குத்தான் தெரியவே மாட்டேன்கிறதே... ம்ஹூம்...."

"என்ன தெரியணுமாம்..."

"எவ்வளவோ தெரிய வேண்டியிருக்கு... என்ன செய்வது... நீதான் உன் காதை எனக்குக் கொடுக்கவே மாட்டேன் என்கிறாயே...."

உமா வாயைப் பொத்திக்கொண்டு 'களுக்' என்று சிரித்தாள். அவள் சிரிக்கும்போது.. அவளுடைய கண்களும் சேர்ந்து சிரிப்பதை வியப்புடன் ரசித்தான் அவன்.

"அது எப்படி உமா... நீ சிரிக்கும்போது கண்களும் சேர்ந்து சிரிக்கிறதே..."

"நான்தான் சொல்லி விட்டேனே... இந்தச் சமயத்தில் அப்படித்தான் இருக்கும்.."

"எந்தச் சமயத்தில்...?"

"இந்த ஹனிமூன் சமயத்தில்..."

"ஓ... நீ அப்படி வருகிறாயா...?"

"போங்க அத்தான்.. உங்களுக்கு எல்லாமே கிண்டல்தான்..."

"அது சரி.. ஆமாம்... நீ எதற்கு அப்படி ஒரு சிரிப்பு சிரித்தாய்...?"

"அதுவா...?"

"அதுதான்..."

"என் காதை எப்படி உங்களிடம் கழட்டிக் கொடுப்பதாம்?"

"அட..ஊட்டிக்கு வந்த பின்னால்.. என் பொண்டாட்டி வாயைத் திறந்து இந்தப்போடு போடுகிறாளே... எல்லாம் இந்த மலைகளின் மகாராணி செய்த மாயமா...?"

"மலைகளின் மகாராணியா...?"

"ஆமாம்... ஊட்டியை மலைகளின் மகாராணின்னும்... கொடைக்கானலை... மலைகளின் இளவரசின்னும் சொல்வாங்களே... அது தெரியாதா, என் மக்குப் பெண்டாட்டிக்கு...?"

"நான் ஒண்ணும் மக்கில்லை... டிகிரியில் காலேஜ் பர்ஸ்ட் நான்தான் தெரியுமா...?"

"ஊம்... என் பெண்டாட்டிக்கு ரோசம் வந்து விட்ட தாக்கும்..."

"இப்படி மட்டம் தட்டினால் எனக்கு ரோசம் வராதாக்கும்..."

அவள் செல்லச் சிணுங்கலுடன் பேசுவதைக் கண்டு பலத்த சிரிப்புடன் அவளை இன்னும் அணைத்துக் கொண்டான் சிவா..

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குத் திரும்பியதும் உமா... ஜன்னலோரம் சென்று வெளியே

தெரிந்த இயற்கை அழகை ரசிக்க... பின்னாலேயே வந்த சிவா.. அவளது தோள் தொட்டு அணைத்து... அவளது உச்சந் தலையில் தன் முகவாயைப் பதித்தான்...

"என்ன பார்க்கிற உமா...?"

"ம்ம்... அந்த மலை முகட்டில் மேகம் இறங்குகிறதே.. அதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.. எவ்வளவு அழகாக இருக்கிறது, பார்த்தீங்களா...?"

"உன்னை விடவா... அது அழகு...?"

"நான்தான் சொல்லி விட்டேனே... நீங்கள் இப்போது இப்படித்தான் பேசுவீங்கன்னு..."

"எப்போதும் இப்படித்தான் பேசுவேன்.. இவ்வளவு நேரமும் வெளியே சுற்றி விட்டுத்தானே வந்தோம்..? இங்கே வந்தும்... இயற்கையை ரசிக்கக் கிளம்பி விட்டாயே..."

"இங்கிருக்கும் ஒவ்வொரு நொடியும் இயற்கையை ரசிப்பேன், அத்தான்... இந்த மாசு மருவில்லாத அழகும்... சுத்தமான காற்றும் நம் சென்னையில் கிடைத்து விடுமா...?"

"நீ வேற... ஊட்டியும்... கொடைக்கானலும்... தன் ஒரிஜினல் அழகைக் கொஞ்சம்... கொஞ்சமாய் இழந்து கொண்டு வருகின்றன... போட்டி போட்டுக் கொண்டு இங்கே கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன... பிஸினெஸ்ன்னு வந்துவிட்டால் இயற்கை அழகைப் பற்றி யார் கவலைப்படப் போகிறாங்க..."

அவன் பேசுவதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தவளின் கன்னத்தில் சிறு முத்தம் பதித்தான் அவன்... அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்...

சூரியன்... மேற்கில் இறங்கிக் கொண்டிருக்கிறது... அந்தி வானின் பொந்நிறக் கதிர்கள்... தண்ணீரின் மேல் விழுந்து பளபளத்தன... அந்த ஏரியில் ஆங்காங்கே மிதந்து கொண்டிருந்த படகுகள் பார்ப்பதற்கு ஓவியம் போல் இருந்தன..

உமா பின்னலை முன்னால் விட்டுக் கொண்டு... சிவாவின் எதிரே அமர்ந்திருக்க.. சிவா படகைத் துடுப்பைப் போட்டுச் செலுத்திக் கொண்டிருந்தான்... உமா கையால் தண்ணீரைத் தொட்டு அளைந்து கொண்டிருந்தாள்... அவளது குதூகலம் சிரிப்பாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது...

"ஏன் உமா... எனக்கொரு சந்தேகம்..."

"அதைப் போய் என்னிடம் கேட்கறீங்களே..."

"உன்னிடம் கேட்டால் என்ன...?"

"நீங்க தான் வாயைத் திறந்தாலே என்னை 'மக்கு'ன்னு சொல்கிறீங்களே... மக்கிடம் போய்... யாராவது சந்தேகம் கேட்பாங்களா...?"

"சமயம் பார்த்துப் போட்டுத்தாக்குகிற.. ஊம்... நீ யாரு...?"

"உங்க பெண்டாட்டி..."

"ஹா ஹா..."

"உண்மையைச் சொன்னதற்கு இவ்வளவு சந்தோசமா...?"

"சொல்வது என் பேசா மடந்தைப் பெண்டாட்டியாயிற்றே..."

"இப்படியே எனக்குப் பெயர் வையுங்கள்... ஆமாம்.. எதுவோ சந்தேகம் கேட்டிங்களே..."

"அதுவா...? அது ஏன் உமா... ஹனிமூன்னு சொன்னாலே இப்படி கொடைக்கானல்.. ஊட்டி... டார்ஜிலிங்... சிம்லான்னு கிளம்பி வருகிறாங்க..."

உமாவிற்கு மெலிதான வெட்கம் வந்து விட்டது... அவளது முகச் சிரிப்பை ரசித்துக் கொண்டிருந்தவனின் கண்கள்... கள்ளச் சிரிப்பைச் சிரித்தன...

"என்னைக் கேட்டால்... எனக்கென்ன தெரியுமாம்..."

"உனக்கு உண்மையிலேயே தெரியாதா...?"

"பொய்யாகவும் தெரியாது..."

"ஊம்... எனக்குத் தெரியும்.. நான் சொல்லவா...?"

"வேண்டாம்..."

"இல்லை... சொல்வேன்..."

"நான் காதைப் பொத்திக் கொள்வேன்..."

"இங்கே துடுப்பை போட்டு விட்டு நான் கிட்ட வர மாட்டேன்கிற தைரியம்தானே..."

"ஆமான்னு வைத்துக் கொள்ளுங்களேன்..."

"ரூமிற்கு வா... பேசிக் கொள்கிறேன்..."

இப்போதே... காதோரம் அவனது மீசை குறுகுறுக்கும் உணர்வில் ரகசியமாய்ச் சிலிர்த்துக் கொண்டாள் உமா.. அவனது பார்வை அதைக் கண்டு கொண்டதை உணர்ந்தவள்.. மனதை மறைக்க வாய்க்குள் ஏதோ பாடலை 'ஹம்' செய்தாள்...

"உன் மனதுக்கு மட்டும் நீ பாடும் பாடல் கேட்டால் போதுமா உமா... எனக்கும் கேட்க வேண்டாமா...?"

"அதற்கு நான் என்ன செய்வது...?"

"வாய் விட்டுப் பாடுவது..."

"நானா..."

"நீதான்..."

"மாட்டேன்..."

"நான் கேட்டால் நீ பாட மாட்டாயா?"

"எனக்குப் பாட வராது, அத்தான்..."

"அதை நான் சொல்ல வேண்டும்... நீ பாடு..."

"அத்தான். பிளீஸ்..."

"உமா... ப்ளீஸ்..."

தவிப்புடன் அவனைப் பார்த்தாள்.. அவன் பிடிவாதமான பதில் பார்வை பார்த்தான்... வேறு வழியின்றி அவள் பாட ஆரம்பித்தாள்...

"உன்னை ஒன்று கேட்பேன்...

உண்மை சொல்ல வேண்டும்...

என்னைப் பாடச் சொன்னால்...

என்ன பாடத் தோன்றும்...?"

சிவாவிற்கு அவளது புத்திசாலித்தனம் கண்டு ஆச்சரியம் வந்தத.. அவன் பார்க்க... கண் முன் வளர்ந்தவள் அவள்... சிவாவின் முன்னால் வாயைத் திறக்கவே பயப்படுவாள்... இன்று பாட்டிலேயே கேள்வி கேட்கிறாள்...

"நிலவில்லா வானம்...

நீரில்லா மேகம்...

பேசாத பெண்மை...

பாடாது உண்டை...

கண்ணை மெல்ல மூடும்...

தன்னை எண்ணி வாடும்..

பெண்ணைப் பாடச் சொன்னால்...

என்ன பாடத் தோன்றும்.....?"

அவளுடைய சுபாவத்தை அவன் முன் பிட்டு வைத்தாள் அவள்... அவளது குரலினிமையில் கவரப்பட்டவன்.. அந்தப் பாடலின் இசையில் மயங்கினான்... பாடல் சொல்லிய சேதியைக் கேட்கத் தவறினான்...

தேநிலவின் போது... அவர்கள் ஊட்டியில் தங்கியிருந்த அந்தப் பதினைந்து நாள்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள நிறைய நேரமும்... தருணமும் இருந்தது...

ஆனால்... அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர்.. புதிரான அவள் சுபாவத்தை விட்டு...

கூட்டுக்குள் இருந்து வெளிவந்த நத்தையாய் உமா இருந்த போதே சிவா அவளை முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்... தவறி விட்டான்...

13

சிவாவின் மனதிலிருப்பதைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் உமாவும்... அந்தச் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு விட்டாள்..

கணவனின் கோபத்தைத் தணிக்க.. தன் அருகாமையைத் தர வேண்டும் என்பதை மட்டுமே புரிந்து வைத்திருந்தவளுக்கு உடல் சார்ந்த உணர்வுகளை விட... மனம் சார்ந்த உணர்வுகளே காலம்... காலமாய் நிலைத்து நிற்கும் என்று புரியாமல் போய்விட்டது..

அவர்கள் தேநிலவுக் காலத்தில் மிகச் சந்தோசமாகவே இருந்தனர்.. ஒருவரை ஒருவர் ரசித்தனர்.. நேசித்தனர்.. ஆனால் அதை இயல்பாய் எடுத்துக் கொண்டு... மனம் விட்டு ஒருவரிடம் ஒருவர் சொல்லாமல் சென்னைக்குத் திரும்பி வந்தார்கள்...

சிவா வேலையில் ஜாயின் பண்ணிவிட்டான்... உமா வீட்டுக்கு ஏற்ற மருமகளாக... சௌதாமினியுடன் ஒன்றிப் போய்விட்டாள்... அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டார்கள்..

ஆறு மாதங்கள் ஓடின... உமா தாய்மை அடைந்திருந்தாள்... செய்தியைக் கேள்விப்பட்ட சுந்தரியும்... தணிகாசலமும்... மகளைப் பார்க்க... பலகாரங்கள் செய்து எடுத்துக் கொண்டு வந்தனர்.. வாந்தி அதிகமாக இருந்ததால் உமா.. தளர்ந்து போய் இருந்தாள்.. சுந்தரிக்கு மனம் தாங்கவில்லை....

"சௌதா... உமாவை எங்கள் வீட்டில் கொஞ்ச நாள் வைத்திருந்து விட்டு அனுப்புகிறோமே..."

சுந்தரி கேட்கவும்...செதாமினி தயங்கினாள்...

"என்ன சௌதா....?"

"சிவா என்ன சொல்வானோ... தெரியவில்லையே அண்ணி..."

"இது ஊரில... நாட்டில நடக்கிற வழக்கம்தானே சௌதா... மசக்கைக்காரப் பெண்ணுக்கு வாய்க்கு ருசியாய்ச் சமைத்துப் போட்டு அவள் உடம்பைத் தேற்றி விடுவது... பெத்தவங்க செய்கிற செய்கைதானே... நான் புதிதாய்க் கேட்டு விடவில்லையே..."

"அவன் வரட்டும் அண்ணி... அவனிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு மருமகளை அனுப்பி வைக்கிறேன்..."

"என்ன சௌதா இது.. யாரோ... எவரோ போல இப்படிப் பேசுகிற...? இதோ இருக்கிற திருவான்மியூருக்கு கூப்பிட்டுக் கொண்டு போக... இவ்வளவு யோசனையா...?"

"நான் அதற்காகச் சொல்லவில்லை, அண்ணி....?"

"பின் வேறு எதற்காகச் சொல்கிற...? இதற்காகவா.. அந்நியத்துச் சம்பந்தம் வேண்டாமேன்று சொல்லிவிட்டு... உன் வீட்டில் பெண் கொடுத்தேன்...?"

சுந்தரி முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளவும்.. சௌதாமினிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை... மகன் வராமல் மருமகளை அனுப்பி வைக்க

அவளுக்கு விருப்பமில்லை... அதே சமயம்... வருடக்கணக்கில் பகைமை பாராட்டிப் பிரிந்திருந்து... இப்போதுதான் சேர்ந்திருக்கும் அண்ணன் மனைவியின் மனதிதாங்கலையும் அவளால் எதிர்கொள்ள முடியவில்லை.... பிரச்னைக்கு முடிவு காண... மருமகளைத் துணைக்கு அழைத்தாள் சௌதாமினி...

"உமா! அண்ணி உன்னை அவங்க வீட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டுபோய் ஒரு வாரம்... பத்துநாள் கூட வைத்திருந்து அனுப்புகிறேன்னு சொல்கிறாங்க... நீ என்னம்மா சொல்கிற....?"

உமாவிடம் சௌதாமினி தனியாக இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும்... அதை விட்டுவிட்டு உமாவின் தாய் எதிரிலேயே கேட்டு வைத்து விட்டாள்..

பெற்ற தாயின் முன்னால்... முடியாது என்று சொல்ல உமாவால் முடியவில்லை... அதோடு.. அந்த நேரத்தில் அவள் தாயின் மடியைத் தேடினாள்.. சௌதாமினி அருகிலிருந்தாலும் அவளிடம் மாமியார் என்ற மரியாதை வைத்து அதிக உரிமை எடுத்துத் தனது உடல் உபாதைகளைக் கூற உமாவால் முடியவில்லை.. சிவா விடம் பேசவே தயக்கமாய் இருந்தது.. அவனிடம் தன் உடல் வேதனைகளைக் காட்டாமல் சிரித்துக் கொண்டே உமா இருந்ததால் சிவாவிற்கும் அவளுடைய பிரச்னைளைத் தெரிந்து கொள்ள இயலாமல் போய்விட்டது.....

மகளின் வாய் திறவாத குணம் அறிந்தவள், சுந்தரி... மகளின்  முகம் பார்த்தே அவளது உடல் நோயைக் கண்டு அதற்கு மருத்துவம் செய்வாள் அவள்...

"என்ன உமா முகத்தைச் சுழிக்கறே... தலையை வலிக்குதா....?"

"என்னடி... முகம் வாடியிருக்கு... எங்கே கிட்டவா... அடிப்பாவி... காய்ச்சல் நெருப்பாய்க் கொளுத்துதே... வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டாயா....?"

"ஏன்டி... வயிற்றைப் பிடிச்சுக்கிட்டு இருக்க...? வயிற்று வலியா...?" எல்லாவற்றையும் சுந்தரியாகத் தான் கண்டு பிடிக்க வேண்டும்.. மகளின் முன்னால் கத்திக்கத்தி... மகளை இந்த நிலைமைக்கு ஆளாக்கிவிட்டு.. அவளின் ஊமையாகி விட்ட சுபாவத்தை அமைதியென்று கொண்டாடும் கணவரை நினைத்து மானசீகமாய்த் தலையில் அடித்துக் கொண்டே மகளை மருத்துவமனைக்கு அழைத்துச் சொல்வாள் அவள்...

அன்றும் அப்படித்தான்... மகளின் முகத்திலிருந்து அவளது உடல் உபாதைகளைக் கண்டு கொண்ட சுந்தரி.. பிடிவாதமாய் மகளை அழைத்துக் செல்ல விரும்பி வாதாடினாள்...

14

உமா தர்ம சங்கடத்துடன் தாயைப் பார்த்தாள்...

"அம்மா... அவர் வரவும் சொல்லி விட்டு வருகிறேனே...."

இதையே மகளுடைய சம்மதமாய் எடுத்துக் கொண்ட சுந்தரியின் முகம் மலர... சௌதாமினியின் முகம் விழுந்து விட்டது...

'என்னதான் பார்த்துப் பார்த்துச் செய்தாலும்... மாமியார்... மாமியார்தான்... பெற்றதாய்... பெற்றத்தாய்தான் போல...' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்...

ஹாலில் தங்கையின் கணவரிடம் வெகு பாசமாகத் தணிகாசலம் பேசிக் கொண்டிருக்க.... பாலசுப்ரமணியம் அவரைவிடப் பாசத்துடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்..

"நம்ம ரத்தினவேலை ஒரு கல்யாணத்தில் பார்த்தேன்..."

"அப்படியா...?"

"பணம் ஏறிவிட்டது போல.. ஆள் பவிசாத் தெரியறான்..."

"ஆமாம் மச்சான்... ஐந்து விரல்களிலும் மோதிரம் போடுவாங்கன்னு கேள்விப் பட்டிருக்கிறேன்... அப்படிப்பட்ட ஆள் இவன் ஒருவனாகத்தான் இருப்பான்.. அது எப்படி மச்சான் பெருவிரலுக்குக் கூட மோதிரம் செய்து போட்டிருக்கிறான்...?"

பாலசுப்ரமணியம் அப்பாவியாய்ச் சந்தேகம் கேட்க, தணிகாசலம் இடி முழங்குவதைப் போல சிரித்து வைத்தார்... சௌதாமினியுடன் பேசிக்கொண்டிருந்த சுந்தரி...

"உன் அண்ணனுக்குக் கோபம் வந்தாலும் அடக்கி வாசிக்கத் தெரியாது... சிரிப்பு வந்தாலும் அடக்கி வாசிக்கத் தெரியாது... அவர் சிரிப்பைக் கேட்டாயா..? எட்டு ஊருக்குக் கேட்பது போல் சிரிக்க இவரால்தான் முடியும்...." என்று தாழ்ந்த குரலில் நாத்தனாரிடம் சொன்னாள்...

வெகு நேரம் தங்கை கணவருடன் பேச்சு வார்த்தை நடத்தியும் மருமகன் வராததைக் கண்ட தணிகாசலம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்... உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தார்...

"சுந்தரி..."

"என்னங்க..."

"இன்னும் மாப்பிள்ளையைக் காணோமே..."

"உமா போன் போட்டாள்... சுவிட்ச் ஆப்ன்னு வருது..."

"சரி... அவர் வரும்போது வரட்டும்... நாம் உமாவைக் கூப்பிட்டுக் கொண்டு கிளம்பலாம்..."

"அப்படியா சொல்கிறீங்க...?"

"ஆமாம்.. நேரமாகிவிட்டது... கர்ப்பிணிப் பெண்ணைக் காலா காலத்தில் வீட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டு போய்விட வேண்டும்..."

"உமா.. மாப்பிள்ளையிடம் சொல்லிவிட்டுத்தான் வருவேன்னு சொல்கிறாளே..."

"அப்படியா சொன்னாள்...? உமா...உமா..."

உமா அவசரமாய் தந்தையின் முன்னால் வந்து நின்றாள்...

"என்னங்கப்பா..."

"நாம் கிளம்புவோம்மா... மாப்பிள்ளையிடம்... சௌதாவும்.. அவருடைய வீட்டுக்காரரும் சொல்லிக்கு வாங்க...."

தணிகாசலத்தின் வார்த்தையை மறுத்துப் பேசி அறியாத உமா... தலையை ஆட்டினாள்...

அன்று இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்பிய சிவா... தன் வழக்கப்படி... உமாவை அழைத்துக் கொண்டே வீட்டிக்குள் வந்தான்...

"உமா... உமா..."

அவனுக்காகக் கதவைத் திறந்து விட்ட சௌதாமினிக்குச் சலிப்பாக இருந்தது...

"ஏன்டா.. கண்ணுக்கு முன்னால் நிற்கிற பெற்ற தாயை உனக்குத் தெரியாது... நேற்று வந்த பெண்டாட்டி மட்டும் நினைவில் இருக்கும்..."

"ஏம்மா.. இப்ப நான் என்ன தப்பாக் கேட்டுவிட்டேன்... உமாவைக் கூப்பிட்டேன்... அவ்வளவுதானே... அது ஒரு பெரிய குற்றமா? ஏன்... நான் அவளைக் கூப்பிடக் கூடாதா...?"

"கூப்பிடப்பா.. தாராளமாகக் கூப்பிடு... ஆனால் வீட்டில் இல்லாதவள்.. எப்படி.. நீ கூப்பிட குரலுக்கு ஓடோடி வருவாள்...?"

மாடிப்படியில் ஏறிக் கொண்டிருந்த சிவா... வேகத்தடை வந்தது போல்.... அப்படியே நின்றான்... தாயைத் திரும்பிப் பார்த்தான்..

"வீட்டில் இல்லையா...? வீட்டில் இல்லாமல் எங்கே போனா...?"

அவளுடைய அம்மா வீட்டிற்குப் போய்விட்டா..."

சிவாவுக்கு முகம் கருத்து விட்டது... அவனிடம் சொல்லாமல் உமா பிறந்த வீட்டிற்குப் போய் விட்டது அவனது மனதைப் பாதித்தது.

"என்னிடம் சொல்லமால் போய் விட்டாளா...?"

"என்னிடா செய்வது? அவளுடைய அம்மா பிடிவாதமாய்க் கூப்பிட்டாங்க.. நான் சிவாவரட்டும்ன்னு சொன்னதுக்கு என்மேல் கோபப்பட்டாங்க... சரி.. உமாவின் வாய் மொழியால் அவளே வரமாட்டேன்னு சொல்லி விட்டால்... பிரச்னை தீர்ந்ததுன்னு பார்த்தால்... அவள் என் எதிரிலேயே வருகிறேன்னு சொல்லிவிட்டாள்... அப்புறமும் நான் தடுத்தால் எனக்குத்தானே கெட்ட பெயர்... இருந்திருந்து இத்தனை வருசம் கழித்து உன் கல்யாணத்தால்... இரண்டு குடும்பமும் ஒன்று

சேர்ந்திருக்கு... அதில் போய் முகம் முறித்துப் பேசுவது எப்படி சிவா.. ?"

சிவா பதில் சொல்லமல் மடமடவென்று மாடியேறி விட்டான்.. அறையைத் திறந்தான்... உமா இல்லாத வெறுமை அவனைத் தாக்கியது.

## 15

உமா காலையில் கண் விழித்ததும் அவசரமாய்ச் சிவாவின் கைபேசிக்கு போன் செய்தாள்... அழைப்பொலி போனதும் அணைக்கப்பட்டது... மீண்டும் முயற்சித்தாள்... மீண்டும் அணைக்கப்பட்டது... பல முறை அவனுடன் பேச முயன்று தோற்றவள் வேறு வழியின்றி வீட்டுத் தொலைபேசியில் அழைத்தாள்... சௌதாமினிதான் எடுத்தாள்.

"ஹலோ..."

"அத்தை...நான்தான் உமா..."

"சொல்லு உமா.. நைட்.. பத்திரமாய்ப் போய் விட்டிங்களா...?"

"ம்ம்... வந்து விட்டோம் அத்தை.. அவர் வீட்டில் இருக்கிறாரா..?"

"யாரைக் கேட்கிறாய்? சிவாவையா...?"

"ம்ம்ம்..."

"வீட்டில்தான் இருக்கிறான்.. கம்பெனிக்குப் போக நேரமாகுதுன்னு அவசரமாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்..."

"அத்தை.. அவரிடம் போனைக் கொடுங்களேன்..."

"ஏன்... அவனுடைய செல்பேனில் கூப்பிட்டுப் பேச வேண்டியதுதானே... இவ்வளவு நேரமாகவா அவனிடம் நீ பேசாமலிருந்த... தப்பு உமா... நேற்று நைட்டே நீ வீட்டில்

இல்லையென்று தெரிந்ததும் அவன் ரொம்பக் கோபப்பட்டான்.."

"நான் காலையிலிருந்தே டிரை பண்ணுகிறேன்.. ரிங் போய்... கட் ஆகிவிடுகிறது..."

சௌதாமினிக்கு மகனின் கோபம் புரிந்துவிட்டது.. அவள் என்ன சொல்வது என்று தெரியாமல் டைனிங் ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மகனைத் திரும்பிப் பார்த்தாள்... அவன் தண்ணீரைக் குடித்தவாறு புருவம் உயர்த்தினான்...

"நேற்று நைட்டே நீ அவனைக் கூப்பிட்டுப் பேசியிருக்க வேண்டியதுதானே..."

"லேட்டானதால் தூக்கம் வந்து விட்டது, அத்தை..."

மசக்கையாக இருந்தவளுக்குத் தூக்கம் வருவது இயற்கை... ஆனால்... மருமகள் தன்னை அவளுடைய தாயின் முன்னால் விட்டுக் கொடுத்து விட்டதை நினைத்துக் கொண்டிருந்த சௌதாமினிக்கு அந்தச் சிந்தனை வரவில்லை.

"நேற்று நைட்டு போனவள்... இன்றைக்கு காலையில் அவனுக்குத் தகவல் சொல்லப் போன் பண்ணினால்.. அவன் எடுப்பானா, உமா?"

"அத்தை..."

"இரு... அவனைக் கூப்பிடுகிறேன்..."

சௌதாமினி போன் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு மகனை அழைத்தாள்... அவள் பேசுவதையும்... அதற்கு சிவா மறுமொழி கூறுவதையும்... உமா தன் செல்போனில் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"சிவா..."

"என்னம்மா..."

"உமா லைனில் இருக்கிறாள்... எழுந்து வா.."

சிவா எழுந்து கை கழுவிக் கொண்டு வாசலை நோக்கிப் போனான்...

"சிவா.. வாசல் பக்கம் ஏன் போகிற...?"

"கம்பெனிக்கு நேரமாகி விட்டது..."

"உமா லைனில் இருக்கிறாளேடா... ஒரு வார்த்தை பேசு..."

"அந்த ஒரு வார்த்தையை... என் சார்பா... நீயே பேசி விடு..." சிவா போய் விட்டான்...சௌதாமினி போனை எடுத்தாள்...

"உமா.. சிவாவுக்கு அவசர வேலையாம்... கம்பெனிக்குப் போய்விட்டான்... நீ அவன் செல்லுக்கு டிரை பண்ணு..."

சௌதாமினி போனை வைத்துவிட.. உமா அசைவற்று... தன் கையிலிருந்த செல்போனைப் பார்த்தபடி... வெகுநேரம்.. அமர்ந்திருந்தாள்..

நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த பாலசுப்ரமணியம் மனைவியிடம் கடிந்து கொள்ளும் குரலில் வினவினார்.

"சிவாவை ஒரு அதட்டல் போட்டு நிறுத்தி.. உமாவிடம் பேச வைத்திருக்க வேண்டாமா, சௌதாமினி.."

"எதற்காகப் பேச வைக்க வேண்டும்?இல்லை... எதற்காகன்னு கேட்கிறேன்... உமாவை என் மருமகளாகவா நான் பார்த்துக் கொண்டேன். பெற்ற மகளை விட மேலாகப் பார்த்தக் கொண்டேன்.. அவள் என்னடான்னா அண்ணி கூப்பிட்டதும் பின்னாலே போய் விட்டாளே.."

"பாசம்தான்.. இருந்தாலும்.. அவங்க பெற்ற தாய் இல்லையா?"

"அப்படியொரு வேறுபாடு உமாவின் மனதில் இருக்கிறதுதானே.."

"அதற்காக.. நீ அவளை இப்படிப் பழி வாய்குகிறாயா"

"பழி வாங்குவதா? நானா..? அதுவும்.. வாயும் வயிறுமாய் இருக்கும் என் மருமகளைப் போய் நான் பழி வாங்குவேனா..? அதெல்லாம் பெரிய வார்த்தை...

ஆனாலும் கல்யாணமாகிப் புருஷன் வீட்டிற்க வந்து விட்ட நினைவு உமா மனதில் வர வேண்டும்... நீங்க என் அண்ணனுடன் சண்டை போட்டபோது நான் யார் பக்கம் நின்னேன்...? நீங்க கோபமா அங்கேயிருந்து வெளியேறியபோது நான் உங்கள் பின்னால் வந்தேனா இல்லையா..?"

"அதுக்கென்னடி இப்ப..?"

"உமாவும்.. சிவாதான் பெரிதுன்னு நினைக்கணும்.. அவள் பின்னால் சிவாவை வரவைக்கணும்னு நினைக்கக் கூடாது.. ஏன்னா நானும் ஒற்றைமகனைப் பெற்றவள்... என் அண்ணனும் ஒற்றை மகளைப் பெற்றவர்.. வீட்டோடு மாப்பிள்ளையாய் இருன்னு என் அண்ணன் சொல்லிவிட்டால்.. நம் சிவா கேட்டுக் கொள்ள வேண்டியதுதானா...?"

## 16

சௌதாமினியின் அடிமனதில் இருந்த பயம் வெளிபட்டதும், பாலசுப்ரமணியம்.. அதை மறுத்துப் பேச முடியாமல் யோசனையில் ஆழ்ந்தார்.

தணிகாசலம் டவுனில் இரண்டு வீடுகள் கட்டியிருந்தார். பரம்பரையாய் வந்த வீட்டையும் அவரே எடுத்துக் கொண்டிருந்தார். அதிக அளவு சொத்து சுகம் உள்ளவர்கள்.. ஒற்றை மகளை.. மாமனார் வீட்டிற்குப் போய் வாழ்க்கை நடத்த அனுமதிப்பார்களா..? மருமகனை வளைத்து... வீட்டோடு மாப்பிள்ளையாய் ஆக்கிக் கொள்வதைத்தானே விரும்புவார்கள்?

தணிகாசலம்.. மகள் தாய்மை அடைந்திருப்பதைக் காரணமாக வைத்து.. மகளை அழைத்துக் கொண்டு போனதற்கு.. அடிப்படைக் காரணம்.. இதுவாக இருக்குமோ என்ற சந்தேக வித்து பாலசுப்ரமணியத்தின் மனதில் விழுந்து விட்டது...

"என்னடி சௌதா.. இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே..."

"ம்ம்.. இப்படியும் நடக்க வாய்ப்பிருக்குன்னு ஒரு யோசனை... அதை உங்களிடம் சொன்னேன்..."

"உன் அண்ணன் செய்தாலும் செய்வான்டி.. அதனால் வாய்ப்பிருக்குன்னு பூசி மெழுகாதே.."

"யார் பூசி மெழுகியது..? இதை உங்களுக்கு எடுத்துச் சொன்னதே நான்தான்.."

"சிவா ஏன் கோபமாய் இருக்கிறான்...?"

"ஆயிரம்தான் அவன் தங்கை மகனாவே இருந்தாலும் வீட்டுக்கு வந்து விட்ட மருமகன் இல்லையா..? அவனுக்கு மகளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்த பின்னால்... மகள் மேலேயிருக்கும் உரிமையை.. என் அண்ணனும்.. அண்ணியும்.. விட்டுக் கொடுக்கணுமா இல்லையா...?"

"நீ சொல்வது நியாயமான பேச்சுத்தான்.."

"அவன் வந்தபின்.. அவனிடம் ஒருவார்த்தை சொல்லி விட்டு உமாவை அனுப்புகிறேன்னு சொல்கிறேன்.. ஆனால் அண்ணி பிடிவாதமாய் மகளிடம் வான்னு சொல்கிறாங்க.. இவளாகட்டும்.. என் புருஷன் வந்து பெர்மிசன் தந்தால் வருகிறேன்.. இல்லைன்னா.. வரமாட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லாமல்.. பூம்பூம் மாடு போல தலையை ஆட்டிக்கொண்டே அவங்க பின்னால் போகிறாள். அப்புறம்.. அவனுக்குத்தான் என்ன மரியாதை..? அவனைப் பெற்ற நமக்குத்தான் என்ன மரியாதை..?"

"அட.. ஆமாம்டி.. இது ஏன் எனக்குத் தோன்றவில்லை?"

"உங்களுக்கு நான் எடுத்துச் சொன்னால்தான் தோன்றும்.."

"அடேங்கப்பா.. ஒன்னைத் தெரியாமல் கேட்டுவிட்டால்.. எப்படியெல்லாம் அலட்டிக் கொள்கிற.. இப்ப.. சிவாவை இப்படியே விட்டு விடலாம்கறியா..?"

"ஆமாம்.. இது புருஷன் பொண்டாட்டிக்குள் நடக்கும் தகராறு.. நான் இப்படி.. உங்களைக் கேட்காமல் என் பிறந்த வீட்டிற்குப் போனால்.. நீங்க என்னைச் சும்மா விட்டு விடுவீங்களா..?"

"நீதான் அப்படிப் போனதில்லையே.."

"போயிருந்தால்...?"

"நீயாகத் திரும்பி வந்தாலும்.. உன்னைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டேன்.."

"இந்த கோபமும்.. ரோசமும்.. உங்களிடமிருந்து உங்கள் மகனுக்கு அப்படியே வந்திருக்கிறது.. உங்களுக்கு ஒரு நியாயம்.. உங்கள் மகனுக்கு ஒரு நியாயமா...? அவன் மனதுக்கு எது சரியென்று படுகிறதோ... அதையே அவன் செய்யட்டும்.. நாம் நல்ல மாமனார்.. மாமியாராக இருப்போம்.. ஆனால் புருஷன் பொண்டாட்டி விசயத்தில் தலையிடாமல் தள்ளி இருப்போம்.."

அதன்படியே சௌதாமினியும்.. பாலசுப்ரமணியமும் மகனைக் கண்டிக்க முனையவில்லை.. சிவாவிற்கும்.. உமாவிற்கும் இடையே இருக்கும் ஊடலை அறியாதவர்கள் போல் அமைதி காத்தார்கள்...

உமா மகேஸ்வரி தவித்துப் போனாள்.. சிவாவோ செல்போனை எடுக்க மறுத்தான்.. வீட்டிற்குப் போன் பண்ணினால் சௌதாமினியோ.. இல்லை.. பாலசுப்ரமணிமோதான் எடுத்துப் பேசினார்கள்.. அவனைக் கேட்டால்.. ஒன்று, அவன் இல்லையென்ற பதில் வந்தது.. இல்லைவிட்டால்.. அவன் பேச மறுத்து விட்டதாகப் பதில் கிடைத்தது..

இரண்டாவது பதிலில் நொறுங்கிப் போனாள் உமா.. ஏற்கெனவே சாப்பிடப் பிடிக்காமல் கிடந்தவள்.. இப்போது முழுமையாய்ச் சாப்பாட்டைத் தவிர்த்துப் பட்டினி கிடக்க.. சுந்தரி.. அதட்டி உருட்டி அவளைச் சாப்பிட வைத்தாள்..

பேச வழியின்றிப் போன உமா.. செல் போனின் வழி அவனுக்குக் குறுஞ்செய்திகளை அனுப்ப ஆரம்பித்தாள்..

'ஏன் இந்த மௌனம்..?

எனக்கும் தெரியவில்லை..

இதை உடைக்கும் வழிமுறையும்

எனக்கும் பிடிபடவில்லை..'

தன் செல்போனில் வந்த செய்தியைப் படித்த சிவாவின் புருவம் உயர்ந்தது.. பதில் செய்தி அனுப்பினான்.

'உடைப்பதில் நீ கைதேர்ந்தவள்..

மனதை உடைப்பதில்..

வாழ்க்கையை உடைப்பதில்..

உறவை உடைப்பதில்..

மௌனம்.. என்ன உனக்கு மட்டும்

சொந்தமான ஒன்றா?

இனி.. எனக்கும் அதுவேதான் சொந்தம்....'

செய்தியைப் படித்த உமா.. பித்துப் பிடித்தவள் போல் ஆனாள்.

17

"எனைத் தேடும் மேகம்..

சபை வந்து சேரும்..

செவியில் விழுமோ..

ஊமையின் ராகம்..

எது வந்த போதும்..

திரை வந்து சேரும்.."

டிவியில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க.. உமாவின் பார்வை இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருப் பதைக் கண்ட சுந்தரி மனக் கிலேசம் கொண்டாள்.. மகளின் அருகே அமர்ந்து அவள் முடிகோதினாள்.. அதற்காகவே காத்திருந்தது போல் உமா.. தாயின் மடியில் முகம் புதைத்தாள்..

"உமா.. எழுந்து இந்த ஜூஸைக் குடி.."

"எனக்கு வேண்டாம்மா.."

"அப்படிச் சொல்லக் கூடாது.. குமட்டிக் கொண்டு வந்தாலும்.. கண்ணை மூடிக்கொண்டு.. குடித்துவிட வேண்டும்..."

'உமா எழுந்து அமர்ந்து.. ஜூஸை வாங்கி மெதுவாகக் குடித்தாள்..'

"உமா.."

"ம்ம்..."

"உனக்கு என்னடா மனக் கவலை.."

"ஒன்றுமில்லையே.."

"பொய் சொல்லாதே.. உன் முகமே சரியில்லை.. எதையோ மனதில் போட்டு உழட்டிக் கொண்டிருக்கிற.. என்னிடம் சொல்லக் கூடாதா..? இந்த மாதிரி சமயத்தில் மனதில் கவலை இருக்கக் கூடாது உமா.."

தாயின் வார்த்தையைக் கேட்டதும் உமாவிற்குக் கண்ணில் நீர் அரும்பியது.. இந்தக் கனிவும்.. எண்ணமும்.. ஏன் அவளைக் கைப் பிடித்தவனிடம் இல்லை என்று நினைத்து மனம் வருந்தியது..

"என்னடா.. உன் மனதில் என்ன குறை.. அம்மா விடம் சொல்லக் கூடாதா..?"

"அம்மா.."

"சொல்லும்மா.."

"நான் எங்க வீட்டுக்குப் போகட்டுமா..?"

எங்க வீடு.. சுந்தரியின் இதயத்தை இந்த வார்த்தை சூட்டுக்கோல் கொண்டு தாக்கியது... அவள் அதிர்ச்சியுடன் மகளைப் பார்த்தாள்..

"உமா... எங்க வீடுன்னு எதைச் சொல்கிற..? உன் புருஷன் வீட்டையா..? அப்போ.. இது உன் வீடு இல்லையா...? நீ பிறந்து.. வளர்ந்த இந்த வீடு உனக்குச் சொந்தமில்லையா..? நீ அன்னியமா.. அசலா...?"

உமாவின் மனம் துடித்தது.. அவளால் தாயின் துயரத்தைத் தாங்க முடியவில்லை..

"அம்மா.. நான் வாய் தவறிச் சொல்லி விட்டேன்ம்மா.."

"மனதில் இருப்பதுதானே வாயில் வருகிறது.."

"அப்படி இல்லையம்மா.."

"உன் மனதில் உன் வீட்டிற்குப் போக வேண்டும்ன்னு தோன்றி விட்டதுன்னா.. இதுக்கு மேல நான் என்ன சொல்ல..? என்னதான் உயிரையே உன் மேல் வைத்தாலும்.. உனக்குக் கல்யாணமாகிப் போய்விட்ட பின்னாலும் நான் உன் மேல் உரிமை கொண்டாடக் கூடாதுதான்.."

"அம்மா..ப்ளீஸ்.."

உமா தன் தாயின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள்.. விடுபட முடியாத பாசவலையில் சிக்கியவளின் துயரம் கண்ணீராய் வெளிப்பட்டு.. சுந்தரியின் மடியை நனைத்தது.. மகளின் கண்ணீதைக் கண்டு. சுந்தரி தன்னை அமைதிப் படுத்திக் கொண்டாள்.. தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட உமாவைச் சமாதானப் படுத்தினாள்...

"உமா.. அழாதே.. இந்த மாதிரி நேரத்தில் அழுதால் உன் உடம்பு தாங்காது.. வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும் அது ஆரோக்கியத்தைக் கொடுக்காது.."

உமா ஒரு வழியாய்ச் சமாதானமானதும்.. சுந்தரி.. அவளது முகம் துடைத்து விட்டு.. சாப்பிட வைத்தாள்.. அதற்கு மேல் மகளிடம் மேற்கொண்டு அவள் பேச்சை வளர்த்தவில்லை..

சமையல் செய்தவாறே.. உமா ஏன் தன் வீட்டிற்குத் திரும்ப விரும்புகிறாள் என்று யோசித்தாள்.. வாணலியில் காய்களைப் போட்டு வதக்க ஆரம்பித்தவளுக்கு.. பளிச்சென்று அந்த உண்மை மனதிற்குள்.. உறைத்தது..

சுந்தரியும் பெண்தானே.. ஒரு குழந்தையைப் பெற்றவள்தானே.. தாய்மை அடைந்திருக்கும் சமயத்தில் பெண் மனம் கணவனைத் தேடுவது இயல்பான ஒன்றுதானே..

உமாவை நிச்சயம் சௌதாமினியின் பிரிவு தாக்காது.. ஆனால் சிவாவின் பிரிவு தாக்கும்தானே.. இந்தச் சிவாவும் தான் ஏன் இத்தனை நாள்களில் ஒரு முறை கூட மனைவியைப் பார்க்க வரவில்லை... அதுவும் அவள் வாயும்.. வயிறுமாக இருக்கும் இந்த நேரத்தில்.. அவன் வராமல் இருப்பது சாதாரணமான விசயம் இல்லையே..

சுந்தரி அடுப்பை அணைத்துவிட்டு ஹாலுக்கு வந்து பார்த்தாள்.. உமா இலக்கில்லாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டு கண்களில் பெருகும் நீரைக் கையால் துடைத்துக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தாள்...அது கட்டுப்படாமல் பெருகிக் கொண்டே இருந்தது.. மகளின் துயரம் கண்டு சுந்தரியின் மனம் கொதித்தது..

## 18

சுந்தரிக்குத் தன் மேலேயே கோபம்.. கோபமாக வந்தது.. உமாவின் மென்மையான குணம் அறிந்தும்.. அவளது மனதைப் புண்படுத்தி விட்டோமே என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்.. மகளைத் தேற்ற அழைத்து வந்தது இப்படி எதிர்மறையாய் ஆகிவிட்டதே என்ற வருத்தத்துடன் மகளின் அருகே அமர்ந்து அவளின் முடி கோதியவள்..

"உமா..." என்று மென்மையாய் அழைத்தாள்..

"அம்மா..."

"சிவாவிடம் போனில் பேசினாயா...?"

என்னவென்று இதற்குப் பதில் சொல்வது...? அவனிடம் போனில் பேசியது உண்மைதான்.. அதனால் 'ஆமாம்' என்ற பாவனையில் தலையசைத்தாள்.

"உன்னைப் பார்க்க ஏன் வரவில்லைன்னு கேட்டாயா...?"

"கேட்கவில்லையம்மா.."

"ஏன்...?"

"அவர் என் போனை எடுக்கவே இல்லையே..."

"ஓ..."

சுந்தரிக்கு நொடிப்பொழுதில் மகளின் துயரத்திற்கான காரணம் விளங்கி விட்டது..

"உன் அத்தையிடம் பேசினாயா...?"

"பேசினேன்ம்மா.. ஆனால்.. அவங்க கூப்பிட்டும் அத்தான் போன் பேச வர மாட்டேன்னு சொல்லிவிட்டார்.."

சுந்தரி மௌனமாக யோசித்தாள்.. உமாவின் உடல் நிலையின் ஆரோக்கியத்தை விட.. அவளின் மன ஆரோக்கியம் நன்றாக இருக்க வேண்டியதுதான் இந்தச் சமயத்தில் முக்கியம் என்று அவளுக்குப் பட்டது..

மாலையில் தணிகாசலம் வந்ததும்.. அவருக்குக் காபி கொடுத்து விட்டு..

சீக்கிரம் டிரெஸ் சேன்ஜ் பண்ணிவிட்டு கிளம்புங்க... என்றாள்..

"எங்கேடி.."

"உமாவை அவள் வீட்டில் விட்டுவிட்டு வரலாம்..."

"ஏன் சுந்தரி..? அவள் உடம்பு வீக்கா இருக்குன்னு டாக்டர் சொன்னாங்களே.. அப்புறம் எதற்காக அவளை இப்போதே அங்கே கொண்டு போய் விடணும்னு சொல்கிற.. அவள் இன்னும் கொஞ்ச நாள் இங்கேயே இருக்கட்டுமே.. அவள் உடல் நிலை தேறியதும் கொண்டு போய் விடலாமே.."

"இல்லைங்க.. இது மாதிரி சமயத்தில் அவள் பக்கத்தில் அவளுடைய புருஷன் இருக்கணும்.."

"அதுக்கென்ன சுந்தரி.. சிவாவிற்கு ஒரு போனைப் போட்டு இங்கே வர வைத்துவிட்டால் போகிறது.. இங்கேயிருந்து வேலைக்குப் போய் வரட்டும்.."

சுந்தரிக்குச் சிரிப்பதா.. இல்லை அழுவதா என்று தெரியவில்லை..

"ஏங்க.. உங்க தங்கை வீட்டில் நாம்தான் நம்ம பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கிறோம்.. உங்க தங்கை மகனை நம் வீட்டில் கல்யாணம் செய்து கொண்டு வரவில்லை.."

"அதெல்லாம் அந்நியம்.. அசலில் பார்க்க வேண்டியது சுந்தரி.."

"சொந்தமாய் இருந்தாலும் பார்க்கணும்.. இல்லாவிட்டால் நம்ம பொண்ணு வாழ்க்கைதான் பாதிக்கப்படும்.."

"என்னடி சொல்கிற.. சௌதா ஏதாவது மாமியார் கொடுமை பண்ணுகிறாளா..? நான் போய் இரண்டில் ஒன்று பார்த்து விட்டு வரவா.."

"ராமா.. உள்களைத் திருத்தவே முடியாது.."

"ஏன்டி அலுத்துக்கிறே... திருத்துகிற அளவுக்கு நான் என்ன செய்தேன்..?"

"உமா என் வயிற்றில் இருந்தபோது நீங்கள் என்னை எந்த அளவுக்குப் பார்த்துக் கொண்டிங்கன்னு நினைவிருக்கிறதா..?"

"உள்ளங்கையில் வைத்துத் தாங்கினேனே.."

தணிகாசலம் 'அந்த நாள்.. ஞாபகம்.. நெஞ்சிலே வந்ததே..' என்ற பாவனையில் கண்கள் மின்ன.. மனைவியைக் காதலோடு பார்த்தார்..

"இந்த மாதிரி.. பின்னால் நம் மகளும்.. மருமகனும் நினைத்துப் பார்க்க வேண்டாமா..?"

"நான்தான் சிவாவை இங்கே வரவழைக்கிறேன்னு சொன்னேனே.."

"உங்களை என் அம்மா வீட்டில் வந்து இருக்கச் சொன்னால் நீங்கள் இருப்பீங்களா..?"

"அது எப்படிடீ.."

"முடியாதில்ல.. அதுதான் ஆண் பிள்ளைக் கர்வம்.. உங்களுக்கு இருக்கும் இந்தக் கர்வம்.. நம் மருமகனுக்கும் இருக்கும்தானே.."

தணிகாசலம் வாயை இறுக மூடிக் கொண்டார்.. கணவனைச் சமாளித்து விட்டு சுந்தரி.. உமாவிடம் வந்தாள்..

"உமா.. அப்பா.. உன்னை உன் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வரலாம் என்கிறார்.. கிளம்பும்மா.."

"நிஜமாவா...?"

உமா முகம் பளிச்சிட.. அவசரமாய் எழுந்தாள்.. மகளின் உற்சாகத்தைக் கண்டு சுந்தரியின் முகம் விசனிக்க ஒரு கணம்.. உமா தடுமாறி நின்று தாயின் முகம் பார்த்தாள்..

"அம்மா.."

சுந்தரி கனிவுடன் மகளின் கன்னத்தில் தட்டினாள்..

"போ.. உமா.. போய்க் கிளம்பிவா.."

தாயின் முகத்தில் இருந்த வருத்தமில்லாத புன்னகையைக் கண்டு மகிழ்வுடன் கன்றுக் குட்டி போல் துள்ளிக் கொண்டு உள்ளே ஓடினாள் உமா..

சற்றுமுன் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தவள்.. இப்போது மான் குட்டி போல்.. துள்ளிக் கொண்டு ஓடுவதை பார்த்த சுந்தரிக்கு 'இதுதான் காதலா..' என்று தோன்றியது..

சற்று நேரத்தில்.. உமா தன் பெற்றோருடன் சிவாவின் வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள்..

சிவா அப்போதுதான் கம்பெனியிலிருந்து திரும்பியிருந்தான்.. உடை மாற்றிக் குளியலறைக்குள் புகுந்தவன்.. முகத்தை டவலால் துடைத்தபடி.. வெளியே வந்தபோது.. அறைக்குள் அவனுக்கு முதுகு காட்டியபடி.. சுவர் அலமாரியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள் உமா..

'வந்து விட்டாளா..' அவன் மனதில் பரவசம் உதித்தது.. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்.. செல்போனைக் கையில் எடுத்து.. யாருடனோ.. மும்முரமாய்ப் பேச ஆரம்பித்தான்.. அவனின் குரல் கேட்டுத் திரும்பிய உமா.. அவன் முகம் பார்த்து.. சூரியனைக் கண்டு மயங்கி நிற்க்கும் தாமரைப் போல் மயங்கி நின்றாள்.. அவன் அவளைப் பாராதது போல் பார்ப்பதை அறியாத வளாய்த் தயங்கி நின்றாள்..

"அத்தான்.."

"ம்ம்ம்.."

"நான் வந்து விட்டேன்..."

"இதை ஏன் என்னிடம் சொல்கிற..?"

"இல்லை.. அது வந்து.. அத்தான்.. நான் வந்து.."

அவளது தடுமாற்றத்தை உணராதவன் போல் அவன் பல்லைக் கடித்தான்..

"நான் உன்னிடம் விளக்கம் கேட்டேனா..? உன் இஷ்டத்திற்குப் போனவள்.. உன் இஷ்டப்படி வந்திருக்கிற.. இதில் என்னிடம் என்ன பெரிதாய்ச் செய்தி சொல்லுகிற..?"

"அத்தான்.."

அவள் விசும்பலுடன் முகம் திருப்பிக் கொண்டாள்.. அவனுக்குள் எதுவோ அசைந்தது.. அவன் மார்பில் வாய்ந்து அழக்கூட அவளுக்குத் தோன்றவில்லையா...?

"இப்போது ஏன் கண்ணீர் விடுகிற..? கீழே இருக்கும் உன் அப்பாவும்.. அம்மாவும் உன்னை நான் கொடுமைப் படுத்துகிறேன் என்று நினைத்துக் கொண்டு ஒரேயடியாய் உன்னை உன் வீட்டிற்கே கூப்பிட்டுக் கொண்டு போகட்டும்ன்னு இந்த ஐடியா பண்ணுகிறாயா..?"

கொதிக்கும் அமிலத்தை யாரோ தன் காதில் ஊற்றியது போல்.. உடல் தூக்கிப் போட நிமிர்ந்து அவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள் உமா..

ஒரேயடியாய் அவனை விட்டுப் போய்விடுவதா..? அவளா..? அவன் இப்படிப் பேசலாமா? உன் வீடு என்கிறானே.. இதுதானே அவளது வீடு... இதை உமா சொல்லப் போய்த்தானே உமாவின் தாய் அவ்வளவு வருத்தப்பட்டாள்...

அவளின் அதிர்ச்சி அவனுக்குத் திருப்தியைத் தந்தது.. அதைக் கண்டு கொள்ளாதவனாய் அவன் தொடர்ந்து பேசுனான்..

"என்னிடம் சொல்லிவிட்டுப் போனவள்தான்... திரும்பிவந்ததை என்னிடம் சொல்ல வேண்டும்.. அதைவிட்டு விட்டு.. என்னை ஒரு பொருட்டாக நினைக்காமல்.. தாய் தகப்பனைக் கண்டதும் குதியாட்டம் போட்டுக் கொண்டு போனவள்.. திரும்பி வந்ததைச் சொல்லக் கூடாது.."

அவள் மனதைப் புண்படுத்துவதில் தன் மனப்புண் ஆறுமா என்று வழி தேடினான் சிவா.. ஆனால் சேர்ந்து போன முகத்துடன்.. தளர்ந்த உடலுடன்.. விசும்பிக்

கொண்டிருந்தவளைப் பார்த்ததும்.. அவனால்.. தொடர்ந்து அவளை நாவால் சுட முடியவில்லை..

'ஏன்டி.. என்னை விட்டுவிட்டு உன்னைப் பெற்றவங்க வந்து கூப்பிட்டதும் பின்னாலே ஓடினே..' மனம் கேள்வி கேட்டது..

துடித்து நின்றவளை அணைத்து ஆறுதல் சொல்லத் துடித்த தன் கைகளை அடக்கிக் கொண்டவன்.. அறையை விட்டு வெளியேறி விட்டான்..

தன் கண்ணீர் அவனைப் பாதிக்காததைக் கண்ட உமாத விக்கித்துப் போய் நின்றாள்..

'ம்ஹும்.. பிடிக்காமல் என் கழுத்தில் தாலி கட்டியவர்.. நான் கண் மறைவாய் அம்மா வீட்டிற்குப் போனதும் நிம்மதியாய் இருந்திருப்பார்... இரண்டு வாரத்திற்கு மேல் அங்கே தங்காமல் நான் திரும்பி வந்ததும் ஏமாற்றமாய்ப் போய் விட்டது போல.. அதுதான்.. இவ்வளவு கடுமையாய்ப் பேசுகிறார்..'

அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... முகத்தில் லேசாய் பவுடரைத் தீற்றிக் கொண்டு...

முகத்தை மலர்ச்சியாய் வைக்க முயன்று கொண்டு படி இறங்கினாள்..

ஆனால்.. அழுது சிவந்திருந்த அவளது கண்களை சுந்தரி.. அடையாளம் கண்டு கொண்டாள்..

## 20

அன்று இரவு உணவைத் தணிகாசலமும்.. சுந்தரியும் மகள் வீட்டிலேயே சாப்பிட்டனர்.. சாப்பிட்டு முடித்த தணிகாசலமும்.. பாலசுப்ரமணியமும்.. வெற்றிலை.. பாக்கை மென்றபடி.. முன்ஹாலில் அரசியலையும்.. ஊர் நிலவரத்தையும் மென்று துப்பிக்கொண்டிருக்க..

சமையலறையை ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்த சௌதாமினியிடம்.. சுந்தரி வந்தாள்..

"சௌதா.."

"என்ன அண்ணி.."

"உமாவின் உடம்பு ரொம்ப வீக்காய இருக்கிறதாம்.. டாக்டரம்மா சொன்னாங்க.."

சௌதாமினி பதறிப்போய்க் கையிலிலுந்த பாத்திரத்தைச் சமையல் மேடையிலேயே வைத்துவிட்டுச் சுந்தரியின் முகம் பார்த்தாள்..

"என்ன அண்ணி சொல்கிறீங்க.."

"ஆமாம்.. சௌதா.. நம்ம விலாசினி டாக்டரிடம்தான் செக் அப்புக்குக் கூப்பிட்டுக் கொண்டு போனேன்.. இவளுக்கு ஏற்கெனவே மெலிவான உடம்பு.. இப்போது வாந்தி.. தலை சுத்தல்ன்னு பட்டினியாய்க் கிடந்து.. அரை உடம்பாய் ஆகிவிட்டாள்.."

"அப்படின்னா.. இன்னும் கொஞ்ச நாள் உங்க கவனிப்பிலேயே உமாவை வைத்து.. உடம்பைத் தேற்றி அனுப்பி வைத்திருக்கலாமே அண்ணி.."

"என் கவனிப்பில் இருந்தால்.. அவளுடைய உடல் தேறும்.. மனம் தேறுமா.."

"அண்ணி.."

"அதது.. இருக்க வேண்டிய இடத்தில் இருக்கணும்.. அதுதான் நல்லது.. உமாவின் உடம்புதான் அங்கே இருந்தது.. மனசு பூராவும் இங்கே இருக்குது.. எப்படி நான் அவளுடைய உடம்பைத் தேற்ற...?"

சௌதாமினிக்கு இதைக் கேட்கவும் சந்தோஷமாக இருந்தது. இருந்தாலும்.. ஒரு பேச்சுக்காகச் சுந்தரியிடம் வாய் வார்த்தையாய்க் கூறினதள்..

"என்னதான் இருந்தாலும் நீங்க பெற்ற தாய்.. பெற்ற தாய்க்கு இணை ஆகுமா அண்ணி..."

"கல்யாணமான பொண்ணுக்கு மாமியார்தான் பெற்றதாய்.. உன் மருமகளை உன் பொறுப்பில் விட்டு விட்டேன்.. அவளோட உடம்பு நிலையையும் உன்னிடம் சொல்லிவிட்டேன்.. இனி உன்பாடு.. உன் மருமகள் பாடு.. வயிற்றுப் பிள்ளைக்காரி மனசைப் போட்டு உழப்பிக்கிட்டு கண்ணீர் விட்டால் அது யாரைப் பாதிக்கும்?

வயிற்றிலே இருக்கும் உன் பேரக் குழந்தையைத் தான் பாதிக்கும்.. இதுக்கு மேல நான் சொல்ல என்ன இருக்கு சௌதா.."

தணிகாசலத்துடன் சுந்தரி கிளம்பிவிட்டாள்.. அவளுக்குத் தெரியும்.. இனி சௌதாமினி உமாவின் கண்ணீரை நிறுத்தி விடுவாள் என்று..

பெண்கள் சாதுர்யமானவர்கள்.. சூட்சுமம் நிறைந்தவர்கள்... எங்கே எதைக் கொண்டு அடித்தால்.. எதைப் பாதிக்கச் செய்யலாம்.. இல்லை.. எதைச் சரி செய்யலாம்... என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்..

சுந்தரி அறிவாள்.. சௌதாமினி நினைத்தால் சிவாவின் மனத்தாங்கலைச் சரிசெய்து விடுவாள் என்பதை.. அதனாலேயே.. சௌதாமினியிடம் உமாவின் உடல்நிலையை உணர்த்தி.. இனி உன் மருமகள் உன் பொறுப்பு என்று விட்டுவிட்டு வந்தாள்..

அவளுக்குத் தெரியும்.. சௌதாமினி அதைத்தான் எதிப்பார்க்கிறாள் என்பது..

விட்டுக் கொடுப்பதை.. விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் விட்டுக் கொடுத்தால்.. வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்ற சூட்சுமத்தை உணர்ந்தவள் சுந்தரி..

தன் மகளின் நல்வாழ்விற்காக.. அவளின் மன அமைதிக்காக.. தன் மகள் மேல் இருந்த பாசத்தை விட்டுக் கொடுத்தாள் அவள்.

உமா.. மாடிக்கு போய் விட்டாள்.. டிவியில் ஆங்கிலச் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்த மகனின் அருகே வந்து நின்று.. அவனை அழைத்தாள் சௌதாமினி..

பாலசுப்ரமணியம் படுக்கப் போய்விட்டிருந்த நிலையில்.. சிலநாள் பிரிவிற்குப் பின் மனைவி வந்துவிட்ட நினைவில்லாமல்.. மகன் தொலைக்காட்சியில் விழுந்து.. விழுந்து செய்தி பார்ப்பது.. சௌதாமினிக்குத் தெள்ளத் தெளிவாக அவனது கோபத்தை உணர்த்தியது..

"சிவா.."

"என்னம்மா...?"

"உமாவின் உடல் நிலை ரொம்பவும் வீக்காக இருக்கிறதாம்.. அண்ணி சொல்லிவிட்டுப் போகிறாங்க.."

சிவா சட்டென்று தொலைக்காட்சியை அணைத்து விட்டான்.. தாயைக் கவலையுடன் ஏறிட்டான்..

"எப்போது சொன்னாங்க..?"

"இப்போதுதான் சொன்னாங்க.. அவங்க டாக்டரிடம் செக் அப்புக்கு கூப்பிட்டுக் கொண்டு போனாங்களாம்.. உன் பொண்டாட்டி ஏற்கெனவே ஒல்லிக்குச்சி உடம்புக் காரி.. இப்போ மசக்கை வேற சேர்ந்துருச்சில்ல.. ரொம்பவும் பலவீனமா.. ஆகிவிட்டாளாம்.."

சிவாவின் மனதில் லேசான அச்சம் தலை தூக்கியது..

## 21

உமாவின் மேலுள்ள மனத்தாங்கல் சிவாவைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருந்தது.. அவளிடம் பேசக்கூடாது.. அவளைப் பார்க்கக் கூடாது என்ற வைராக்கியம் அவனுள் வேர்விட்டிருந்த நேரம் பார்த்துச் சௌதாமினி கூறிய அந்தச் செய்தி.. அவனுடைய வைராக்கியத்தை வேரோடு பிடுங்கி எறிந்தது..

"டாக்டரிடம் அழைத்துப் போகும் போது நமக்குத் தகவல் சொல்லி விட வேண்டாமா..?"

உமாவின் மேலுள்ள அக்கறையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தன் மாமனார்.. மாமியாரை நினைத்து எரிச்சலுடன் பேசினான் சிவா..

"அவங்க என்னத்தைக் கண்டாங்கடா.. சும்மா.. வழக்கமான செக் அப்புக்கு அழைத்துக் கொண்டு போயிருக்காங்க.. அங்கே டாக்டரம்மா இப்படிச் சொல்லவும்.. கலவரமாய் ஆகிட்டாங்க.."

"இப்ப எப்படி இருக்காளாம்..?"

"அவ மனக் கவலைப் படக்கூடாதாம், சிவா.. அவளுடைய உடப்பைத் தேற்றுவது என் பொறுப்பு.. ஆனால் மனசைத் தேத்த என்னால் முடியுமா...?"

"அவளாய்.. எதையாவது செய்துகிட்டு இருப்பா.. அதை நான் ஏன்னு கூடக் கேட்கக் கூடாதா...?"

"கேளுடா.. தாராளமாய்க் கேளு.. கேட்டுவிட்டுச் சமாதானமாய்ப் போய்விடு.. கோபத்தை வளர்த்துக் கொண்டே போகாதே.. அவ குழந்தைக்குத்தான் பாதிப்பு.. அது உன் குழந்தை.. நினைவில் வை.. எழுந்து படுக்கப் போ.."

சொல்ல வேண்டியரை நாசூக்காய்ச் சொல்லிவிட்டுச் சௌதாமினி போய்விட்டாள்..

சிவா எழுந்து மாடிப்படியேறினான்.. அறைக்கதவைத் தறிந்து உள்ளே சென்று கதவைத் தாழிட்டான்.. அறையில் மெலிதான வெளிச்சம் பரவியிருந்தது.. அவள் முதுகு காட்டிப் படுத்திருந்தாள்.. சிவா.. அருகே படுத்து.. அவளது முடி கோதினான். அவள் உடலில் லேசான அதிர்வு தோன்றியதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. அவளது முகத்தில் அவன் விரல்கள் படர்ந்தன.. கண்ணீரின் ஈரம் அவன் விரல்களில் பட.. இப்போது.. அவன் அதிர்ந்தான்..

"உமா.."

அவளைத் தன்புறமாய்த் திருப்பி.. கண்ணீரைத் துடைத்து விட்டான்.. அதை எதிர்பார்க்காத அவள் ஆனந்தத் திகைப்பில் ஆழ்ந்து.. அவன் மார்பில் முகம் புதைத்தாள்..

"அத்தான்..!"

அவள் மீண்டும் விசும்ப.. அவன் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டு.. அவளது காதோரம் குனிந்து கடிந்த குரலில் கூறினான்...

"ச்சு.. அழக் கூடாது.."

"நீங்க கோபித்துக் கொள்கிறீங்களே..."

"நீ.. நான் கோபித்துக் கொள்வதைப் போல நடந்து கொள்கிறாயே.."

"அம்மா கூப்பிட்டால்.. நான் என்ன செய்யட்டும்..?"

"இதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.. சும்மா உன் அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டே அலைகிறவள் எனக்கு ஏன் கழுத்தை நீட்டின..."

"ம்ம்.. நீங்கள் கட்டும் தாலியை வாங்கிக் கொள்ளத்தான்.."

உமா.. மனம்விட்டுக் 'களுக்'கென்று சிரித்தாள்.. அந்த மெல்லிய வெளிச்சத்தில் மின்னல் கீற்றுப் போல் தெரிந்த அவளது பல் வரிசை அவனை மயக்கியது.. அவன் தாகத்துடன் அவளது இதழ்களில்.. தன் இதழ் பதித்தான்.. அவள் பேச்சிழந்தாள்..

கூடல் என்பது சுகம்.. ஊடலுக்குப் பின் கூடல் என்பது பரமசுகம்.. உமா அதை ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தாள்..

விழிமூடிக் கிடந்த மனைவியின் மூடிய இமைகளின் மேல் முத்தமிட்டு விலகிய சிவா.. மன நிறைவுடன் அவளைப் பார்த்தான்..

"உமா.."

"ம்ம்.."

"என்ன யோசனை...?"

"இல்லை.. ஒரு முறை டிவியில் 'உயர்ந்த மனிதன்' ன்னு பழைய படம் ஒன்றைப் பார்த்தேன்.. சிவாஜிகணேசன்.. சௌகார் ஜானகி நடிச்சிருப்பாங்க..."

"அதுக்கென்ன இப்ப..?"

"அதில் சிவாஜி சார்.. சௌகார் மேடத்ததைக் கோபமாய் அடித்து விடுவார்.."

"ம்ம்.. அப்புறம்.."

"சொஞ்ச நேரம் கழித்து.. சௌகார் மேடத்திற்குப் பூ வாங்கிக் கொண்டு வருவார்.. அவங்க தலையைக் காண்பிக்க வைத்து விடுவார்.. அந்த சீனை நினைத்துப் பார்த்தேன்.."

மனைவியின் மனநிலை புரிந்தவனாக.. அவளை அருகே இழுத்துக் கொண்டு ஆதரவாய் அணைத்துக் கொண்டான் சிவா.. கணவனின் கைகளுக்குள் எல்லையற்ற நிம்மதி கிடைக்கப் பெற்றவளாய் விழிமூடி உறங்கினாள் உமா..

## 22

சிவாவை அலுவலகம் அனுப்பி வைத்து விட்டு அமர்ந்த உமாவின் அருகே வந்து அமர்ந்து சௌதாமினி.. பழச்சாறை நீட்டினாள்..

"எனக்கு வேண்டாம், அத்தை.."

"அப்படிச் சொல்லக் கூடாது.. குடி.."

"ப்ளீஸ்.. அத்தை..."

"ப்ளீஸ் உமா.. குழந்தையைப் பெற உடம்பில் தெம்பு வேண்டாமா..? உனக்காகன்னு இல்லாவிட்டாலும்.. உன் குழந்தைக்காகன்னு நினைத்துக்கிட்டு.. கண்ணை மூடிக்

கொண்டு... மடமடவென்று குடித்து விடவேண்டும்.. புரிந்ததா..?"

சௌதாமினியின் யுக்தி பலித்தது.. அந்த வார இறுதியில் மகளைப் பார்க்க வந்த சுந்தரி.. உமாவின் முகத்தில் தெரிந்த பொலிவையும்.. உடலில் தெரிந்த ஆரோக்கியத்தையும் கண்டு மன நிம்மதி அடைந்தாள்..

சிவா மாலை வேளைகளில் சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்தான்.. மனைவியின் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.. வெள்ளிக் கிழமைகளில் அஷ்டலட்சுமி கோவிலுக்கு அழைத்துச் சென்றான்.. அவள் நிதானமாய் ஒவ்வொரு சந்நிதானத்திலும் கண்மூடி வேண்ட.. பொறுமையாய்த் தானும் கூட நின்று வணங்கினான்.. கடற்கரைக்குப் போகாமல் காருக்கு அழைத்துக் கொண்டு வந்தான்...

"கடற்கரைக்குப் போகவில்லையா, அத்தான்?"

"வேண்டாம்.."

"ஏன்..?"

"இப்ப நீ கன்வீவ் ஆகியிருக்கிற சமயம்.."

"அதனால் என்ன..?"

"நீ டிஸ்டர்ப் ஆகக் கூடாது, உமா.."

"உங்களுக்குக் கடற்கரை பிடிக்குமே.."

"அதைவிட உன்னைப் பிடிக்குமே..."

அவன் வாய் விட்டுச் சிரித்தவாறு அவளைத் திரும்பிப் பார்க்க, அவனது அழகிய பல்வரிசiயில் மயங்கிப் போனாள் உமா..

"என்னடி அப்படிப் பார்க்கிற...?"

"சும்மாதான்..."

"சும்மா... அந்தச் சும்மாவைச் சொல்லு..."

"சும்மாதான் அத்தான்..."

அவள் வெட்கத்துடன் முகம் மூடிக் கொள்ள.. அவளது விரல்களுக்கு இடையே தெரிந்த அவளது விழிகளில் சிரிப்பு இருந்தது.. அவன் பேச்சிழந்தான்...

'இவள்தான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்.. என் குழந்தைக்குத் தாயாகப் போகிறாள்.. ஆனாலும் இன்னும் வெட்கத்துடன் முகம் மூடிக் கொள்கிறாளே..'

அவன் காரை நிறுத்திவிட்டு.. அவளை நெருங்கினான்.. அவனது கைகள் அவளது தோளைச் சுற்றி வளைத்தன.. அவள் விழி மூடிக் கிறங்கி அவனது கைகளில் விழுந்தாள்..

"நீ ஏன்டி.. இவ்வளவு அழகாக இருக்கிற...?"

"உங்களை விடவா நான் அழகு...?"

"இது மழைக் காலம்டி.... இதில் போய் இவ்வளவு பெரிய ஐஸ் கட்டியைத் தூக்கித் தலையில் வைக்கிறாயே..."

அவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.

உமாவிற்கு ஏழாம் மாதம் நடந்த போது.. வளைகாப்பு செய்ய முடிவு செய்தார்கள்..சுந்தரியும்.. சௌதாமினியும்.. கையில் குங்குமச் சிமிழுடன் உறவுனர்களையும்... தெரிந்தவர்களையும் அழைத்துவிட்டு வர.. தணிகாசலமும்.. பாலசுப்ரமணியமும்.. சனையல் வகைகளைப் பற்றியும் விழா ஏற்பாடுகளைப் பற்றியும் கலந்து ஆலோசித்தனர்...

வளைகாப்பு நடப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னதாகவே.. வேதகிரி தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்து விட்டார்..

மகன் தலையெடுத்த பின்னால்.. தாங்களுண்டு.. தங்கள் வேலையுண்டு.. என்று ஒதுங்கிவிட்ட அருணகிரியும்.. சரஸ்வதியும்.. வேதகிரியின் வரவில் மகிழ்ந்து போனார்கள்...

"வேதா.. எப்படிடா இருக்கிற...?"

"நல்லா இருக்கேன், அண்ணா..."

"வீட்டுக்கு வர இப்போதுதான் வழி தெரிந்ததா...?"

"இப்போதுதான் வழி கிடைத்தது, அண்ணி..."

"பெண் கொடுத்த வீட்டில் போய் இருக்கக் கூடாதுன்னு தனியாகப் போய் கைக்கஞ்சி காய்ச்சி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாயே... உனக்கென்ன தலையெழுத்தாடா...? நானும்... உன் அண்ணியும் உயிரோடு இருக்கும்போது... நீ அநாதை போல் தனியாய்ப் போய் இருக்கலாமா...?"

"நாம்... ஒன்றாய் இருந்தவங்கதானே, அண்ணே... நாம பெற்ற பிள்ளைகள் நம்மைப் பிரிச்சாங்க.. இப்ப அவங்க பெற்ற பிள்ளைகள் நம்மைச் சேர்த்து வைத்திருக்காங்க்..."

மாடிக்குப் பெரியவர்களுக்குக் காபி எடுத்துக் கொண்டு வந்த சுந்தரி.. பெரியவர்களின் பேச்சைக் கேட்டு நெகிழ்ந்தாள்....

23

சுந்தரி.. காபிக் கோப்பைகளைப் பெரியவர்களிடம் நீட்டிவிட்டு வேதகிரியைப் பார்த்து மரியாதையுடன் பேசினாள்...

"நீங்க சொன்னது போல... இப்ப இரண்டு குடும்பமும் ஒன்று சேர்ந்து விட்டது மாமா... உமாவைச் சௌதாவின் வீட்டிற்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து அனுப்பி விட்டோம்.. வீடு வெறிச்சென்று இருக்கிறது... பெண் பிள்ளைகள் பெற்றவர்களுக்குச் சொந்தமில்லை... பெரியவர்கள் நீங்களாவது கடைசிவரை எங்களுக்குச் சொந்தமாக... எங்களுடன் இருக்க வேண்டும் மாமா... நீங்களும் பெண்ணைப் பெற்றவர்.. நானும் பெண்ணைப் பெற்றவள்.. என் மனசு படும்பாடு உங்களுக்குத் தெரியாதா?" சுந்தரி கண் கலங்கி விட்டாள்..

"அம்மாடி... இதுக்குப் போய் ஏன் கண் கலங்கறே... நான் தணிகாசலம் வேறு... சௌதாமி வேறுன்னு பிரிச்சுப் பார்த்து இந்த வீட்டை விட்டு வெளியே போகவில்லைம்மா..

பெண்ணைக் கொடுத்தோமா... கண்ணைக் கொடுத்தோமான்னு சொல்வாங்க... பெண்ணுக்கு என்னால் எந்த விதக் கஷ்டமும் வந்து விடக் கூடாதுன்னு... என்னை நானே கஷ்டப்படுத்திக் கொண்டேன்ம்மா.. நான் இங்கே இருந்தால்.. சௌதாமினியை மாப்பிள்ளை கஷ்டப்படுத்தி விடுவாரோன்னு மனசுக்குள் பயம் வந்துவிட்டது.. மற்றபடி என் உயிர் என் அண்ணனின் காலடியில்தான் கிடந்தது... மனசெல்லாம் இங்கேதான் இருந்தது.. வெறும் கூடுதான் அங்கே தனியாய்ப் பொங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.. இனி மேல் என்னம்மா.. ஆக்கிப் போடுகிற மகராசி... நீயே என்னை இங்கேயே இருக்கச் சொல்லிவிட்ட.. இனி கடைசிக்காலம் வரைக்கும் என் அண்ணன் மகன் வீட்டைவிட்டு நான் போக மாட்டேன்..." வேதகிரி நெகிழ்ச்சியுடன் பதில் கூறினார்.

பெண்ணைப் பெற்றவர்கள்.. தங்கள் மன வேதனைகளையும்.. குடும்பச் சிக்கல்களையும் பகிர்ந்து கொண்டார்கள்.. வளைகாப்பிற்கு முதல்நாளே... தணிகாசலம் குடும்பத்தார்.. சிவாவின் வீட்டிற்குச் சென்று விட்டார்கள்...

சிவா அலுவலகம் விட்டு வரும்போது வீட்டில் நிலவிய விழாச் சூழலின் பரபரப்பை ரசிததவாறு வீட்டுக்குள் வந்தான்.. முன் ஹாலில் தணிகாசலமும்.. பாலசுப்ரமணியமும்.. வழக்கம் போல் நாட்டு நிலவரத்தை எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்க.. மாடிப்படியேறினான்.. எதிரில் சௌதாமினி பரபரப்பாய் இறங்கி வந்தாள்...

"என்னம்மா... கிழக்கு.. மேற்கும் இப்படிப் பின்னிப் பிணையுது..." என்று சிரித்தான் சிவா..

"அதையேன் கேட்கிற... இவர்கள் இரண்டு பேரும் கொஞ்சிக் கொள்வதைப் பார்த்தால்.. இவர்களா இத்தனை வருசமும் பகையோடு இருந்தாங்கன்னு தோணுது.... என்னவோ... பொம்பளைங்க நாங்க சண்டைபோட்டுக் குடும்பத்தைப் பிரித்திருந்தது போலவும்... இவங்க இரண்டு பேரும் ஈருடலும்.. ஓருயிருமாய் இருந்தது போலயும்

தோணுது..." சலித்துக் கொண்டே படியிறங்கிப் போய் விட்டாள் சௌதாமினி...

மாடி ஹாலில் இன்னொரு கூட்டணி உருவாகியிருந்ததைப் பார்த்தான்... அருணகிரியும்... வேதகிரியும் அருகருகே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.. சரஸ்வதி அவர்களுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்து அவர்கள் பேசுவதற்கு ஆதரவாகத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள்...

அருணகிரி.. சிவாவின் பக்கம் திரும்பிப் பார்த்தவர்..

"இதோ.. சிவாவே வந்துவிட்டானே.." என்று குதூகலக் குரலில் கூறினார்.

"வாங்க தாத்தா..." என்று பொதுப்படையாய் இரண்டு பெரியவர்களையும் பார்த்துக் கூறிய சிவா...

"பாட்டி..." என்றபடி சரஸ்வதியின் அருகே சென்று அமர்ந்து கொண்டான்..

பாசத்துடன் பேரனின் தலையை வருடிக் கொடுத்த சரஸ்வதி.. "சரியாகச் சாப்பிடுவதில்லையா, சிவா.. இளைத்துத் தெரிகிறாயே.." என்று கவலை தொனிக்கக் கூறினாள்...

எத்தனை பெரியவன் ஆனாலும்.. இன்னும்.. பெரியவர்களின் கண்ணுக்குத் தான் சிறுவனாவே தென்படுவதை உணர்ந்த சிவா மனதிற்குள் நெகிழ்ந்து கொண்டான்...

அப்போது.. உமா எல்லோருக்கும் காபி கொண்டு வந்தாள்.. மனiவியின் தாய்மையுற்றிருந்த மேடிட்ட வயிற்றைக் கனிவுடன் பார்த்த சிவா...

"ஆமாம் பாட்டி.. உங்கள் பேத்தி என்னைச் சரியாகவே கவனித்துக் கொள்வதில்லை..." என்று புகார் கூறியபடி... அவளைப் பார்த்து... இரகசியமாய்க் கண் சிமிட்டினான்....

உமாவின் முகம் குப்பென்று சிவந்து விட்டது...

'கள்ளன்... பெரியவங்க முன்னால் என்ன வேலை செய்கிறான்...' என்று பொய்க் கோபத்துடன்

அவனை மனதிற்குள் கடிந்து கொண்டு அவனைப் பாராதது போல் சரஸ்வதியிடம் காபிக் கோப்பையை நீட்டினாள்...

"ஊஹூம்... யார் இருந்தாலும்.. முதலில் நீ உன் புருசனைத்தான் கவனிக்க வேண்டும்... சிவா சொல்வது சரிதான்... நீ அவனைச் சரியாகக் கவனித்துக் கொள்வதில்லையென்பதுதான் உண்மை போல... முதலில் சிவாவைக் கவனி..." சரஸ்வதி கண்டிப்புடன் கூறினாள்..

உமா சிவாவை நிமிர்ந்து பார்ககாமல் காபிக் கோப்பையை அவனிடம் நீட்டினாள்.. அவன்... மற்றவர்கள் அறியாத வண்ணம் அவள் கையில் ரகசியமாய்க்

கிள்ளி விட்டுக் காபிக் கோப்பையை எடுத்துக் கொண்டான்....

24

"நீயும் உட்கார், உமா..." சரஸ்வதி உமாவைச் சிவாவின் அருகே அமர வைத்துக் கொண்டாள்..

பெரியவர்கள் தங்களின் பேரப் பிள்ளைகள் ஒன்று சேர்ந்து அமர்ந்திருப்பதைக் கண்டு மனம் பூரித்தனர்.. அவர்களது பூரிப்பு வார்த்தைகளில் வெளிப்பட்டது...

"என்னவோ... போ... வேதா... அண்ணனும்... தங்கையும் அடிச்சுக்கிட்டுப் பிரிந்து நின்று விட்டாங்களேன்னு மனதிற்குள் வேதனைப்பட்டேன்.. இப்போது அந்த வேதனை தீர்ந்து... மனதிற்கு நிறைவாக இருக்கிறது...." என்றார் அருணகிரி...

"சௌதாவின் மனசு பூராவும்.. அண்ணன் மகளைத் தன் வீட்டிக்கு மருமகளாய்க் கொண்டு வரணும் என்கிறதில்தான் இருந்தது... ஆனால் ஊடே பேசப்

போனவங்களை... தணிகாசலம் விரட்டியடிச்சுக்கிட்டு இருந்தான்.. உமாவிற்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கவும் ஆரம்பித்து விட்டான்.. நல்ல வேளையாக... உமா... மனது வைத்து... இரண்டு குடும்பத்தையும் ஒன்று சேர்த்துவிட்டாள்..." பேத்தியின் தலை கோதியவாறு சரஸ்வதி கூறவும்... சிவா துணுக்குற்றான்...

'பாட்டி பேசுவதில் ஏதோ செய்தி இருப்பது போலத் தோன்றுகிறதே...' அவன் மனதைப் போட்டு உழப்பிக் கொண்டு இருந்த போது... வேதகிரி அதை அதிகப் படுத்துவது போல் பேசி வைத்தார்.

"ஆமாம் அண்ணி.. சிவா ஒரு வழியாய் உமாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டான்.. ஆனால் உமா என்ன சொல்வாளோ என்று என் மனதிலும் வதக்... வதக்கென்று இருந்தது... வாய் பேசாத குழந்தை.. பெரியவங்க மனசு போல நடந்து... நம்மை ஒன்று சேர்த்திட்டா..."

சிவாவிற்கு அந்தப் பேச்சு பிடிக்கவில்லை... அவன் எழுந்து கொண்டான்....

"என்ன சிவா...?" என்று வினவிய சரஸ்வதியிடம்...

"தலை வலிப்பது போல் இருக்கு பாட்டி.. போய்க் குளித்து டிரஸ் சேன்ஜ் பண்ணினால் சரியாகி விடும்ன்னு நினைக்கிறேன்... நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்..." என்று கூறிவிட்டு.. அறையை நோக்கிப் போய்விட்டான்...

உமா அவன் சொல்வதைக் கூடக் கவனிக்கமால்.. பாட்டியிடம் செல்லம் கொஞ்சிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவனுக்கு என்னவோ போல் இருந்தது...

அறைக்குள் சென்று உடையை மாற்றிக் கைலிக்குள் புகுந்தவன்.. குளியலறைக்குள் நுழைந்தான்.. குளித்து முடித்துக் கட்டிலில் விழுந்து... யோசனையுடன் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தான்...

எவ்வளவு நேரம் அப்படியே படுத்திருந்தனோ... அவனுக்கே தெரியவில்லை... வெகு நேரம் கழித்து அறைக் கதவைத் திறந்து கொண்டு உமா உள்ளே வந்தாள்.. அவள் முகத்தில் சந்தோசம் நிறைந்திருந்தது....

"என்னடி.. முகம் பூராவும் மத்தாப்பூ கொளுத்திப் போட்டது போல்... சந்தோசம் தாண்டவமாடுது... உன் சொந்த பந்தம் வந்திருக்கிற சந்தோசமா...?" அவன் ஒரு மாதிரியான குரலில் வினவினான்...

அதை உணராதவளாய் வெள்ளையாய்ச் சிரித்தாள் உமா... அவன் அருகே கட்டிலில் சுவாதீனமாய் அமர்ந்து கொண்டு... விழி விரியப் பேசினாள்...

"பின்னே... இருக்காதா... பெரியவங்க ஒன்று கூடியிருப்பது எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறது தெரியுமா....?"

"ஓ... நம்ம கல்யாணம் நடந்ததால்தான் அவங்க ஒன்று கூடி இருக்கிறாங்க.. இல்லையா...?"

அவன் மனதில் ஓடிய சிந்தனையின் ஓட்டத்தை அறியாதவளாய் அவள் பின்னலில் விரல்விட்டு நீவியவாறு பதில் சொல்லி விட்டாள்...

"ஆமாம் அத்தான்... அதிலென்ன சந்தேகம்...?"

"உமா..." அவன் ஆழ்ந்த குரலில் அழைத்தான்...

"ம்ம்.." அவள் அழைப்பிலிருந்த குரல் வேறுபாட்டை உணராமல் அவள் விழியுயர்த்தினாள்...

"ஒரு வேளை நம் கல்யாணம் நடந்திராவிட்டால்...?"

அவள் சட்டென்று அவன் இதழ்பொத்தினாள்.. அவன் மனதில் திருப்தி உதயமானது... மூடியிருந்த அவளது கையில் அவன் முத்தமிட்டான்... ஆனால்... அந்த திருப்தி அடுத்த நொடியில் மறைந்து போனது...

"ஏன் அத்தான் அச்சானியமாகப் பேசுகிறீங்க.. நானே நம் கல்யாணத்தால் பெரியவங்களை ஒன்றுசேர்க்க முடிந்ததே

என்று மன நிறைவாக இருக்கிறேன்... இப்போது போய் இப்படிப் பேசுகிறீங்களே..."

"ஓ.. அப்படியானால்.. நம் கல்யாணத்தால்.. இவர்கள் ஒன்று சேர்ந்ததுதான் உனக்கு நிறைவாக இருக்கிறது இல்லையா...?"

"என்ன அத்தான் இப்படிக் கேட்டு விட்டிங்க.. நீங்க பிறந்ததில் இருந்து.. அம்மா.. அப்பான்னு மட்டும் வாழ்ந்தவங்க.. நான் அப்படியில்லை.. அம்மா... அப்பா... தாத்தா.. பாட்டி... சின்னத் தாத்தான்னு பெரிய குடும்பத்தில்... கலகலன்னு வளர்ந்தவள்... நம் இரு குடும்பங்களுக்கும் இடையே சண்டை முற்றிபோய்ப் பேச்சு வார்த்தை இல்லாமல் போய் விட்ட பின்பு.. சின்னத் தாத்தா வீட்டை விட்டுப் போய் விட்டார்... என் தாத்தா...

பாட்டியின் முகத்தில் சிரிப்பு என்பதே இல்லாமல் மறைந்து விட்டது.. இப்போது இவங்க ஒன்று சேர்ந்து சிரிக்கிறதைப் பார்க்கும் போது.. இது என்னால் நடந்த விசயம்ன்னு மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது... என் ஒருத்தியால் இவர்களை ஒன்று

சேர்க்க முடிந்திருப்பதை நினைத்துப் பெருமையாக இருக்கிறது..."

யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வது போல்.. உமா.. தன் பேச்சால் கெட்டாள்...



தவளை தன் வாயால் கெடும்.. உமாவும்.. அதைப் போல வார்த்தைகளைக் கொட்டி... தன் வாழ்வைத் தானே கெடுத்துக் கொண்டாள்..

சிவாவின் மனதில் புயல் அடிக்க ஆரம்பித்து விட்டதை உணராமல் அவள் மேலே தான் நன்றாகப் பேசிக்

கொண்டிருக்கிறோமென்ற நினைவில்.. தன் பெருமைகளைக் கொட்டி அளந்து கொண்டிருந்தாள்..

"நமக்கு நம்மைப் பெற்றவங்க ஆயிரம் செய்திருப்பாங்க, அத்தான்.. நம்மால் அந்தக் கடனையெல்லாம் கழிக்க முடியுமா? ஏதோ.. என்னால் முடிந்தது... இது ஒன்றுதான்... என்னைப் பெற்றவங்களையும்.. தாத்தா பாட்டியையும்.. அவங்களோட சொந்தபந்தத்தோடு சேர்த்து வைத்துவிட்டேன்... எனக்கு இது ஒன்றே போதும்..

வேறு எதுவும் வேண்டாம்.."

"ஓ... வேறு.. எ..து..வு..மே.. வேண்டாமா?"

சிவாவின் ஆழ்ந்த குரலில் ஒலித்த கேள்வியின் பின்னால் அடங்கியிருந்த புயலைக் கவனிக்கும் அளவிற்கு உமாவிற்குச் சூட்சும புத்தி இருக்கவில்லை...

அவள் எளிதான சுபாவம் கொண்டவள்.. வெள்ளை மனம் கொண்டவள்.. மனதில் இருப்பதை வெளிப் படுத்தத் தெரியாத பேதை... அதனால்.. அன்றைய விழாச் சூழல் தந்த இனிமையான மனநிலையுடன்.. செல்லமாக.. தன் காதுகளில் உள்ள ஜிமிக்கிகள் அசைந்தாட.. கணவனின் தலையோடு லேசாய் முட்டி.. அவன் முடி கலைத்து.

"ஊம்.. வேண்டாம்.." என்றாள்..

தன் முடி கலைத்த உமாவின் கரத்தை விலக்கி விட்டுச் சிவா எழுந்து கொண்டான்.. அப்போதும் கணவனின் மனநிலை புரியாதவளாக உமா.. உடன் எழுந்து நின்று...

"என்ன அத்தான்.. பசிக்கிறதா...? நான் ஒரு மக்கு... அம்மா உங்களைச் சாப்பிட அழைத்து வரச் சொன்னாங்க... அதை மறந்து விட்டு... நான் வேறு பேசிக் கொண்டிருக்கிறேன்... வாங்க.. சாப்பிடப் போகலாம்..." என்று அழைத்தாள்..

"ம்ம்.." என்று முணுமுணுத்த சிவா.. உமாவிற்கு முன்னால்.. அறையை விட்டு வெளியேறி... மடமடவென்று மாடிப்படிகளில் இறங்கிப் போய்விட்டான்..

உமாவினால்.. அந்த நிலையில் அவனது வேகத்திற்கு ஈடு கொடுத்து இறங்க முடியவில்லை.. மெல்ல.. படியிறங்கி அவள் டைனிங் டேபிளுக்கு வந்தபோது... சௌதாமினி பரிமாறிக் கொண்டிருக்க.. சிவா சாப்பிட ஆரம்பித்திருந்தான்..

உமாவின் மனம் சிணுங்கியது.. அவள் பரிமாறித் தானே அவன் தினமும் சாப்பிடுவான்.. இன்று மட்டும் என்ன..? மனதில் இருப்பதை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் அவள் நின்றபோது ஹாலில் இருந்த சரஸ்வதி அவளை அழைத்தாள்...

"உமா..."

"இங்கே.. வா..."

உமா.. சாப்பிட்டுக் கொண்டிருந்த சிவா ஏதாவது கேட்பானா என்று தயங்கி நின்று பார்த்தாள்.. அவன் தலையை நிமிரவே இல்லை... வேறு வழியின்றிச் சரஸ்வதியிடம் சென்றாள்...

"ஏன் டைனிங் டேபிளுக்கு பக்கத்தில் நின்று கொண்டே இருக்கிற...?"

"அவர் சாப்பிட வந்தார், பாட்டி..."

"அதுதான் சௌதாமினி டிபன் வைத்துக் கொண்டிருக்கிறாளே.. சிவா சாப்பிட்டுக் கொள்வான்... நீ இப்படி உட்கார்.. உனக்குக் கால் வலிக்கவில்லையா...? எவ்வளவு நேரம்தான் நின்று கொண்டே இருப்பாய்..."

உமா.. சரஸ்வதியின் அருகே அமர்ந்து கொண்டாள்.. சாப்பிட்டுக் கொண்டே.. மெதுவாய்த் திரும்பிச் சிவா.. உமாவைப் பார்த்தபோது... அவள் சரஸ்வதியின் தோள் மேல் தலை வைத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்...

சிவாவிற்கு நெஞ்சம் கசந்தது.. கடைசியில் இவள் குடும்பத்திற்காகத் தியாகம் பண்ணினாளா...? எனக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லையா...?

'உமா...' சிவாவின் மனம் அரற்றியது...

'உன்னை உயிருக்குயிராய்க் காதலித்தேனேடி... கடைசியில் நீ என் காதலைக் கண்டு கொள்ளவேயில்லையேடி....உனக்காக.. நான்... என் அப்பாவின் மன வருத்தத்தை நினைத்துப் பார்க்காமல் உன் வீட்டுப் படி மிதித்தேனே... மலையேறி நின்று கொண்டிருந்த உன் அப்பாவிற்கு மாதக்கணக்கில் வேப்பிலை அடித்து மலை இறக்கினேனேடி.. உன் மனதில் அது எதுவும் பதியவில்லையா...? என்னை... என் காதலை.. ஒரு பொருட்டாகவே நீ நினைக்கவில்லை.. உன் மனதில் நான் இல்லை.... உன் வீட்டுப் பெரியவர்களின் மன நிம்மதிதான்.. உனக்குப் பெரிதாகத் தோன்றியிருக்கிறது.. நான் உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை... இதை நான் உன்னிடம் எதிர்பார்க்க வில்லை, உமா...'

சிவா எழுந்து கை கழுவி விட்டு.. மாடிக்குப் போய் விட்டான்.. உமா இரவு உணவு முடிந்து.. மாடிக்கு வந்தபோது.. சிவா அயர்ந்து தூங்குவது போல்.. கண்களை மூடி... பாவனை செய்து கொண்டிருந்தான்... உமா அவனருகில் படுத்து உறங்க ஆரம்பித்ததும்.. விழி திறந்து... விட்டத்தை வெறித்தான்...

26

தலை நிறையப் பூவைத்து.. நெற்றியில்.. கல் பதித்த ஸ்டிக்கர் பொட்டு வைத்து.. மணப்பெண் போன்ற அலங்காரத்தில்... பட்டுப் புடவை உடுத்தி... ஹாலில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள் உமா...

பெண்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து அவளுக்கு நலங்கு வைத்து... கன்னத்தில் சந்தனத்தைத் தீற்றி... அவளது கைகளில் வளையல்களை அடுக்கினர்...

மாடிப் படியின் அருகே நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிவாவை.. ஊடே ஒரு முறை விழியுயர்த்திப் பார்த்தாள் உமா... அவளது இதழ்களில் ரகசியப்

புன்னகை மலர்ந்தது.. பதிலுக்கு... வெறுமையாகச் சிரித்தான் சிவா...

அதை உணராத உமா.. அடிக்கொரு தரம் தன் பார்வை வீச்சை.. அவனை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தாள்.. பதிலுக்கு ஒரு பெருமூச்சை வெளியேற்றிய சிவா.. வேறு திசையில் பார்த்தான்...

தன் பார்வையைச் சந்திக்காதவனைப் புரியாமல் உமா பார்ப்பது புரிந்தும்... ஏதோ வேலையிருப்பது போல் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான் அவன்...

மாடியறையில் படுக்கையில் விழுந்து விட்டவன்.. கதவு திறக்கும் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.. உமா உள்ளே வந்தாள்...

"அத்தான்.. சாப்பிட வாங்க...."

"ம்ம்... உன் அம்மாவும்.. என் அம்மாவும் சாப்பிடக் கூப்பிட்டு விட்டாங்களா, உமா..."

"ஆமாம் அத்தான்.. எப்படி இதைச் சரியாகக் கண்டு பிடித்தீங்க..."

'பின்னே நீயாகவா... வந்திருக்கப் போகிற...'

அவன் கசப்புடன் நினைத்துக் கொண்டான்...

மதிய விருந்து முடிந்ததும்... உறவினர்கள் கிளம்பிப் போய்விட... வீட்டில் விருந்து முடிந்ததும் தோன்றும் வெறிச்சென்ற அயர்வு தோன்றியது.. எல்லோரும்.. ஆளுக்கொரு மூலையில் கண் அயர்ந்தனர்..

மாலையில் காபிக்கடை முடிந்ததும்.. சுந்தரி.. சௌதாமினியின் முகம் பார்த்தாள்...

"இனி நாங்க கிளம்புகிறோம், சௌதா..."

"ஆகட்டும், அண்ணி... உமா பத்திரம்..."

"அதெல்லாம் நான் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்வேன்.. நீ ஒன்றும் பயப்படாதே..."

அவர்கள் பேசிக் கொள்வது புரியாத உமா விழித்தாள்...

"என்னம்மா.. என்னை அத்தையிடம் விடும்போது சொல்ல வேண்டியதை நீங்க சொல்கிறீங்க...."

"ஏன்னா.. உன் அத்தை உன்னை இப்போது எங்களுடன் அனுப்புறாளே.. அதனால்தான்... நான் சொல்ல வேண்டியதை அவள் சொல்கிறாள்... அவள் சொல்ல வேண்டியதை நான் சொல்கிறேன்..."

"என்னது..."

"ஆமாம் உமா.. இப்போது உன்னை எங்களுடன் அழைத்துக் கொண்டு போகப் போகிறோம்..."

"எப்போது திரும்பி வருவது, அம்மா...?"

"உன் பிரசவம் முடிந்து... குழந்தைக்கு மூன்று மாதங்கள் ஆன பின்னால்தான்..."

உமாவுக்கு இந்த வழக்கமெல்லாம் தெரியாது... வெளி உலகில் அதிகம் பழகாத... வீட்டுக்கு ஒற்றைப் பெண் குழந்தையாய் வளர்ந்தவள்.. வளைகாப்பு என்றதும்... சந்தோசமாக அமர்ந்தாள்.. இப்படி வளைகாப்பு முடிந்தவுடன் பிறந்த வீட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டு போய்டிவடுவார்களென்று அவளுக்குத் தெரியாது...

'கடவுளே... இப்கோதுதான் அத்தான் என்னுடன் இணக்கமாகப் பேசிப் பழகுகிறார்.. அதற்குள் பிரிந்து செல்வதா...?

எப்படி மறுப்பது என்று தெரியாதவளாய் உமா.. மாடிப் படியேறி... சிவாவின் மடி தேடி ஓடினாள்...

"அத்தான்..."

"என்ன...?"

விட்டேற்றியாய் வினவியவனின் குரலில் சொந்தம் துளிக்கூடத் தெரியவில்லை.. அது உமாவின் கவனத்தில் பதியவுமில்லை.

"செய்தி தெரியுமா...?"

"என்ன செய்தி...?"

"என்னை அம்மா வீட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டு போகப் போகிறாங்களாம்..."

"அது உன் வீடுதானே...?"

இப்போதும் சிவாவின் கேள்வியில் தொனித்த குத்தலை உமா கவனிக்கவில்லை...

"இன்றைக்கு போய்விட்டு... நாளைக்குத் திரும்பி வருவதாக இருந்தால் சரி.. ஆனால்.. நான் பிரசவம் முடியும் வரை அங்கேயே இருக்க வேண்டுமாமே..."

"இரு..."

சிவா.. இதற்கும்.. எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பது போல் பேசிக் கொண்டிருந்தான்..

அதை உணராத உமா.. பசுவைத் தேடும் கன்றாய்... உயிர் துடிக்க அவன் முகம் பார்த்தாள்...



"பிரசவம் முடிந்தவுடனும் உடனே வர முடியாதாம்.. குழந்தைக்கு மூன்று மாதங்கள் ஆக வேண்டுமாம்..."

'குழந்தை!'

சிவாவின் மனம் அசைந்தது.. அவனது குழந்தை... அவள் அதைச் சுமந்து கொண்டிருக்கிறாள்... இப்போது அவளுடைய உடல் நலமும்... மன நலமும் மிகவும் முக்கியம்...

சிவா.. பேசத் துடித்த தன் நாவை அடக்கிக் கொண்டான்.. உமாவின் அருகே வந்து அவளின் தோள் தொட்டான்..

அவளோ அவள் தான் போவதைத் தடுத்து நிறுத்தி விட மாட்டானா என்ற தவிப் போடு அவனைப் பார்த்தாள்...

"பார் உமா... இப்போது உனக்கு மன அமைதி தேவை..."

"அதற்காக...?"

"ம்ம்.. அதற்காகத்தான்... உன்னைப் பிறந்த வீட்டிற்கு அனுப்ப நான் ஒப்புக் கொண்டேன்..."

"நீங்க ஒப்புக் கொண்டிங்களா...? இது உங்களுக்கு முதலிலேயே தெரியுமா....?"

"தெரியும்..."

"தெரிந்துமா பேசாமல் இருக்கிறீங்க...?"

"அங்கே உன் தாத்தாக்கள்... பாட்டின்னு வீடு கலகலப்பாக இருக்கும்.. இங்கே அப்பாவும்.. நானும் வேலைக்குப் போய்விடுவோம்.. நீ அம்மாவின் முகத்தைக் கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டு தனிமையில் இருக்கனும்..."

"ஆயிரம்தான் அப்பா வீட்டில் ஆள்கள் இருந்தாலும்... நீங்க இருக்க மாட்டீங்களே..."

சிவா உதட்டைக் கடித்துத் தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்திக் கொண்டான்... அவள் விழிகளையே ஊன்றிப் பார்த்தான்....

'நான் இருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாயா..? உன் மனதிலேயே நான் இல்லையேடி.. உன் அருகில் நான் இருந்தால் என்ன... இல்லாவிட்டால் என்ன...'

"நீ கிளம்பு உமா..."

"நீங்கள் இல்லாமலா...?"

"நானும் கூட வருகிறேன்..."

"என்னுடன் அங்கேயே இருப்பீங்கதானே..."

பொய்யுரைக்க மனமில்லாமல்.. அவள் பேச்சை நிறுத்த எண்ணி... அவளை அருகே அழைத்தான்... அந்த

அழைப்பிற்காகக் காத்திருந்ததுபோல்... அவள் மார்பில் முகம் புதைத்தாள்... அவளைத் தழுவி.. அவளது தலை உச்சியில் முகம் புதைத்தவன். மனம் கலங்கினான்..

இது... நான் உன் கணவன் என்பதால் நீ காட்டும் நெருக்கம்.. நான் உன் காதலன் என்பதால் இல்லை... ஒரு வேளை நான் உன் அத்தையின் மகனாகப் பிறந்திருக்காவிட்டால்.. நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கவும் மாட்டாய்... நான் உன் கணவனாக ஆகியிருக்கவும் முடியாது... 'சிவா' என்ற தனிப்பட்ட மனிதனின் காதலுக்கு உன்னிடம் மதிப்பும்.. அங்கீகாரமும் இல்லை உமா... 'உன் அப்பாவின் தங்கை மகன்' என்ற உறவிற்குத்தான் மதிப்பு.. அங்கீகாரம்... நான் தோற்று விட்டேன் உமா...

"உமா..."

"ம்ம்ம்..."

"போகலாமா..?"

"அதற்குள் என்ன அவசரம்...?"

"கீழே.. உன் வீட்டில் காத்திருப்பார்களே..."

"காத்திருக்கட்டும்..."

"போகலாம் உமா..."

"மெதுவாகப் போகலாம்..."

"ஏன்...?"

"தெரியவில்லை..."

உமாவின் மனது எதனாலோ தவித்துக் கொண்டிருந்தது... அந்த இடத்தைவிட்டுப் போக.. அவள் பயந்தாள்... சிவாவை விட்டு விலக மறுத்தாள்...

என்ன செய்வதென்று தெரியாமல்.. அவளது கரத்தைத் தன்னிலிருந்து விலக்கி... அவளைத் தள்ளி நிறுத்தினான் சிவா..

"அத்தான்..."

"சொன்னால் கேள், உமா.. நான்தான் உன்கூட வருகிறேன்னு சொல்கிறேனில்லை...."

சிவா.. உமாவுடன் மாடிப்படி இறங்கினான்.. உமாவின் துணிகள் அடங்கிய பெட்டியைத் தணிகாசலம் தூக்கிக் கொள்ள...சிவா... சௌதாமினியின் முகம் பார்த்தான்...

"அம்மா... உமாவை மாமா வீட்டில் விட்டுவிட்டு வந்து விடுகிறேன்..."

உமாவின் விழிகள் சட்டென்று உயர்ந்து அவன் முகத்தைப் பார்த்தன...

'வார்த்தை தவறி விட்டாய்..' என்று குற்றம் சாட்டின...

சிவா... சொல்ல முடியாத உணர்வுகளை.. செய்வதறியாதவனாய்.. ஒரு பெருமூச்சில் கரைத்து வெளியேற்றினான்... மனைவியின் பார்வையைத் தவிர்த்து.. முன்னால் சென்று அவள் ஏறுவதற்காக கார் கதவைத் திறந்து விட்டான்...

## 28

அன்று இரவு உமாவுடன் தணிகாசலத்தின் வீட்டிலேயே தங்கினான் சிவா.. இரவில் நெருங்கிய மனைவியை விலக்காமல் அணைத்து... அவள் விரும்பியதைக் கொடுத்தான்... ஒரு இணக்கமுள்ள கணவனாக... இரவு முழுவதும் அவளைப் பிரியாமல்.. தன் மார்பில் அவளது தலை தாங்கி.. உறங்க வைத்தான்...

காலையில் எழுந்து குளித்து உடைமாற்றி அவன் கிளம்புகையில் உமா கண்கலங்க.. அவளது கன்னத்தில் மெதுவாக விரல்களால் தட்டிச் சமாதானப் படுத்தினான்...

"ஏய்ய்... இப்படி நீ அழுமூஞ்சியாய் இருந்தால்... பிறக்கப்போகும் குழந்தையும் அழுமூஞ்சியாகத்தானே

இருக்கும்..."

உமா அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டு புன்னகைக்க முயல... அவளுக்குப் பதில் அவன் புன்னகைத்து அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

"போய் வருகிறேன்..."

"சாயந்திரம் வந்து விடுவீங்கதானே..."

அவன் அதற்குப் பதில் சொல்லாமல்... கையாட்டி விடைபெற்றான்.. அன்று மாலை அவள் அவனுக்குப் போன் செய்தபோது.. மும்பைக்குப் போய்க் கொண்டிருப்பதாகப் பதில் வந்தது...

"மும்பைக்கா?"

"ஆமாம் உமா..."

"அங்கே என்ன வேலை அத்தான்...?"

"ஆபிஸ் விசயமாய்ப் போகிறேன்..."

"எப்போது வருவீங்க...?"

"தெரியவில்லை உமா..."

தெரியவில்லையா....? என்ன அத்தான் இது...?

"ஆறு மாதம் ஆகும் உமா..."

"ஆறு மாதமா....?"

அவளின் மலைப்பிற்கு அவனிடம் பதில் வரவில்லை.. அடுத்து உமா போன் பண்ணிய போதெல்லாம்... 'வேலையில் பிஸி' என்றான்... நலம் விசாரிக்கக் கூட நேரமில்லை என்றான்.. அவனைப் பற்றி ஏக்கத்திலும்... கவலையிலும் அவளிருக்கும் போதே... பிரசவ நாள் நெருங்கிவிட்டது...

ஒருநாள்... அதிகாலையில் உமாவிற்குப் பிரசவ வலி வந்துவிட.. வீடே பறந்து கொண்டு அவளை மருத்துவ மனைக்குக் கொண்டு சேர்த்தது... சற்று நேரத்திலேயே

சிவாவின் மகன்... உமாவின் கர்ப்பப் பையை விட்டு வெளியே வந்து... உலகைத் தொட்டு விட்டான்...

"சௌதா... எனக்குப் பேரன் வந்துவிட்டான்..." என்று தணிகாசலம் பரவசமாய்க் கூற...

"அண்ணி... எனக்குப் பேரன் வந்துவிட்டான்..." என்று சௌதாமினி சுந்தரியிடம் ஆர்ப்பரித்தாள்...

சிவாவிற்கு செல்போனில் தகவல் சொன்னார்கள்... அன்று மாலையே மும்பையிலிருந்து.. விமானத்தில் பறந்து வந்து விட்டான் சிவா...

குழந்தையை அவன் கைகளில் அள்ளிக் கொண்ட போது.. வாடிய மலர்போல் கட்டிலில் களைத்துப் படுத்திருந்த உமா... கண் விழித்து அவனைப் பார்த்தாள்....

"அத்தான்..."

அவளது விழிநீர் அவளது ஏக்கத்தைக் கூறியது...

சிவா.. அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் குழந்தையை முத்தமிடுவது போல் குனிந்து கொண்டான்... குழந்தையுடன் உமா வீடு திரும்பும் வரை... அவன் சென்னையில் இருந்தான்.. உமா வீடு திரும்பிய மறுநாள் அவன் மறுபடியும் மும்பைக்குக் கிளம்பிவிட்டான்...

"உங்களுக்குச் சென்னையில்தானே வேலை...?"

"ஆமாம்..."

"அப்புறம் எதற்காக.. மும்பையில் போய் இருக்கிறீங்க...?"

'உன்னிடமிருந்து விலகியிருக்கத்தான்!' மனதிற்குள் நினைத்துக் கொண்டான் சிவா...

"சொல்லுங்கள் அத்தான்...."

"என் கம்பெனியின் மும்பை பிரான்சிற்கு டெபுடேசன் போயிருக்கிறேன் உமா..."

"இப்போதுதான் போக வேண்டுமா...?"

சிவா... குழந்தையைக் கவனித்தான்... ரோஜாப்பூக்களின் குவியல் போல் அழகாக இருந்தான் அவனுடைய மகன்...

'இப்போது போயிருக்கத்தான் கூடாது...' சிவாவின் மனம் ஏக்கப் பெருமூச்சு விட்டது..

குழந்தையின் பிஞ்சு விரல்களில் கிடைக்கின்ற எல்லையற்ற இன்பத்தைத் துறந்து எதனிடமிருந்தோ தப்பிக்க முயல்கிறவனாய்... அவன் ஓடியிருக்க வேண்டாம்தானே...

ஆனால்.. அவனுடைய மகனின் பிஞ்சு விரல்களால் கூடச் சிவாவின் மனம் தேடும் அமைதியைக் கொடுக்க இயலவில்லையே...

29

உமா ஆளுயரக் கண்ணாடியில் தன்னை அழகு பார்த்துக் கொண்டாள்.. குழந்தை பிறந்தவுடன்... சுந்தரியின் கவனிப்பிலும்... சரஸ்வதியின் சீராட்டலிலும்... அவளது ஒல்லியான உடலில் சதைப்பபடிப்பு தென்பட்டது... பூசினாற் போல் அழகாக இருந்தாள்... முகத்தில் தாயாகிவிட்ட பெருமிதமும்... மனம் நிறைந்த வாழ்க்கையை வாழும் பூரிப்பும் தென்பட்டது...

"உமா.. இன்னுமா ரெடியாகவில்லை....? நேரமாகி விட்டது பார்..." சுந்தரி அறை வாசலில் இருந்து குரல் கொடுத்தாள்.

"இதோ.. வந்திட்டேன்ம்மா..."

உமா அறையை விட்டு அவசரமாய் வெளியேறினாள்... குழந்தையை மடியில் போட்டு... அதற்குப் பட்டுச் சட்டை அணிவித்துக் கொண்டிருந்த சுந்தரி சிமிர்ந்து மகளைப் பார்த்தாள்...

மயில் கழுத்து நிறப் பட்டுப்புடவை உடுத்தி... அதற்கேற்றபடி ஜாக்கெட் அணிந்திருந்த உமா... வெள்ளைக் கல்

ஜிமிக்கியும்... வெள்ளைக் கல் அட்டிகையும் அணிந்திருந்தாள்... அவளது முகத்தில் சுடர் விட்ட ஜ்வலிப்பு இன்னும் அவளுடைய அழகை அதிகப்படுத்திக் காட்டியது...

'என் கண்ணே பட்டு விடும் போல இருக்கே... என் மகள்.. துடைத்து வைத்து வெள்ளிக் குத்து விளக்கு போல... என்னமாய் ஜொலிக்கிறாள்...' சுந்தரி பெருமையுடன் மகளைப் பார்த்து.. சரஸ்வதியைத் திரும்பிப் பார்த்தாள்....

சுந்தரி நினைத்ததையே சரஸ்வதியும் நினைத்துக் கொண்டிருந்ததை அவளது பார்வை கூறியது.

"உமா.. குழந்தையை வாங்கி மடியில் வைத்துக் கொண்டு உட்காரு.. சுந்தரி.. நீ போய் இரண்டு மிளகாயையும்.. கற்பூரத்தையும் எடுத்துக் கொண்டு வா...."

சரஸ்வதி உத்தரவிட... உமாவின் மடியில் குழந்தையைப் படுக்க வைத்த சுந்தரி.. மாமியாரின் நோக்கம் புரிந்தவளாக.. படியிறங்கிச் சென்றாள்...

"என்ன செய்யப் போகிறீங்க, பாட்டி..."

"அதைப் பார்க்கத்தானே போகிறாய்..."

சுந்தரி... சரஸ்வதி கேட்டவைகளைக் கொண்டு வர... அதை வாங்கி உமாவிற்குத் திலுஷ்டி சுற்றினாள் சரஸ்வதி...

"இதை அடுப்பில் போட்டு விட்டு.. கற்பூரத்தி வாசலில் கொளுத்தி வை..."

"இது எதற்கு, பாட்டி..."

"உனக்கும்.. உன் பிள்ளைக்கும் கண்படாமல் இருக்கத்தான்..."

"யார் கண் வைக்கப் போகிறார்களாம்...?"

"எல்லோரும்தான் கண் வைப்பார்கள்... ஊர் கண்ணில் எந்தக் கண் பொல்லாத கண்ணாய் இருக்குமென்று யாருக்குத் தெரியும்...?"

"ஆமாம் பாட்டி... ஊரில் இருக்கிறவங்களுக்கு என் மேல் கண் போடுவதுதான் வேலையா...?"

"சும்மா பகடி பேசாதே... உமா.. இன்னைக்குக் குழந்தை பிறந்து முப்பது நாள்கள் முடிந்துவிட்டன... அவனுக்குப் பெயர் வைத்து... நீ வீடு கூட வேண்டும்... விருந்திற்கு வருகிறவர்கள் கண் கொள்ளிக் கண்ணாய் இருந்து விட்டால் என்ன செய்கிறது...?"

"இதொல்லாம் ரொம்ப ஓவர் பாட்டி.... இப்படிப் பேசினால்.. நீங்க கொடுக்கும் விருந்திற்கு யார் வருவாங்க...?"

"வருகிறவங்க வருவாங்க... நீ வேலையைப்பார்..."

சற்று நேரத்தில்.. வீடு நிறைய உறவினர் கூட்டம் வந்து நிறைந்து விட்டது... சுந்தரி வந்தவர்களை வர வேற்றபடி... வாசலையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். சரஸ்வரியின் அருகே வந்து ரகசியக் குரலில்... கவலைப்பட்டாள்...

"என்ன அத்தை... இன்னும் சௌதாவையும் அவள் வீட்டுக்காரரையும் காணோம்... அதைவிட முக்கியமாய் மாப்பிள்ளையைக் காணோமே..."

"வந்துவிடுவாங்க.. கவலைப் படாதே..."

மருமகளைச் சமாதானப் படுத்தினாலும் சரஸ்வதியின் வயிற்றில் பயப்பந்து உருளத்தான் செய்தது...

'ஏன் இன்னும் அவங்க வரவில்லை... வீடுபூரா வந்திருக்கும் விருந்தாளிகள் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்க ஆரம்பித்து விடுவாங்களே...'

சரஸ்வதி நினைத்து முடிக்கு முன்னால் அவள் அலுகில் வந்தாள் அம்புஜம்...

"என்ன சரஸ்வதி... எப்படியிருக்கிற...?"

தான் எப்படியிருக்கிறோம் என்பதை விலாவாரியாய் விளக்காமல் இனி அம்புஜத்திடமிருந்து தப்ப முடியாது என்று சரஸ்வதிக்குப் புரிந்துவிட்டது.

அம்புஜம் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்தவாறு சரஸ்வதியின் கழுத்தில் இருந்த வைர அட்டிகையைப் பொறாமையிடன் பார்த்தாள்....

'கொள்ளிக் கண்...' சற்று முன் பேத்தியிடம் கூறிய கொள்ளிக் கண்ணை நேரில் தரிசித்த சரஸ்வதி பல்லைக் கடித்தாள்...

"என்ன சரஸ்வதி... விசேச வீட்டில்.. பட்டும்... வைரமுமா மினுக்கற போல..."

"விசேச வீடுன்னா.. மினுக்கத்தானே வேணும்... ஆமாம், நீ ஜூஸ் சாப்பிட்டாயா...?"

"எல்லாம் உன் மருமகள் நான் வந்தவுடன் ஓடிவந்து உபசரனை பண்ணி விட்டாள்... அதிலெல்லாம் ஒன்றும் குறைச்சல் இல்லை..."

"வேறு எதில் குறைச்சல்...?"

"என்னதான் இருந்தாலும் தான் தாசில்தார் பெண்டாட்டின்னு ஒரு மண்டைக்கனம்.. உன் மருமகள்கிட்ட இருக்கு... கொஞ்சம் தட்டி வை..."

'எதைத் தட்டி வைக்க...'

"மருமகள்களையெல்லாம் ரொம்பவும் ஆடவிடக் கூடாது, சரஸ்வதி..."

'ஆமாம்... இப்ப என் மருமகள் வீட்டுக்குள்ள பரதநாட்டியம்தான் ஆடிக்கிட்டு இருக்கிறா பாரு... நான் அவள் ஆட்டத்தை நிறுத்த.. போடி.. போக்கத்தவளே...'

"என் மருமகள் ரப்பும்... ராங்கியும் பிடிச்சவ...."

'உன்னை விடவா...?'

"அவளை விட்டால் பிடிக்க முடியாதுன்னு எவ்வளவோ இறுக்கிப் பார்த்தேன்... ஊஹூம்.. அவள் அகப்படவே

இல்லையே...."

'கெட்டிக்காரி... அப்படித்தான் இருக்கணும்...'

"இப்ப என் கண்ணில் இல்ல... விரலை விட்டு ஆட்டுறா..."

'அட்ராசக்கை... அதுக்கே அவளுக்கு ஒரு பாராட்டு விழா எடுக்கணுமே...'

"அதைப் போல.. நீயும் உன் மருமகளைக் கோட்டை விட்டு விடாதே..."

'ஆமாண்டி... அவளுக்கு நேத்திக்குத்தான் கல்யாணமாகி.. இன்றைக்கு என் வீட்டில் வாழவந்திருக்கிறா... அவளே பெண்ணைக்குக் கல்யாணம் பண்ணி வைத்து... ஒரு மருமகனுக்கு மாமியாராகி.. இன்றைக்கு ஒரு பேரப் புள்ளைக்குப் பாட்டியும் ஆகிவிட்டா.. இப்பப் போய் கோட்டையைப் பிடித்துக் கொடியை நாட்டச் சொல்லு... வேற ஜோலிக் கழுதையே உனக்கு இல்லையா....'

"என்ன சரஸ்வதி... நான் பேசப்பேச... வாயே திறக்காமல் மரமாட்டம் நிற்கிற...?"

'உன்கிட்ட... வாயைத்திறந்து பேசிட்டாலும்... ம்ஹூம்....'

"நீ என்ன செய்வே, பாவம்...."

'எதுக்குடி இப்ப... என்னைப் பாவம் போடறே...'

"உனக்கு வந்து வாய்த்திருக்கிற மருமகள் அப்படி..."

"எப்படி..."

"சீமைச் சித்ராங்கியில்ல உனக்கு வந்து மருமகளா வாய்த்திருக்கிறாள். பேசியே காரியத்தைச் சாதிச்சுப் புடுவாளே..."

இன்னும் அம்புஜத்தைப் பேசவிட்டால்... அவள் எட்டு ஊருக்கு ஏரோட்டுவாள் என்று தெரிந்ததால்... சரஸ்வதி அவசரமாய் அவளது வாயை மூட.. தன் வாயைத் திறந்தாள்...

"அதை விடு அம்புஜம்... அவளே பாட்டியாகி விட்டாள்... நமக்கும் வயசாகிடுச்சு... இனி யார் எப்படிப் போனால் நமக்கென்ன... காலம் போன கடைசியில் மத்தவங்களைப் பத்தி ஆராய்ச்சி பண்ணுவதை விட்டு விட்டு... நம்ம பொழைப்பைப் பார்ப்போம்....."

அம்புஜத்தின் கூரிய மூளைக்கு சரஸ்வதி கூறுவதன் அர்த்தம் புரிந்து விட்டது...

"என்னது.... அதுக்காக... போட்டதைச் சாப்பிட்டு விட்டு... மூலையில் முடங்கிக் கொள்ளச் சொல்கிறாயா...?"

"இருந்தாதான் என்ன தப்பு...?"

"நீ வேண்டுமானால் அப்படி இரு.. என்னால் அப்படியெல்லாம் இருக்க முடியாது..."

'நீ சொன்னால் கேட்கிற பிறவியா...?'

சரஸ்வதி... வெறுப்புடன்... மற்ற விருந்தினர்களை விசாரிக்கப் போவது போல் நகர முயல... அம்புஜம் அவளது கையைப் பிடித்து நிறுத்தினாள்....

"நில்லு சரசு... உன்னிடம் அப்போதிருந்தே கேட்க வேண்டும்... கேட்க வேண்டும்ன்னு இருந்தேன்..."

"கேளு..."

"உமாவின் மாமனார் வீட்டிற்கும்... உன் மகன் வீட்டிற்கும் சண்டையாமே...."

"அது அப்போ...."

"இல்லையாமே... இது இப்போவாமே...."

"அப்படின்னு யார் சொன்னது...?"

"நம்ம சொந்த பந்தமேல்லாம்... இப்போது இதைத் தானே பேசுகிறாங்க..."

'என்னது.. எல்லோரும் பேசுகிறாங்களா...'

சரஸ்வதி தூக்கிவாரிப் போட... சுற்று முற்றும் பார்த்தாள்.. வந்திருந்தவர்கள்... இயல்பாகப் பேசிச் சிரித்தபடி அமர்ந்திருந்தனர்.. அம்புஜத்தைத் திரும்பிப் பார்த்து முறைத்தாள் சரஸ்வதி...

## 31

'இவளை என்ன செய்தால் தகும்...?' என்று சரஸ்வதி பல்லைக் கடித்துக் கொண்டிருப்பதை.. அறிந்தும்... அறியாதவள் போல் அம்புஜம் நீட்டி முழக்கினாள்...

"உன் மகன் செய்த சீர்வரிசை பத்தவில்லைன்னு சௌதா வீட்டில் முணுமுணுக்கிறாங்களாமே..."

"அதெல்லாம் இல்லை...."

"அவங்களுக்கும்... உங்களுக்கும் பேச்சு வார்த்தையே இல்லையாமே...."

"உனக்கு யாரோ தவறான செய்தியைக் கொடுத்திருக்கிறாங்க, அம்புஜம்...."

"இல்லையே.. சரியான செய்திதானே..."

"எதை வைத்து அப்படிச் சொல்கிற....?"

"ஏன் சரஸ்வதி... எனக்குக் காது குத்தி... இவ்வளவு பெரிய கம்மலைப் போட்டிருக்கேன்... திரும்பவும் எனக்குக் காதுகுத்தப் பார்கிகிறாயே... ஊரில் இருக்கிற ஜனமெல்லாம் இங்க உன் கொள்ளுப் பேரனுக்குப் பெயர் வைத்து... தொட்டிலில் போடுவதைப் பார்க்க வந்து கூடியிருக்கு... உடந்தைப் பட்ட உமாவின் மாமியார்.. மாமனார் இன்னும் வரக் காணோமே... இதைவிடப் பெரிய கூத்து.. இந்தப் பிள்ளைப் பெத்த மகராசன் இன்னும் பம்பாயிலிருந்து கிளம்பவே இல்லையாமே..."

'வந்து விட்டதா... இப்படிப் பேச்சு வந்துவிட்டதா...' சரஸ்வதி கோபத்துடன் பல்லைக் கடித்தபடி உள்ளே போனாள்.

அவளின் முகத்திலிருந்து அவளது கோபத்தின் அளவை யூகித்த சுந்தரி...

"என்ன அத்தை..." என்று வினவினாள்...

"என்ன.. 'நொன்ன' அத்தை...?"

"ஏன் கோபப்படறீங்க அத்தை..."

"பின்னே... கோபப் படாமல் உன்னைக் கொஞ்சச் சொல்கிறாயா....? அந்த அம்புஜமே ஒரு பிபிஸி நியூஸ் சேனல்...."

"அதுதான் நமக்கு தெரிந்த க¡தாயச்சே..."

"அதைவிட நமக்குத் தெரியாத கதை ஒன்னு இருக்கு...."

"என்ன...?"

"வெறும் வாயை மெல்லுகிறவள் அவல் கிடைத்தால் விடுவாளா...?"

"விட மாட்டாள்..."

"இப்ப அவள் வாயில் போட்டு மென்று கொண்டிருப்பது நம்ம வீட்டு ராமாயணத்தை..."

"என்னத்தை சொல்கிறீங்க..."

"முழுசாய்ச் சொல்கிறேன் கேளு..."

சரஸ்வதி விளக்கமாய்க் கூறவும் சுந்தரிக்குக் கவலை வந்து விட்டது...

"அடக்கடவுளே.. இப்படியா பேசிக்கிறாங்க..."

"ஆமாம்... இப்ப என்ன செய்யப் போகிற...?"

"சௌதா ஏன் இன்னும் வரவில்லை... அவள் வந்தால் இந்தப் பேச்சு நிற்குமே..."

"இதைத்தானே... நானும் சொல்கிறேன்... அவளுக்குப் போன் போடு..."

சுந்தரி கையில் தன் செல்போனை எடுக்கவும்.... வீட்டு வாசலில் சௌதாமினியின் கார் வந்து நிற்கவும்... சரியாக இருந்தது...

"அத்தை... சௌதா வந்து விட்டா..."

"அப்பாடி... இப்போதாவது வந்து சேர்ந்தாளே மகராசி..."

'வந்தாளே... மகராசி...' யென்று பெரியன்னை நிம்மதிப் பெருமூச்சு விடுவதை அறியாதவளாய்... பாலசுப்பிரமணியம் முன்னே படியேற... அவர் பின்னால் வந்தாள் சௌதாமினி...

"ஏன் சௌதா லேட்...?" சரஸ்வதி கோபத்துடன் வினவினாள்.

"கிளம்ப மனசிருந்திருக்காது..." அம்புஜம் ஊடே புகுந்து கூற... சரஸ்வதியின் முகத்தில் எள்ளும்... கொள்ளும் வெடித்தது...

நொடிப்பொழுதில்... நிலைமையை யூகித்து விட்ட சௌதாமினி... சரஸ்வதியின் கையைப் பிடித்துக் கொண்டு...

"கோபப்படாதீங்க பெரியம்மா... சிவா மும்பையிலிருந்து வந்தவுடன்... அவனையும் அழைத்துக் கொண்டு சேர்ந்து வந்து விடலாமேன்று நினைத்தேன்... ஆனால்.. ஏனோ சிவாவின் பிளைட் லேட்டாகி விட்டதாம்... அதனால்.. அவன் நேரே ஏர்போர்ட்டிலிருந்து இங்கே வந்து விடுகிறேன்னு சொன்னான்.. அதனால்தான் லேட்டாகி விட்டது பெரியம்மா..." என்று சமாதானம் சொன்னாள்...

'பூ...இவ்வளவுதானா....' என்று நினைத்துக் கொண்டாள் அம்புஜம்...

ஊதி... ஊதிப் பெரிதாக்கிவிட நினைத்த பிரச்சனை இப்படி புஸ்வாணமாய்ப் போய் விட்டதே என்று அவளுக்கு இருந்தது....

"சரி... சரி... உள்ளேவா... உன் மருமகள்தான் ரொம்பவும் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறாள்... அவளிடம் வந்து காரணத்தைச் சொல்லு..."

"என்னது... உமா கவலைப் படுகிறாளா...? பச்சை உடம்புக்காரி... மனசைப் போட்டு அலட்டிக்கலாமா...?"

சௌதாமினி அவசரமாய் உள்ளே விரைய.... சரஸ்வதி அம்புஜத்தை அர்த்தத்துடன் ஒரு பார்வை பார்த்தாள்...

"ம்ஹும்.. இப்ப இருக்கிற இளசுகளுக்கு... மருமகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கத் தெரியவில்லை... இப்படித் தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டால்... நாளைக்கு மாமியார் குடுமிதான்.. மருமகள் கையில் சிக்கும்... பின்னால் குத்துதே... குடையுதேன்னு வந்து நிற்கும்ங்க..."

அம்புஜம் அருகிலிருந்தவளிடம் சௌதாமினியைக் கண்ஜாடை காட்டி அங்கலாய்க்க ஆரம்பிக்க.. சரஸ்வதி உள்ளே நகர்ந்தாள்...

"அத்தை! அவர் வரவில்லையா...?"

உமாவின் கண்கள்... சௌதாமினியின் பின்னால் அவன் தென்படுகிறானா என்று துழாவின..

"வந்துவிடுவான் உமா..."

"எப்போது...?"

"கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான்..."

சௌதாமினி சமாதானமாய்க் கூறினாலும்... உமாவின் மனம் சமாதானம் அடையவில்லை....

'அவன் வருவானா...' அவள் விழிகள்... அவன் வரும் வழி நோக்கிக் கொண்டே இருந்தன...

'அந்தச் சிவகாமி மகனிடம்...

சேதி கொல்லடி..

என்னைச் சேரும் நாள் பார்க்கச் சொல்லடி...

வேறு எவரோடும்...

நான் பேச வார்த்தை ஏதடி...

வேலன் இல்லாமல் தோகை ஏதடி...'

மனம் திரை இசைப் பாடலை இசைத்தது.. விழி அவன் வரும் வழியை எதிர்பார்த்துக் காத்திருந்தது...

நேரம் நகர.. நகர... உமாவின் மனம் பதைத்தது... ஏன் இந்த விலகல்.. என்று மறுகினாள் அவள்... அவன் முகம் காணத் துடித்தாள்..

## 33

'கண்கள் சரவணன்...

சூடிடும் மாலை....

கன்னங்கள் வேலவன்...

ஆடிடும் சோலை...

பெண்ணெனப் பூமியில்..

பிறந்த பின்னாலே...

வேலை வணங்காமல்...

வேறென்ன வேலை...

நெஞ்சே தெரியுமா...

அன்றொரு நாளிலே...

நிழலாடும் விழியோடு ஆடினானே...

அன்று நிழலாடும் விழியோடு ஆடினானே...

இன்று கண்ணில் நின்றாடச் சொல்லடி...'

அவளது நெஞ்சம் தவித்துப் பாட... அவள் கண்களில் கண்ணீர்த் திரை விழுந்தது... அந்தக் கண்ணீர்த் திரையினூடே... சிவா தெரிந்தான்.. அவசரமாய் விழி துடைத்துப் பார்த்தாள். அவனேதான்.. அவளது நீர் மல்கும் கண்களைப் பார்த்தபடி அருகே வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டான்...

"அத்தான்..." அவள் நாத் தழுதழுக்க அழைத்தாள்...

"ம்ம்..." அவன் அவளைப் பாராமல் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தான்...

"ஏன்... இவ்வளவு லேட்...?"

"ப்ளைட் லேட்..."

"இன்றைக்கு விசேசம்ன்னா இன்றைக்குத்தான் வர வேண்டுமா...? நேற்றே வந்திருக்கக் கூடாதா...?"

"வேலை இருந்தது..."

அவன் விட்டேற்றியாய்ப் பதில் அளித்தது அவளைப் பாதிக்கவேயில்லை... அவள் அவனைப் பார்த்ததே மிகப் பெரிய வரம் என்பது போல்.. அவனையே ஆவலாகப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்...

அவன் அவளது பார்வையைக் கவனிக்காமல் இல்லை... அதைக் கவனித்துக் கொண்டே... கவனிக்காதவன் போல்... குழந்தையின் முகத்தைப் பார்த்து... உதட்டைச் சுழித்துக் கொஞ்சிக் கொண்டேயிருந்தான்...

"சிவா.. ஏற்கெனவே லேட்டாயிடுச்சு... குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே வா..."

சௌதாமினி உரத்த குரலில் அழைக்கவும்.. சிவா... உமாவைத் திரும்பிக் கூடப் பார்க்காமல்.. மாடிப்படிகளில் இறங்க ஆரம்பித்து விட்டான்...

'நான் வரவேண்டாமா... ஏன் என்னை நீங்கள் கூப்பிடவில்லை....'

உமா அசையாமல் நின்றுவிட்டாள்...

"உமா... உன்னை வேறு தனியாய் அழைக்கணுமா....?"

இப்போது சத்தம் போடுவது சுந்தரியின் முறையாகி விட்டது... உமா பதுமை போல் கீழே இறங்கினாள்...

அவள் வரவிற்காகக் காத்திருந்தவர்கள் திரும்பி மாடிப்படியைப் பார்க்க.. சிவாவும் யதேச்சையாய்த் தன் பார்வையை மாடிப்படியை நோக்கித் திருப்பினான்...

பார்த்த விழிகளை வேறுபுறம் திருப்ப முடியாமல் அசைவற்று நின்று விட்டான்...

'அழகு தெய்வம்.. மெல்ல.. மெல்ல...

அடியெடுத்து வைத்ததோ....'

எப்போதோ அவன் கேட்ட பாடல் வரிகளுக்கு இன்று உயிர் கொடுத்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் உமா... பூஞ்சை உடலுடன் அவள் இருந்தபோதே... மதி மயங்கி நின்றவன் சிவா...

இன்று பூரிக்கும் மௌனத்தின் அழகோடு அவன் எதிரே வந்து சேரவும் அயர்ந்து விட்டான்... அதே நேரம் கணவனை ஏறிட்டும் பார்த்த உமாவும்... அவனது கண்களில் தெரிந்த ஆவலைக் கண்டு கொண்டாள்...

சற்று முன்பு வரை அவள் மனதில் குடி கொண்டிருந்த கிலேசம் மறைய.. மயக்கும் புன்னகையோடு... அவனை நெருங்கி.. அவனது கரங்களைப் பற்றிக் குழந்தையை வாங்கித் தொட்டிலில் படுக்க வைத்தாள்.. பின் கணவனுடன் உராய்ந்து நின்று கொண்டாள்...

"குழந்தைக்கு பெயர் வையுங்கோ..."

உமா.. தணிகாசலத்தையும்.. பால சுப்ரமணியத்ரையும் பார்த்துத் தயங்கி நிற்க... பாலசுப்ரமணியம்.. மருமகளை ஊக்குவித்தார்...

"ம்ம்... சொல்லும்மா... நீ என்ன பெயர் செலக்ட் பண்ணியிருக்கிற...?"

"அவர் என்ன பெயர் செலக்ட் பண்ணியிலுக்கிறாராம் மாமா..."

"சொல்லுடா சிவா... உன் பொண்டாட்டி கேட்பது காதில் விழுகவில்லையா...?"

"ஆதித்யன்..."

"அருமையான பெயர்.. அதையே வைத்து விடுவோம்..."

குழந்தையின் காதுகளில் மூன்று முறை பெயரைச் சொல்லி அழைத்தார்கள்.. விருந்து ஆரம்பமானது.. அன்று இரவு சௌதாமினியும்.. பாலசுப்ரமணியமும் அவர்கள் வீட்டிற்குத் திரும்பிவிட... சிவா.. உமாவோடு... அவள் வீட்டில் தங்கிவிட்டான்...

34

இரவின் அமைதியில் அறைக்குள் வந்தாள் உமா... குழந்தையை அருகில் படுக்க வைத்து... கண்மூடித் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான் சிவா...

உமா குழந்தையை மெதுவாகத் தூக்கி... தொட்டிலில் படுக்க வைத்தாள்.. சன்னமான விளக்கொளி அறையில் நிறைந்திருக்க... குழல் விளக்கை அணைத்தாள்... அவன் அருகே படுத்தாள்.. அவன் புறம் திரும்பி... அவனது முடியை விரல்களால் அளைந்தாள்...

அதற்கு மேல் தூங்குவது போல் பாவனை செய்யச் சிவாவால் முடியவில்லை.. அவன் வேகத்துடன் திரும்பி.. அவளைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்...

"அத்தான்..."ஆசையுடன் முணுமுணுத்தவாறு அவனது அணைப்பினில் அடங்கிப் போனாள் அவள்...

அன்று இரவு.. சிவா வழக்கத்திற்கு மாறாக அதிக ஆவேசம் காட்டினான்.. பழக்கமில்லாத அவனது வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத உமா திணறினாள்.. சிவா அவளை விடுவிக்கும் எண்ணமே இல்லாமல் தூங்கிப் போனபோது... உமாவின் மனதில் எல்லையற்ற சாந்தி நிலவியது...

அவனது செய்கைகளைக் கண்டு எங்கே அவன் தன்னிடமிருந்து விலகிப் போய் விட்டானோ என்று நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு.. அவன் தன்னிடமே

திரும்பி வந்து சேர்ந்துவிட்டான் என்பதில் நிறைவு வந்து விட்டது...

குழந்தையின் அழுகுரலில் விழித்து எழுந்தவள்... அருகே படுத்திருந்தவன் தூக்கம் கலையாமல்... மெதுவாய் அவனது கைகளை விலக்கி விட்டு எழுந்தாள்...

ஆனால்... அதற்குள் அவன் விழித்து விட்டான்...

"என்ன உமா...?"

"ஒன்றுமில்லை அத்தான்... குழந்தை அழுகிறான்..."

"இரு...நான் அவனைத் தூக்குகிறேன்...."

சிவா அவசரமாய் எழுந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தான்.. அவனது பரிவிலும்... பிரியத்திலும்... மனம் நெகிழ... குழந்தையை வாங்கிக் கொண்டாள் உமா...

குழந்தையுடன் அமர்ந்திருந்தவளையே அவன் பார்த்துக் கொண்டிருக்க... தலை நிமிர்ந்து அவன் பார்வையைச் சந்தித்த உமா.. புருவங்கள் மேலேற...

"என்ன அத்தான்...?"என்றாள்...

"ஒன்றுமில்லை..."

"சும்மா சொல்லுங்கள்..."

"உமா.. உனக்கு என்னைப் பிடிக்குமா...?"

அவனை வியப்புடன் பார்த்த உமா... சத்தமில்லாமல் சிரித்தாள்...

"என்னடி...?"

அவனின் இந்தக் கேள்விக்குப் பதிலை அறிய அவனது மனம் துடித்த துடிப்பை அறியாமல்... அவள் சுவா தீனமாய்ப் பதில் கூறினாள்....

"இன்னொரு குழந்தைக்கும் அப்பா ஆகிவிட்ட பின்னால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாமா...? அவசரப்பட்டு... இப்போது போய் இந்தக் கேள்வியைக்

கேட்கறீங்களே... இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது, அத்தான்..."

சிவாவின் முகத்தில் ஓர் இறுக்கம் வந்தது.. புருவங்கள் முடிச்சிட... அவளையே பார்த்தான்..

'ஓ.. உன் குழந்தைக்கு அப்பா என்பதால் உனக்கு என்னைப் பிடிக்கிறதா... இப்போதும்...எனக்காக... என்னைப் பிடிக்கவில்லை....' சிவா மனம் கசந்தான்...

குழந்தை உறங்கிவிட்டான்.. அவனைத் தொட்டிலில் கிடத்திவிட்டு... உமா கட்டிலுக்கத் திரும்பியபோது சிவா கட்டிலின் ஓரத்தில் அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருந்தான்...

"அத்தான்..." உமா மெல்லிய குரலில் அழைத்தாள்... அவனிடமிருந்து பதில் வரவில்லை..அவன் தோள் மேல் கை வைத்தாள்... அவன் உடலில் அசைவில்லை...

தூங்குகிறான் என்று முடிவு செய்த உமா அயர்ந்து உறங்கி விட்டாள்.. விழித்து எழும் போது... சூரியனின் கதிர்கள் அறைக்குள் நன்றாகப் பரவியிருந்தன...

அவசரமாய் திரும்பிச் சிவாவைப் பார்த்தாள்... அருகே அவன் இல்லை... தொட்டிலைப் பார்த்தாள்... தொட்டிலில் குழந்தையும் இல்லை...

அறையை விட்டு வெளியே வந்தாள்... மாடி ஹாலில் தரையில் கால் நீட்டி அமர்ந்திருந்த சரஸ்வதியின் மடியில் குழந்தை இருந்தான்...

"இவன் எப்படி உங்ககிட்ட வந்தான், பாட்டி..."

அவள் புரியமல் வினவ... அவளது அறியாமையை ரசித்துச் சிரித்தாள் சரஸ்வதி...

"ஊம்... உன் பிள்ளை கால் முளைத்துத் தொட்டிலை விட்டு இறங்கி.. தானாய் நடந்து வந்தான்..." சரஸ்வதி தன் நகைச்சுவையைத் தானே மெச்சிச் சிரித்துக் கொண்டாள்...

"போங்க பாட்டி..." உமா செல்லமாய்ச் சிணுங்கினாள்...

அப்போது கையில் காபிக் கோப்பையுடன் மாடிப்படியேறி வந்த சுந்தரி... காபியை உமாவிடம் நீட்டியபடி...

"உன் பாட்டி போவது இருக்கட்டும்... உன் புருசன் ஊருக்குப் போய்விட்டாரே... அது உனக்குத் தெரியுமா...?"என்று வினவினாள்...

காபியை மறந்து கலங்கிப் போய் அன்னையைப் பார்த்தாள் உமா...

"எப்போம்மா போனார்...?"

"விடியற்காலையிலேயே... குளித்து டிரஸ் மாற்றிக் கிட்டு குழந்தையைத் தூக்கிக் கிட்டு கீழே வந்தார்... நான் காபி கொடுத்தேன்.. குடித்தார்.. உமா அசதியாய்த் தூங்குகிறாள்... விடிய.. விடிய... குழந்தை அழுது கொண்டேயிருந்தான்.. இப்போதுதான் அவள் தூங்க ஆரம்பித்தாள்... தூங்கட்டும்.. குழந்தையை நீங்க பார்த்துக்கங்கன்னு சொல்லி என்னிடம் கொடுத்து விட்டுக் கிளம்பி விட்டார்..."

"எங்கே போகிறார்ம்மா... எங்கள் வீட்டிற்கா....?"

"இல்லைம்மா... மும்பைக்குப் போய் விட்டாராம்... சௌதாவிடம் கூடச் சொல்லிக் கொள்ளவில்லை போல... அவள் இங்கே போன் பண்ணினாள்.. மகன் அவளிடம்

கூடச் சொல்லாமல் கிளம்பிவிட்டதில் அவளுக்கு வருத்தம்..."

'என்னிடமும்தான் சொல்லவில்லை...' உமாவிற்கு மனம் வலித்தது.. துக்கம் தொண்டையை அடைத்தது...

காபியைக் கசாயம் குடிப்பது போல் விழுங்கி விட்டு உள்ளே சென்று செல்போனைக் கையில் எடுத்தாள்... அவனுக்குப்

போன் பண்ணினாள்.. அழைப்பொலி போய்... துண்டிக்கப்பட்டது...

இது உமாவிற்குப் பழக்கமான ஒன்றுதான்... ஆனால் முதல் நாளிரவில் அவன் நடந்து கொண்ட விதம்.. அவளுக்கு நம்பிக்கையை ஊட்டியிருந்தது...

இரவனில் வாழ்க்கை மீதான நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டு... விடியலில் அதைப் பறித்துப் போட்டு விட்ட அவனுடைய குரூரம் அவளது நெஞ்சைத் தாக்கியது...

"உமா.. குளித்துவிட்டு வா... நான் குழந்தையைக் குளிப்பாட்டி வைத்திருக்கிறேன்..." சரஸ்வதி குழந்தையுடன் தன் அறை நோக்கி நடந்தாள்...

குளித்து.. உடைமாற்றி... மகனைத் தேடிச் சென்ற உமா.. உயிரில்லாத வெறும் கூடு போல் தன்னை உணர்ந்தாள். வீட்டில் உள்ளவர்கள் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்க, உமா மட்டும்... தன் உணர்வுகளைத் தனக்குள் புதைத்துக் கொண்டு நடமாடினாள்...

"உமா...இங்கே பாரேன்..."

"என்ன பாட்டி..."

"குழந்தை அச்சு அசலாய்ச் சிவாவைப் போலவே இருக்கிறானே... இவன் சிரிக்கும்போது அப்படியே சின்ன வயதில் சிவா சிரித்தது போலவே இருக்கு...."

சரஸ்வதி அழைக்கவும் உமா ஓடிப்போய் மகனைப் பார்த்தாள்...

"ஆமாம் பாட்டி.. இத்தனை நாள் நான் இதைக் கவனிக்காமல் போய் விட்டேனே..."

"நீ எங்கே இவனைக் கவனித்தாய்...? சதா உன் புருசனின் நினைவுதான்... பிள்ளையின் நினைவு கூட உனக்கு இருக்க மாட்டேன் என்கிறது.. என்னவோ.. நாங்கள் இருக்கப்போய்க் குழந்தையைப் பார்த்துக் கொள்கிறோம்... நாங்கள் இல்லாவிட்டால்.. நீ என்ன பண்ணுவாயோ...

புருசனின் நினைப்பை விட்டுவிட்டு... கொஞ்சம் பிள்ளையையும் கவனி..."

சரஸ்வதி கேலியாகக் கூறிய இந்த வார்த்தைகளைச் சிவாவின் முன்னால் கூறியிருந்தால்.. ஒரு வேளை அவனுடைய மனத்தாங்கல் ஓடியே போயிருந்திருக்கும்...

அது என்னவோ... அவன் வந்து விட்டால்.. அவன் முன்னிலையில்... வீட்டில் இருக்கிறவர்கள் எல்லாம் உமாவிடம் உரிமை பாராட்டுவார்கள்... அவன் போய் விட்டால் உமாவை அவனுடன் இணைத்துக் கேலி பேசுவார்கள்...

பாவம் உமா.. மனதில் இருக்கும் காதலை வெளிப்படுத்தாமல் அவள் விட்டதினால்.. திருமணம் செய்து கொண்டு விட்ட கடமைக்காக அவள் தன்னுடன் வாழ்கிறாள்... காதலினால் இல்லையென்று சிவா நினைத்து விட்டான்...

தன் நினைவைப் பல வகையாய் அவன் வெளிப்படுத்திப் பார்த்து விட்டான்... உமா அதற்குப் பதில் சொல்லிய விதத்தில் அவளை விட்டுப் பிரிந்து போய்விட்டான்...

36

"நல்ல நேரம் இருக்கிறபோதே கிளம்பி விட வேண்டும்.. எல்லோரும் மசமசன்னு ஆளுக்கொரு திசையில் நிற்கக்கூடாது.. என்ன புரிகிறதா...?" அருணகிரி சப்தம் போட்டுக் கொண்டிருந்தார்..

"நாங்க எல்லோரும் ரெடிதான்.. முதலில் உங்க தம்பி ரெடியாகி வந்து விட்டாரான்னு பாருங்க..." என்று சரஸ்வதி கேலி போல் கணவனிடம் கூறினாள்...

"நான் அப்போதே ரெடியாகி விட்டேன், அண்ணி..." வேதகிரி.. அடக்கத்துடன் அருணகிரியின் அருகில் வந்து நின்றார்...

"பார்த்தாயா.. நீ சொல்வது போல் நாங்கள் வைத்துக் கொள்ள மாட்டோம்..." அருணகிரி பெருமையுடன் பார்த்தார்...

"சௌதா.. உன் அப்பாவும்... பெரியப்பாவும் கூட்டணி போட்டு விட்டாங்க... இந்தக் கூட்டணி பலமான கூட்டணி. நம்மால் உடைக்க முடியாது... வா... நாம் இவர்களை விட்டுவிட்டு வேறு வேலையைப் பார்ப்போம்..."

"பெரியம்மா... இவங்க கூட்டணியைப் போல் ஸ்ட்ராங்கான கூட்டணி ஒன்று ஹாலில் சேர்ந்திருக்கு.. அதுவும் இந்தக் கூட்டணி போல்தான்.. பெவிகால் போட்டது போல் ஒட்டிக் கொண்டிருக்கு.. பிய்த்தாலும் பிய்க்க முடியவில்லை...."

"எது.. அது..?"

சரஸ்வதி கேலியாக வினவியபடி ஹாலைப் பார்த்தாள்... தணிகாசலமும்.. பாலசுப்ரமணியமும்.. ஒருவர்கையை ஒருவர் பிடித்துக் கொண்டு... ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தனர்...

மகனும்.. மருமகனும் அவ்வாறு ஒற்றுமையாய்ப் பேசிக் கொள்வதைப் பார்த்த சரஸ்வதிக்குப் பெருமை பிடிபட வில்லை....

"சுந்தரி.. ஹாலைப் பார்த்தாயா...?"

"ம்ம்... அதெல்லாம் அப்போதே பார்த்து விட்டேன்... இது உங்களுக்குத்தான் புதுசு.. எனக்குப் பழசு..."

"இது எப்போதிருந்து...?"

"ரொம்ப நாளாவே நடக்குது..."

"இரண்டு பேரும் அடிச்சுக்கிட்டுத்தானே.. வீட்டுப் பொம்பளைகளைப் பிரித்து வைத்தாங்க...?"

"ஆமாம் அத்தை.. இப்ப இரண்டு பேரும் கொஞ்சிக் குலாவிக் கொள்வதைப் பார்த்தால்.. எப்படி இருக்கிறது தெரியுமா? என்னவோ... இவர்கள் இருவரும் நல்லகுடி நாணயம்.. தூத்துக்குடி வெங்கலம் போல் பில்ட் அப்

பண்ணிக் கொள்கிறார்களே.. பொம்பளைகள்தான் சண்டை போட்டுக் குடும்பத்தைப் பிரித்து விட்டது போலவும்... இவர்கள் இரண்டு பேரும் ஒன்றும் தெரியாத அப்பாவிகள் போலவும்... என்ன ஒரு நடிப்பு...!"

"இவர்கள் மட்டுமில்லை சுந்தரி.. உலகில் நிறையப் பேர் இப்படித்தான் இருக்கிறார்கள்..."

"என்னவோ போங்க அத்தை... இவர்கள் இரண்டு பேருமே நடிப்பதில் மன்னர்கள்... ஒருவருக்கொருவர் நடிப்பதில் விட்டுக் கொடுத்து விட் மாட்டார்கள்..."

"நிஜம்தான், அண்ணி..."

"பரவாயில்லையே.. சௌதா கூட நான் சொல்வதை ஒப்புக் கொண்டு விட்டாளே..."

"உண்மையை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்..."

மகளும்.. மருமகளும் பேசிக் கொள்வதைக் கேட்ட சரஸ்வதி சிரித்தாள்...

"என்னவோ போங்கம்மா... இரண்டும் இரண்டு அகப்பை.. இரண்டுமே கழன்ட அகப்பை என்கிறது இந்த வீட்டில் இருக்கிற பிரகிருதிகளுக்குத்தான் பொருந்தும்..."

சரஸ்வதி அந்தப் பேச்சிற்கு முத்தாய்ப்பு வைத்து முடித்தாள்...

"உமா... உன் பெட்டிகள் எங்கேம்மா..."

தணிகாசலம் வினவினார்... உமா ஏதோ சிந்தனையாய் ஜன்னல் பக்கத்தில் நின்று வெளியே வெளித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்... தகப்பனார் அழைக்கவும் திரும்பிப் பார்த்து மலங்க.. மலங்க விழித்தாள்...

மகளைக் கவலையுடன் பார்த்த சுந்தரி....

"அவளுடைய பெட்டிகளை ஹாலில் வைத்திருக்கிறேன், பாருங்கள்..." என்று குரல் கொடுத்தாள்...

"அப்படியா.. எல்லாவற்றையும் சரியாக எடுத்து வைத்துக் கொண்டாயாம்மா..." தணிகாசலம் மீண்டும் உமாவிடம் கேட்க... அவள் பழையபடியே விழித்து வைத்தாள்...

"எல்லாம் சரியாகத்தான் எடுத்து வைத்திருக்கிறாள்... அப்படியே ஏதாவது மறந்து வைத்து விட்டிருந்தாலும்... நம்ம வீட்டில்தானே இருக்கப்போகிறது.. நாம் போய்க் கொடுத்துக் கொள்ளலாம்..." என்று சுந்தரி குரல் கொடுத்தாள்...

37

சௌதாமினியின் புருவங்கள் உயர்ந்தன.... மருமகளை யோசனையுடன் பார்த்தாள்... நாத்தனாரின் பார்வையைக் கண்ட சுந்தரி... ஒரு பெருமூச்சுடன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டாள்...

"என்ன அண்ணி.."

"உன்னிடம் சொல்வதற்கு என்ன சௌதா... உமா முன்போல் இல்லை... எதையோ பறிகொடுத்தவள் போல் இப்படி ஆகிவிட்டாள்..."

"என்ன அண்ணி சொல்கிறீங்க....?"

"அவள் அதிகம் பேச மாட்டாள்..."

"அதுதான் எனக்குத் தெரியுமே..."

"எதுவாக இருந்தாலும்.. மனதில் போட்டுப் பூட்டிக் கொள்வாள்..."

"அதுவும் எனக்குத் தெரியுமே..."

"இப்போது அவள் மனதை எந்தக் கவலை அரிக்கிறதுன்னு எனக்குத் தெரியவில்லை, சௌதா... இதுவரை அவளுக்காக யோசித்துப் பார்த்து.... பார்த்து செய்ய நான் அவள் பக்கத்தில் இருந்தேன்... இனி எப்படித்தான் வாழப் போகிறாளோ..."

சுந்தரி ஆற்றாமையுடன் புலம்ப... சௌதாமினிக்குச் 'சுருக்' கென்றது...

"என்ன அண்ணி இப்படிப் பேசுகிறீங்க...?"

"இப்படிப்பட்ட ஊமைக் குணம் கொண்ட மகளைப் பெற்ற தாய்... வேறு எப்படிப் பேசுவாள், சௌதா..."

"என்னவோ... வேற்று மனுசரின் வீட்டில் போய் உங்கள் மகள் வாழ்க்கை நடத்துவதைப் போலவே நினைத்துப் பேசுகிறீங்களே... அது என் வீடு என்பது உங்களுக்கு மறந்து விட்டதா...? உங்கள் இடத்தில் நான் இருந்து உமாவைக் கவனித்துக் கொள்ள மாட்டேனா.. என் அண்ணன் மகளை இப்படியே மனதிற்குள் போட்டுப் புழுங்கிக் கொண்டிருக்க நான் விட மாட்டேன் அண்ணி.... என்னை நம்புங்கள்...."

"என்னவோ சௌதா... நீ பேசுவதைக் கேட்கும் போது எனக்கு ஆறுதலாகத்தான் இருக்கிறது..."

"அந்த ஆறுதல் என்றைக்குமே நிலைக்கும் அண்ணி...."

"உன்னிடம் சொல்வதற்கு என்ன சௌதா... நீ என்னவோ... நம் இரண்டு குடும்பங்களின் ஒற்றுமைக்காகவும்... உன் அண்ணன் மகளை வெளியே கல்யாணம் பண்ணிக் கொடுக்க விடக்கூடாது என்பதற்காகவும் தான் பெண்ணை விட்டுக் கொடுக்காமல்... போராடி.. உன் மருமகளாக்கிக் கொண்டாய்...."

"ஒரு கை தட்டினால் சத்தம் வருமா அண்ணி... இரண்டு கைகளும் ஒன்று சேர வேண்டுமே..

நான் மட்டுமா.. நம் குடும்பத்தை ஒன்று சேர்க்கப்பாடுபட்டேன்...? நீங்களும்தானே...."

"இல்லை சௌதா... உன்னைப் போல் எனக்குப் பரந்த மனதில்லை... நான் சுயநலக்காரி..."

"அண்ணி...?"

"ஆமாம் சௌதா... நான் உன்னிடம் சிவா... உமாவின் கல்யாணத்தை ஆதரித்துப் பேசியது... நம் குடும்பம் ஒன்று

சேர வேண்டும் என்பதற்காக இல்லை... சிவாவும்.. உமாவும் ஒன்று சேர வேண்டும் என்பதற்காக..."

"அண்ணி..."

"உனக்குத் தெரியாதது இல்லை சௌதா... உன் அண்ணனின் கோபத்திற்கு முன்னால்.. என்னால்... குடும்ப ஒற்றுமையைப் பற்றியெல்லாம் பேசியிருக்க முடியாது..."

"அது தெரிந்த விசயம்தானே அண்ணி.. நான் தூது விட்டபோதே.. அண்ணன் என்னைத் தூக்கியெறிந்து விட்டவர்தானே..."

"சௌதா... நடந்ததையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதே.. உமா பாவம்... ஏற்கெனவே நொந்து போயிருக்கிறாள்... நீ அவளுக்குத் தாயாய் இருப்பாய் என்ற நம்பிக்கையில்தான் நான் இதையெல்லாம் உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்..."

"அந்தக் கவலையே உங்களக்கு வேண்டாம் அண்ணி... உமா என் மருமகள் இல்லை... மகள்..."

"எனக்கு இது போதும் சௌதா... உன் அண்ணனின் கோபத்திற்குப் பயந்து நான் வாய் மூடிக் கொண்டேன்.. உன் அண்ணன் வெளியிடத்தில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்..."

"ம்ம்ம்..."

"சௌதா.. இதைச் சொல்லும் போதே எனக்கு நெஞ்சம் பதறுகிறது..."

"ஏன் அண்ணி...?"

"முதல் முறை பெண் பார்கக மாப்பிள்ளை வீட்டார் வந்தபோது நம் உமா.. கொதிக்கிற பாலைத் தூக்கிக் காலில் ஊற்றிக் கொண்டு விட்டாள்..."

"அண்ணி..."

சௌதாமினி விழி விரிய அதிர்ச்சியுடன் நின்று விட்டாள்.. சுந்தரியின் கண்கள் கலங்கியிருந்தன..

சௌதாமினிக்கு இது புதிய செய்தி.. இத்தனை நாள்களாக... பெரியவர்களின் மனதிற்கேற்ப... உமா... சிவாவிற்குக் கழுத்தை நீட்டியிருக்கிறாள் என்றே அவள் நினைத்திருந்தாள்....

சிவாதான் உமாவின் மீது காதல் கொண்டு... அவளை மணக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்து... இரண்டு குடும்பங்களையும் ஒன்று சேர்த்து.. அவள் கழுத்தில் தாலியைக் கட்டியிருக்கிறான் என்றே அவள் நினைத்திருந்தாள்...

இன்றோ... அந்த நினைவிற்கு மாறாக... உமாவின் ஆவேசக் காதலைப் பற்றி.... சௌதாமினி அறிந்து கொள்ள வேண்டி வந்து விட்டது... காதலுக்காகத் தன்னையே ரணப்படுத்திக் கொண்ட உமாவின் இந்த இன்னொரு முகத்தைப் பற்றி அவள் நினைத்துக் கூடப் பார்த்தது இல்லை...

"அவளுக்குக் கால் கொப்புளித்து விட்டது.. டாக்டரிடம் ஓடினோம்... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க.. அபசகுனம்ன்னு நினைத்துப் பின் வாங்கிட்டாங்க... உமாவின் கால் ரணம் ஆறி அவள் பழையபடி எழுந்து நடமாட.. ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது, சௌதா..."

"கொடுமை..."

"கொடுமைதான்... அப்போதே என் மனதில் பயம் ஆரம்பித்து விட்டது... உன் அண்ணன் இரண்டாவது தடவையாக மாப்பிள்ளை வீட்டாரை அழைத்தார்... இந்தமுறை உமா.. குத்து விளக்கின் திரியில் தன் சேலை முந்தானையைப் பற்ற வைத்துக் கொண்டாள்..."

"ஐயோ..."

சௌதாமினி... வாய் பொத்திக் கூவினாள்... சுந்தரி விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்...

"பழைய கதை திரும்பவும் தொடர்ந்தது... உமாவை ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனோம்... மாப்பிள்ளை

வீட்டுக்காரங்க... அவங்க வீட்டிற்குத் திரும்பிப் போனாங்க... ஆனால் அடுத்தடுத்துப் பெண் பார்க்க யாரையும் நான் வரவிடவில்லை...."

"ஏன்..." என்று சௌதாமினி கேட்கவில்லை... அவளுக்குத்தான் காரணம் தெரியுமே.... எனவே மௌனமாகத் தன் அண்ணன் மனைவியின் முகத்தைப் பார்த்தாள்...

"எனக்கு உமாவின் மனதில் யாரோ இருப்பது தெரிந்து விட்டது, சௌதா... அந்த யாரோ ஒருவனுக்காக... தன் உயிரைப் பணையம் வைக்கவும் உமா தயாராக இருந்ததையும் புரிந்து கொண்டு விட்டேன்... அந்த யாரோ ஒருவன் 'யார்' என்றுதான் எனக்குத் தெரியவில்லை..."

"உமாவிடம் கேட்டீர்களா...?"

"கேட்டால் சொல்லி விட்டு மறு வேலைதான் பார்ப்பாள் அவள்.. உன் மருமகளின் குணம் பற்றி உனக்குத் தெரியாதா...? அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தையைப் பிடுங்க... ஒரு நாள் ஆகுமே..."

"அதைச் சொல்லுங்க..."

"அன்றைக்குக் கோவிலுக்கு நீ சிவாவுடன் வந்தாயே... நினைவிருக்கிறதா, சௌதா..."

"மறக்குமா, அண்ணி..."

"அன்றைக்குச் சிவாவைக் கண்டதும் உமாவின் கண்களில் தெரிந்த ஒளியும்... அவள் முகம் மலர்ந்த விதமும்... அவளை எனக்குக் காட்டிக் கொடுத்து விட்டது... உமாவின் மனதில் இருப்பது சிவாதான் என்பதைத் தெரிந்து கொண்டதும்தான் நான் உன்னிடம் பேச்சையே ஆரம்பித்தேன்..."

"நமக்குள் என்ன ஒரு ஒற்றுமை பார்த்தீங்களா..."

"எதைச் சொல்கிறாய்...?"

"நானும் சிவாவின் மனதில் உமாவின் மேலிருந்த காதலைத் தெரிந்து கொண்டுதான்.. உங்களைப் பார்க்க அன்று கோவிலுக்கு வந்தோன்..."

"சிவா உமாவைக் காதலித்தாரா...?"

"ஆமாம் அண்ணி.. அவன்தான் என்னிடமும்.. அவனுடைய அப்பாவிடமும் சண்டை போட்டான்.. கட்டினால் உமாவைத்தான் கட்டுவேன்னு ஒற்றைக்காலில் நின்றான்... அவனுக்காகத்தான்.. அன்றைக்கு நீங்கள் அந்தக் கோவிலுக்கு வருவீங்கன்னு தெரிந்து வைத்துக் கொண்டு அங்கே வந்தேன்... இல்லாவிட்டால்.. எங்கள் ஏரியாவில் இருக்கும் கோவிலை விட்டு.. அங்கே சாமி கும்பிட நான் வருவேனா...?"

சுந்தரி.. கைவேலையை விட்டு விட்டு... சௌதாமினியின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்... பிள்ளைகளுக்காகத் தாங்கள் பாடுபட்டதை... அந்த இரண்டு அன்னைகளும் பகிர்ந்து கொண்டு... ஒருவரையொருவர்... புரிந்தும் கொண்டனர்...

39

"சிவாவிற்கு உமாவின் மேல் அளவு கடந்த காதல் அண்ணி.. என்ன ஒன்று.. உமா.. தன் மனதிலிருப்பதை வாய் விட்டுச் சொல்ல மாட்டாள்... ஆனால் சிவா.. பளிச்சென்று தன் மனதைத் திறந்து உள்ளது உள்ளபடி பேசிவிடுவான்.. அது ஒன்றுதான் இவர்கள் இருவருக்கும் உள்ள வித்தியாசம்..."

"இப்போது மனதிலிருப்பதை உமா வெளியில் சொன்னால் எனக்கு நிம்மதியாக இருக்கும்... அவள்தான் மனதிலிப்பதை வெளியில் சொல்லாமல்.. மனதில்

பூட்டி வைத்துக் கொண்டு தனக்குள்ளேயே மறுகிக் கொண்டிருக்கிறாளே..."

"கவலைப் படாதீங்க அண்ணி... உமாவை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"நீ பார்த்துக் கொண்டால் மட்டும் போதுமா சௌதா..."

"சிவா... உமாவைக் காதலித்துக் கைப்பிடித்தவன் அண்ணி... உமாவிற்காக... அவனுடைய அப்பாவின் பேச்சையும் மீறி இந்த வீட்டு வாசல்படியை மிதித்தவன்.. இரண்டு குடும்பத்தையும் ஒன்று சேர்க்க அவன் படாதபாடு பட்டது.. பாசத்திற்காக இல்லை... உமாவின் மேல் அவன் வைத்திருந்த காதலுக்காக..."

"அது எனக்கே இப்போதுதான் தெரியும்.. உமாவிற்குத் தெரியுமா...?"

"இது என்ன அண்ணி... சின்னப்புள்ளைத்தனமா... இப்படி ஒரு கேள்வியைக் கேட்கறீங்க... கல்யாணம் பண்ணி இரண்டு வருசம் சேர்ந்து குடித்தனம் பண்ணி ஒரு குழந்தைக்கு தாய்... தகப்பனாவும் ஆகிட்டாங்க.. இதுவரைக்குமா சிவாவின் காதல் உமாவிற்குத் தெரியாமல் இருக்கும்...?"

"இல்லை சௌதா.. தெரிந்தது போல்... எனக்குத் தெரியவில்லை..."

"நீங்க சும்மா... மனதைப் போட்டு உழப்பிக்காதீங்க அண்ணி.. எதை வைத்து இப்படிச் சந்தேகப்படறீங்க..."

"இவள் ஏன் இப்படி சோர்வாக இருக்கிறாள்...?"

"சிவா பக்கத்தில் இல்லைங்கிற ஏக்கமாக இருக்கும்..."

"சிவாவும்தான் ஏன் பக்கத்தில் இருக்காமல்... மும்வைக்கு ஓட வேண்டும்...?"

"உமா எங்கள் வீட்டில் இல்லாமல்... பிரசவத்திற்கு இங்கு வந்து விட்டாளே... அதனால் இருக்கும்..."

"இதெல்லாம் உன் அனுமானம்தான், சௌதா... நிச்சயமாய் உன்னால் சொல்ல முடியுமா...?"

"நீங்கள் நினைப்பது போல் இல்லை... அதை மட்டும் என்னால் நிச்சயமாய்ச் சொல்ல முடியும்..."

சுந்தரியின் மனம் சமாதானமடையவில்லை.. குழந்தைக்குப் பெயர் வைக்கும்போது வந்தவன்... அதற்குப் பின்னால் உமாவையும் குழந்தையையும் பார்க்க வரவேயில்லை... அதுதான் சுந்தரிக்குக் கவலையாக இருந்தது...

சௌதாமினியின் கூற்றுப் பிரகாரம் அவன்... உமாவைத் தீவிரமாகக் காதலித்திருந்தால்.. பிரிவில் உமா வாடுவது போல அவனும் வாடியிருக்க மாட்டானா...? மாறாக... அவன்தான் மும்பைக்கு போயிருக்கிறான்... அவன் நினைத்திருந்தால் மும்பை டெபுடேசனைத் தவிர்த்திருக்க முடியாதா...?

நல்ல நேரத்தில் உமாவைக் கொண்டு போய்ச் சிவாவின் வீட்டில் விட்டுவிட்டு... திரும்பினார்கள்...

உமா இல்லாத வீடு வெறிச்சென்று இருக்க, சுந்தரி கண் கலங்கினாள்...

"குட்டிப் பையன் சும்மா அழுது கொண்டே இருப்பான்... இவள் எப்படித்தான் தனியாகச் சமாளிக்கப் போகிறாளோ.. இங்கேயானால்.. ஆள்மாற்றி.. ஆள் தூக்கி வைத்துக் கொண்டே இருப்போம்..."

"அங்கே சௌதாமினி இருப்பாள்.. அவள் ஒருத்தி போதாதா... நீயேன் கண் கலங்குகிறாய்...?"

"இல்லை அத்தை.. இவளே பச்சைப் புள்ளை.. இவள் முகத்தைப் பார்த்து.. நான்தான் இவளுக்கு என்ன வேணும்னு கண்டுபிடித்துச் செய்வேன்.. இப்ப.. இவளே கையில் ஒரு பிள்ளையை வைத்துக் கொண்டிருக்கிறாள். தனக்கே என்ன வேண்டும்ன்னு வாய்விட்டுக் கேட்காதவள்.. பிள்ளையை எப்படிப் பார்த்துக் கொள்வாள்...?"

"இந்தா... சுந்தரி.. நீ முதலில் புலம்புவதை நிறுத்து உமாவின் குழந்தைக்கு உமா மட்டும்தான் இருக்கிறாளா...? பிள்ளையைப் பெற்ற தகப்பன்... சிவா இருக்கிறான்... பேரனைக் கொஞ்சச் சௌதாமினியும்.. அவளுடைய வீட்டுக்காரரும் இருக்கிறாங்க.. என்னவோ அவளைத்

தனியாக விட்டுவிட்டு வந்திருப்பது போல் இப்படி அலை பாய்கிறாயே..."

சுந்தரி கண்களில் நீர் மல்க.. டிவி திரையை உயிர்ப்பித்தாள்.. டிவியில் பாடல் காட்சி தோன்றியது...

"சிப்பியிலே முத்து... அது

சிப்பிக்கென்ன சொந்தம்..

தென்னையிலே இளநீர்... அது

தென்னைக்கென்ன சொந்தம்...

ஓங்கி வரும் முல்லை... அது

ஒரு கொடியின் பிள்ளை...

எடுத்துக் கொண்டு போனால்.. அது

கொடிக்கு என்ன சொந்தம்..."

சுந்தரி வாய்விட்டு அழவே ஆரம்பித்துவிட... மற்றவர்கள் படாதபாடுபட்டு அவளைத் தேற்றினார்கள்...

40

சௌதாமினியின் செல் போன் ஒலித்தது.. எடுத்துப் பேசுமுன் நம்பரைப் பார்த்தாள்.. சிவா அழைத்துக் கொண்டிருந்தான்... சௌதாமினியின் புருவங்களின் மத்தியில் முடிச்சு விழுந்தது....

'அவர் செல்லிற்கு ரிங் போய் கட்டாகிறது, அத்தை... பேசவே முடியவில்லை....'

சற்று முன்னால் உமா சோர்ந்த முகத்துடன் கூறியது அவளது நினைவிற்கு வந்தது...

சுந்தரியின் பயத்தில் உண்மை உள்ளதோ... யோசனையுடன் போனில் பேச ஆரம்பித்தாள்...

"சிவா..."

"அம்மா... நான் நாளைக்குச் சென்னை வருகிறேன்..."

"அப்பாடி... ஒருவழியாய் டெபுடேசன் முடிந்ததே... வா... வா.. திரும்பவும் இதுபோல் மும்பைக்குப் பறக்க நினைக்காதே..."

"அம்மா..."

"என்னடா..."

"கனடாவிலிருக்கும் எங்கள் கம்பெனியின் ஹெட் ஆபிஸில் வேலை செய்ய என்னை செலக்ட் பண்ணியிருக்கிறாங்கம்மா... நான் வந்தவுடன் கனடா கிளம்ப வேண்டும்..."

சௌதாமினி பேச்சிழந்தாள்... அவள் மனதில் பிரிவின் துயரம் தோன்றியது... தன்னைத் தேற்றிக் கொண்டு மேலே பேசினாள்...

"அப்படியா சிவா.. நீ வெளிநாட்டிற்கு வேலை பார்க்கப் போவது எங்களுக்கு சந்தோசமான விசயம்தானே... ஆனால் உமாவிற்கு விசா... பாஸ்போட் எடுக்க வேண்டுமே. கைக்குழந்தையோடு.. அவள் தனியாய் வெளிநாட்டில் சமாளித்துக் கொள்வாளா...? அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது...."

மறு முனையில் ஒரு நொடி அமைதி நிலவியது.. சௌதாமினியின் முகத்தில் சந்தேகத்தின் நிழல் படிந்தது..

சிவா பெருமூச்சு விடுவது சௌதாமினிக்கு நன்றாகவே கேட்டது..

"அம்மா..."

"சொல்லு, சிவா..."

"நான் மட்டும்தான் கனடா போகிறேன்... உமா என்னுடன் வரவேண்டியதில்லை... உமாவும்.. குட்டியும் உங்களுடன் தான் இருப்பார்கள்... அதனால் நீங்கள் வேறு எதைப் பற்றியும் யோசிக்க வேண்டாம்..."

சௌதாமினிக்குத் தெளிவாகச் சிவாவின் மனநிலை தெரிந்து விட்டது.. அவள் கோபத்துடன் பல்லைக்

கடிந்தாள்...

"சிவா.. உன் பெண்டாட்டி பிள்ளையைப் பிரிந்து.. நீ வெளிநாட்டிற்குப் போய் ஒன்றும் சம்பாதித்து எங்களுக்குக் கொட்ட வேண்டாம்.. பேசாமல் இந்தியாவிலேயே.. அதுவும் சென்னையிலேயே வேலை பார்... அதுவே போதும்..."

"குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டச் சொல்கிறீங்களா...?"

"அந்த குண்டு சட்டிக்குள்தானே.. உன் பெண்டாட்டியும்... பிள்ளையும் இருக்கிறாங்க.. நீ அவங்களைப் பிரிந்து ஒன்றும் கிழிக்க வேண்டாம்.."

"ஏன்..."

"ஏன்னா... உமா உன் பிரிவைத் தாங்கிக் கொள்ள மாட்டாள்..." மறுமுனை மீண்டும் அமைதியாகியது... மீண்டும் சிவா பெருமூச்சு விடுவதைச் சௌதாமினி உணர்ந்தாள்....

"அவளுக்கு நான் அவளருகில் இருந்தாலும்... இல்லாவிட்டாலும் கவலையில்லை அம்மா.. அவள் குடும்பம் அவளுடன் இருக்க வேண்டும்... அவ்வளவுதான்..."

"என்னடா உளறுகிறாய்...?"

"இது உளறல் இல்லை அம்மா.. உண்மை.. அவளுடைய குடும்பத்தை ஒன்று சேர்க்க என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட தியாகி இல்லையா அவள்..."

"இது என்னடா புதுக் கதையாய் இருக்கு...?"

"இது அவளே சொல்லிய கதை..."

"ஆமாம்டா.. அவள் பெரிய அறிவாளி.. சொன்னாளாம்.. இவன் கேட்டுக் கொண்டானாம்.. டேய் சிவா.. நீ சொன்னாலும்.. சொல்லாவிட்டாலும்... உமா பெரிய தியாகிதான்டா... உன் மேல் அவள் வைத்திருந்த காதலுக்காக... தன் உயிரைத் தியாகம் பண்ணத் துணிந்தவள் அவள்.. அவளைப் பற்றியும்.. அவள் உன்மேல்

வைத்திருக்கும் காதலைப் பற்றியும்.. உனக்கு என்னடா தெரியும்...?"

"அம்மா நீங்க சொல்லுவதுதான் எனக்கு புதுக்கதையாய் இருக்கிறது..."

"இதுதான் நீ அவலோடு குடும்பம் நடத்திய லட்சணமா...? ஏன்டா.. உன் பெண்டாட்டி உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாதோ என்ற பயத்தில் அவள் வீட்டில் போராடியது உனக்குத் தெரியுமா....?

"அது.. நம் குடும்பங்களுக்கு இடையே இருந்த பகையை நீக்கிப் பெரியவர்களை ஒன்று சேர்த்து வைப்பதற்காகத்தானே..."

"உன் தலை..."

சௌதாமினி விலாவாரியாய் உமாவின் காதலை எடுத்தக் கூறினாள்.. சிவா.. 'ம்' கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் சௌதாமினி வினவினாள்...

"இப்போது சொல்லுடா.. நீ கனடா போகப் போகிறாயா...?"

"அது நானாகக் கேட்டுவாங்கிக் கொண்டதுதான்ம்மா... இப்போது வேண்டாமென்று சொல்லிவிட்டு... இரண்டு வருடம் கழித்துப் போய்க் கொண்டால் போயிற்று..."

"எப்போது சென்னைக்கு வருகிறாய்...? நாளைக்குத் தானே..."

"யார் சொன்னது. நான் ப்ளைட்டைப் பிடிக்கக் கிளம்பிக் கொண்டு இருக்கிறேனாக்கும்..."

"இனி மும்பைக்கு டெபுடேசன் போக மாட்டாயே..."

"எனக்கென்ன தலையெழுத்தா...? சென்னையை விட்டு நகர மாட்டேன்..."

"குட்.. இதைப்போல... உன் மனதில் இருக்கும் காதலையும் உன் பெண்டாட்டியிடம் உடைத்துச் சொல்லிவிடு..." சௌதாமினியின் குரலில் கட்டளை இருந்தது...

41

"சிவா.. மூடிவைக்க வேண்டியது காதலை இல்லை.. அதை மறைத்து வைத்தால் இறுதிவரை துன்பம்தான்... நீ உமாவைப் பற்றித் தவறாகக் கணித்து வைத்திருந்தாய்... அவளுடைய நினைவெல்லாம் நீதான் இருந்திருக்கிறாய்.. இது உனக்குத் தெரிந்ததா...?"

"என் நினைவிலும் அவள் மட்டும்தான்ம்மா..."

"அதை அவளிடம் நீ சொன்னாயா...? சொல்லிவிடு..."

சௌதாமினி போனை அணைத்து விட்டு.. அறையை விட்டு வெளியே வந்தாள்.. உமா.. மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு.. ஏதோ சிந்தனையாய் இருந்தாள்..

"சிட்டுக்குருவி... சிட்டுக்குருவி...

சேதி தெரியுமா....

என்னை விட்டுப் பிரிந்து....

போன கணவன்... வீடு திரும்பலை...."

டிவியில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க.. அதில் கவனமானாள்.. சௌதாமினி டிவியை அணைத்தாள்...

"என்ன அத்தை..."

"ஆதித்யன் பசியில் அழப் போகிறான்.. அவனுக்குப் பால் பவுடரை ஆற்றி வைத்துக் கொள்..."

"ம்ம்...."

"உமா..."

"என்ன அத்தை..."

"ஏன் டல்லாக இருக்கிற...?"

"ஒன்றுமில்லையே... நான் நன்றாகத்தானே இருக்கிறேன்..."

"அப்படி உன் வாய்தான் சொல்கிறது... முகம் சொல்லவில்லையே.. தலையை ஒழுங்காய் வாரிப்பின்னிக் கொள்ளாமல்.. இப்படி ஏனோ.. தானோவென்றா இருப்பது..."

"யாருக்காகத் தலைவாரிப் பின்னலிட்டுக் கொள்ள அத்தை..."

'யாருக்காக..?' இது ஒன்று பெண்களிடம் இருக்கும் குணம் என்று சிரிப்பு வந்தது சௌதாமினிக்கு.. கண்ணுக்கு அழகாக இருக்க வேண்டுமென்றால்... காதலனின் கண்ணுக்கு அழகாக இருக்க வேண்டும்மென்று ஏன்... இந்தப் பெண்களாக நினைத்துக் கொள்கிறார்கள் என்று இருந்தது அவளுக்கு...

அவள் பேசாமல் உமாவின் போக்கிலெயே விட்டுவிட்டாள்... மதியம் சாப்பிட்டதாய்ப் பெயர் பண்ணிவிட்டு.. குழந்தையுடன் மாடிப்படி ஏறிக் கொண்டிருந்தவளிடம் சிவா வரப்போகும் செய்தியைச் சொல்லாமா என்று ஒரு கணம் யோசித்தாள் சௌதாமினி...

பின்னர்.. தானாகத் தெரிந்து கொள்ளட்டும் என்று விட்டு விட்டாள்... தன்னிடம் கணவன் சொல்லவில்லையே என்று அவள் நினைத்து ஏக்கப்பட்டு விடலாம்...

மாலையில்.. காபி போடச் சௌதாமினி சமையலறைக்குள் நுழையும்போது.. அழைப்பு மணி ஒலித்தது... கதவைத் திறந்தாள்... சிவா... நான்கைந்து பெட்டிகளுடன் நின்றிருந்தான்...

"வந்துவிட்டாயா சிவா.. வா.. வா...."

"உமா எங்கேம்மா..?"

"ஏண்டா.. கண்ணுக்கு முன்னால் நிற்கும் தாய்

உன் கண்ணுக்குத் தெரிய வில்லையாக்கும்.. பொண்டாட்டியைத் தேடுகிறாயே..."

"தாய்க்குப் பின் தாரம்தானேம்மா..."

"பிழைத்துக் கொள்வாய்... மாடியிலிருக்கிறாள். போ..."

"எப்படி இருக்கிறாள்...?"

"அழுவாச்சி பாட்டாய்க் கேட்டுக் கொண்டு... அழுமூஞ்சியாய் இருக்கிறாள்... நீ போய்ச் சிரிக்க வைக்க முடியுமான்னு பார்..."

சிவா... மாடிப் படிகளில் தாவி ஏறினான்.. மகனின் மனதில் இருந்த குதூகலத்தை உணர்ந்தவளாய்.. சௌதாமினி புன்னகையுடன் சமையலறைக்குள் சென்றாள்...

சிவா மாடியறைக்குள் நுழைந்த போது... உமா கட்டிலில் அமர்ந்து முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தாள்.. தொட்டிலில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தான்...

தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டு.. நிராதரவாய் அவள் அமர்ந்திருந்த தோற்றத்தைக் கண்டு சிவாவின் மனம் வலித்தது.. இந்த நிலைக்குத்

தான்தான் காரணம் என்ற குற்ற உணர்ச்சி அவன் மனதை வாட்டியது...

மெல்ல.. அவளருகில் சென்று தோளைத் தொட்டாள்... கைகளின் ஸ்பரிச உணர்வில் அவளது உடலில் அதிர்வு ஓடியதை அவனால் உணர்ந்து

கொள்ள முடிந்தது... அவனது தொடுகையை உணர்ந்த ஆனந்தத்துடன் அவள் நிமிர்ந்தாள்...

"அத்தான்..."

அவளது ஆவல் ததும்பிய அழைப்பையும்.. முகத்தையும் பார்த்தவன் அவளருகே அமர்ந்து கொள்ள.. அவன் மடியில் சிறு குழந்தையாய்ச் சுருண்டு படுத்து... அவனது இடுப்பைக் கரங்களால் வளைத்துக் கொண்டாள் அவள்... அவளது கண்ணீர் மடி நனைக்க அவன்.. அவளது தலையைக் கோதிக் கொடுத்தான்...

"ச்சு... அழக்கூடாது, கண்ணம்மா... நான்தான் வந்து விட்டேனே... இனி உனை விட்டுப் பிரிய மாட்டேன்..."

"இதுவரை பிரிந்திருந்தீங்களே.. நான் பயந்து விட்டேன், தெரியுமா...? உங்களுக்கு என் மேல் காதலில்லாமல் இருக்கலாம் ஆனால்... நான் உங்களை உயிருக்குயிராய்க் காதலிக்கிறேன்.. என்னைப் பிடிக்காவிட்டாலும்... என்னைப் பிரிந்து போக மட்டும் நினைக்காதீங்க, அத்தான்..."

"போடி மக்கு..." அவன் ஆசையுடன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.. அவள் விழி விரிய அவனை நோக்கினாள்...

"உன்னைப் பிடிக்காமல் வேறு யாரைப்பிடிக்கும்...? உன்னை மட்டும்தான்டி எனக்கு இந்த உலகத்திலேயே பிடிக்கும்.. உன் மேல் வைத்த காதலுக்காக நான் பட்ட பாடுதான் எத்தனை...!"

"நானும் தான்..."

"தெரியும்.. அம்மா சொன்னாங்க.. ஆனால் நீ சொல்லவில்லை... இனிமேல் இப்படி இருக்காதே உமா... எதுவாக இருந்தாலும் என்னிடம் வெளிப்படையாய்ப் பேசு.. நான் உன்னுடையவன்..."

அவள் தன்னுடையவள் என்ற நிறைவுடன் அவன் அவளை அணைத்துக் கொண்டான்.. இனி உமாவின் மனம் பாடும் ராகம்.. ஊமையின் ராகமாக இருந்துவிடாது... அதை அவனது மனம் அறிந்துவிடும்....

- முற்றும் -